167

167

PROVED BY THE TEXT-BOOK COMMITTEE.

கோகலே
ஏழாம் வாசகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-OCT 1933
MADRAS

பதிப்பாசிரியர்:
திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L.,
அட்வகேட், திருநெல்வேலி.

V. S. வெங்கடராமன் கம்பெனி,
…ர்ஸ் : : கும்பகோணம்.

[விலை அணா 8

O-, 62
N33
77522

கோகலே
ஏழாம் வாசகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-OCT 1933
MADRAS

பதிப்பாசிரியர்:
திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L.,
அட்வகேட், திருநெல்வேலி.

V. S. வெங்கடராமன் கம்பெனி,
பப்ளிஷர்ஸ் :: கும்பகோணம்.

பதிவு செய்தது] [விலை அணா 8

72522

DEDICATED TO THE CHILDREN of the MOTHERLAND

11.94
494.81186

THE ROYAL PRINTING WORKS
MOUNT ROAD : : MADRAS.

OF THE REGISTRAR
9-OCT 1933
MADRAS

முன்னுரை

சென்னைச் சட்டக் கலாசாலைப் போதகரும், கல்
கத்தா சர்வகலா சாலையில் தாகூர் சட்ட விரிவுரையாளரும்,
அண்ணாமலைச் சர்வகலா சங்கத்தின் தமிழ் இலாகாத் தலை
வருமாக விருந்து தற்பொழுது தமிழ் மொழி ஆராய்ச்சி
யில் வல்லுநராகவும், “தமிழ் இலக்கிய வரலாறு” முதலிய
பன்னூல் ஆசிரியராகவும் இலங்குஞ் செந்நெறியாளராகிய
திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L., அவர்கள்
தம் மனங்கனிந்த உதவியால் இந்தக் கோகலே ஏழாம்
வாசகம் தொகுக்கப்பட் டிருக்கிறது. செந்தமிழ் வளர்ச்சிக்கு
நற்றுணை புரிவதில் தமது வாணாளை உரிமைப்படுத்தித்
தமிழ் உலகத்திற்கே பேருதவி செய்துவரும் இப்பெரியா
ருக்கு யாம் முதன் முதலில் எமது மனமார்ந்த நன்றி
செலுத்துங் கடப்பா டுடையேம்.

தமிழகப் பற்றையும், தாய் மொழிப் பற்றையும் நம்
நாட்டுச் சிறுவரிடம் வளர்க்கும் வண்ணம் பொருட் சுவை,
சொற் சுவை ததும்பும் இவ்வாசகம், புதிய போதனா முறை
களைத் தழுவித் தெளிவான செந்தமிழ் நடையில் எழுதப்
பட்டிருக்கிறது. இளைஞருக்குத் தமிழ்க் கல்வி, சீரிய ஒழுக்
கம், உலகறிவு முதலியவற்றை ஊட்டக் கூடியனவும், தற்
காலத் தன்மைக் கேற்றனவும், மாணாக்கரது மனப்பான்
மைக்குப் பொருந்தியனவுமாகிப் பழையனவும் புதியனவு
மான பாட விஷயங்களே இதில் தொகுக்கப்பட்டுள.
பண்டைத் தமிழரது புலமை, நீதி, ஒழுக்கம், சிறப்பு,
வீரம் முதலிய நற்குணங்களைப் பற்றினவும், தற்காலத்தவ
ரது உயர் குணம், அருஞ் செயல் இவை பற்றினவுமான
வரலாறுகளும், இனிய கதைகளும், நவீன கலைகளைப்பற்
றிய கட்டுரைகளும் இப்புத்தகத்தில் திகழ்ந்து விளங்கு
கின்றன. பக்தி, கருணை, வீரம், நகை முதலிய ஒன்பான்

வகைச் சுவைகளை விளக்கும் இயல், இசை, நாடகமென்னும் முத்தமிழ்ப் பாடங்களும் இதன்கண் காணப் பெறும்.

ஒவ்வொரு பாடமும், குறிப்பிட்ட சில அரும்பதங்களைக் கற்பிக்கும் நோக்குடையது. தமிழ் வளம் உணர்த்தும் பொருட்டுத் தனித் தமிழ்ச் சொற்களே பெரும்பான்மை இப்புத்தகத்தில் விரவி வருவது ஒரு சிறப்பாகும். இலக்கணப் பயிற்சி, வியாசப் பயிற்சி, சொற்பொழிவுப் பயிற்சி இவைகட்கான பாடங்களும் கட்டுரைகளுங் இதில் சேர்க்கப்பட்டுள.

இவ்வாசகத்தைப் பதிப்பிக்கப் பல விதங்களிலும் உதவி புரிந்துள்ள தமிழ்ப் பண்டிதர்கள் ஸ்ரீமான் பி. ஆர். இராஜ சூடாமணி, கும்பகோணம் காலேஜ் உயர் திருவாளர் அ. கந்தசாமிப் பிள்ளை இவர்களுக்கும், இதுவரையில் எமது பாட புத்தகங்களை ஏற்று ஆதரித்து வந்துள்ள கல்வி அதிகாரிகள், கலாசாலைத் தலைவர்கள், ஆசிரியர்கள் முதலியவர்களுக்கும் யாம் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

புலவர் கோமான் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியா ரியற்றிய "தமிழ் மொழி" என்னும் இன்னிசைப் பாவை இவ்வாசகத்தில் சேர்த்துக்கொள்ள அனுமதி வழங்கிய பாரதி பிரசுராலயத்தார்க்கும், "சிற்றேடை" என்னும் திருப்பாட்டை இதில் அச்சிட அனுமதி யளித்த "கலைமகள்" பத்திராதிபர், ஸ்ரீமான் பி. என். அப்புசாமி அய்யர், B.A., B.L., அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றனம்.

இந்தக் கோகலே வாசகம் எங்கும் பரவி இனிது நிலவும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் அருள்வானாக.

V. S. வெங்கடராமன் கம்பெனி,
பப்ளிஷர்ஸ், கும்பகோணம்.

பொருளடக்கம்

பாடம்	விஷயம்	பக்கம்
1.	இறைவன் வழிபாடு	1
2.	நிலக் கடலை	4
3.	மாயப் பெட்டி	7
4.	சபரி	12
5.	கபில ரகவல்	17
6.	வில்லிபுத்தூராழ்வார்	18
7.	லாம்பர்டிய நாட்டு வீர இளைஞன்	23
8.	சொற்கள்	30
9.	தமிழ்மொழிப் பாட்டு	33
10.	மோஸஸ் முனிவர்	34
11.	புற்கள்	41
12.	தாமரை	44
13.	கன்னியா குமரி	45
14.	அகல்யா பாய்	50
15.	மிருகக் காட்சி சாலை	54
16.	திருக்குறள்	62
17.	கங்கை நதி	63
18.	சிற்ரேடை	67
19.	சியவன முனிவர்	70

பாடம்	விஷயம்	பக்கம்
20.	ஸர் சி. வி. ராமன் ...	... 74
21.	விநோதப் பாக்கள் ...	... 80
22.	பிறர்க்குதவி ...	... 81
23.	மகானாகிய சைரஸ் ...	... 85
24.	மநோ ராஜ்ஜியம் ...	... 89
25.	அரசிறை ...	... 90
26.	வீதிவிடங்கன் ...	... 94
27.	வெனிஸ் வர்த்தகன் ...	... 101
28.	ரேடியோ என்னும் ஒலி பரப்பும் பொறி	... 113

செய்யுட் பகுதி

I.	நன்னெறி ...	... 119
II.	நான்மணிக் கடிகை ...	... 124
III.	நீதி வெண்பா ...	... 125
IV.	இன்னா நாற்பது ...	... 127
V.	தனிப் பாடல்கள் ...	... 127



கன்னியா குமரி கோயிலும் ஸ்நான கட்டமும்.

[பக்கம் 46.]

கோகலே

ஏழாம் வாசகம்

———:*:———

1. இறைவன் வழிபாடு

சதிரவன் கிரணக் கையால் கடவுளைத் தொழுவான்; புட்கள்
சுதியொடும் ஆடிப்பாடித் துதிசெயும்; தருக்களெல்லாம்
பொதி அலர் தூவிப் போற்றும்; பூதம் தம் தொழில்
செய்தேத்தும்;
அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும்; அகமே நீ வாழ்த்தா
தென்னே!

—வேதநாயகம் பிள்ளை

மாணவர்களே! உங்களிற் பலர் இந்து மதத்தினர்; சிலர் முகம்மதிய மதத்தினர்; சிலர் கிறிஸ்தவ மதத்தினர்; மற்றுஞ் சிலர் ஜைனம் முதலிய வேறு மதத்தினராக இருக்கலாம். இப் பல்வேறு மதங்கள் அல்லது சமயங்களின் அடிப்படையான கொள்கைகளை ஆராயுங்கால் அவைகளெல்லாம் ஒருமைப்பட்டிருப்பதை அறியலாம்.

மேற்கூறிய எல்லா மதத்தினரும், சகல புவனங்களையும், ஜீவராசிகளையும் படைத்து, காப்பாற்றுகிறவராகிய ஒரு முழுமுதற் கடவுள் உண்டென்பதை ஒப்புக்கொள்கின்றனர். "கடவுள்" என்ற சொல், மனம், மொழி, மெய் என்பவற்றைக் கடந்தவரென்றும், கடவுதல் என்பதற்குச் செலுத்துதல் என்ற பொருள் கொள்ளின் எல்லாவற்றையும் உள் நின்று செலுத்தும் பெருமான் என்றும் பொருள்படும்.

எல்லாவற்றையும் படைத்துக் காப்பாற்றுகின்ற கடவுளே எல்லாம் அறிபவர். அவருக்கு அறிவிப்பவர் ஒருவருமில்லை. அவரே எல்லாருக்கும் அறிவை விளக்குபவர். அவர் எங்கும் நிறைந்தவர். அவருக்கு மேலானவரும் இல்லை; ஒப்பானவரும் இல்லை. அவருக்கு நாமெல்லாம் மக்கள். அவர் அளவிடப்படாத அருள் உடையவர்; குற்றமற்றவர்; எல்லையில்லாத இன்பத்தைக் கொடுப்பவர். உலகத்துக்குத் தலைவராகிய அவருடைய கட்டளைப்படி நடப்பதே அவருக்கு நாம் செய்யக்கூடிய சிறந்த வழிபாடாகும்.

இறைவனால் உண்டாக்கப்பட்ட அனைவரும் எச்சமயத்தினராயினும், எச்சாதியினராயினும், எந்நாட்டினராயினும் சகோதரர்களே. எல்லா உயிர்களுடைய உடம்புகளும் அவருக்குத் திருக்கோயிலாகும். ஆதலால் எவ்வுயிர்க்கும் இரங்கி, அவற்றைப் பாதுகாத்தல் அவருடைய கோயில் திருப்பணியாகும். தன்னுயிரைப்போல் மன்னுயிரை நேசிப்பதே அவருக் குவந்த வழி பாடாகும்.

முன்னொரு காலத்தில் ஆபு பின் ஆதம் என்னும் ஒரு முகம்மதிய மகான் இருந்தார். அவர் தன்னுயிரைப்போல் மன்னுயிரை நேசிப்பவர். ஓர் இரவு களங்கமற்ற மனத்துடன் அயர்ந்து துயிலுகையில் திடுக்கென்று விழித்தெழுந்தனர். அப்போது அவ்வறையில் அழகாய்ப் பிரகாசித்த நிலா வெளிச்சத்தில் ஒரு தேவன், பொன்னேட்டில் ஏதோ எழுதுவதைக் கண்ணுற்றார். வழக்கமாயுள்ள சாந்த குணத்தோடு அவ்வுருவத்தை நோக்கிப் பணிவுடன் வினவினர்.

ஆபு :—தேவரே! பொன்னேட்டில் குறிப்பது யாது?

தேவன் :—எழுதுவது ஈசனிடத்தில் நேசமுள்ளோர்களின் பெயர்களே.

ஆபு :—என் பெயர் உளதோ ?

தேவன் :—இல்லை, கிடையாது.

ஆபு :—நான் கனவினும் கடவுளைக் கருதாக் கசடனு யினும், தன்னுயிரைப்போல் மன்னுயிரை நேசிப்பவன் என்று எழுதிக்கொள்ளுங்கள்.

தேவனும் அவ்வாறே செய்து மறைந்தனன். மறு நாள் இரவில் அதே வேளையில் அதே உருவம் ஆபு முன் தோன்றி, இறைவனுக்குப் பிரியமுள்ளவர்களின் பெயர் களைக் காட்ட, என்ன ஆச்சரியம்! ஆபுவின் பெயர் முதலாக நின்றது.

மேலும், கடவுளுடைய நற்குணங்களை எப்பொழுதும் சிந்தித்து அவைகளில் பழகுவது மற்றொருவித வழிபா டாகும். கடவுள் பரிசுத்தமானவர்; நீதி வடிவானவர்; சத்திய சொரூபி. ஆதலால் நாமும் திரிகரண சுத்தியுட னிருக்கவேண்டும்; எப்பொழுதும் நீதி வழுவா நெறி முறையில் நிற்கவேண்டும்; சத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்.

“ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திரு நாமம்பாடி” வழிபடுதலைப் பெரியோர்கள் விதித்திருக் கின்றார்கள். நமது துன்பங்களை நீக்கிக்கொள்ளவும் மேலான பேரின்பத்தைப் பெறவும் கடவுள் வழிபாடே சிறந்த சாதன மாதலால் இப்பிறவி யெடுத்ததனாலாய பயன் இறைவன் வழிபாடென்று அறிஞர் வற்புறுத்தியுளர்.

“கற்றதனா லாய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்,”

என்றார் ஆசிரியர் திருவள்ளுவர்.

2. நிலக் கடலை

தென்னை, எள், இலுப்பை முதலிய பல தாவரங்கள் தமது தலையிலுங் கிளையிலுங் காய்க்குங் காய்களினின்று எண்ணெய் தருகின்றன. வேர்க்கடலையோ எண்ணெய் நிறைந்த மணிகளைப் பூமியினுள் மறைவாய்த் தாங்குகின்றது. இது உருளைக் கிழங்கு, கருணைக் கிழங்கு முதலிய கிழங்கினத்தைப் போல மண்ணினுள்ளே பலனைத் தந்த போதிலும், அவ்வினங்களைச் சாராது, அவரை இனத்தைச் சார்ந்ததாகும்.

நமது நாட்டில் வெகுகாலமாக விளைவிக்கப்படும் பயிர்களுள் வேர்க்கடலையும் ஒன்றாகும். நாட்டுப் புறங்களில் வேளாண்மை செய்பவர் இப்பயிரை நன்கறிவர். வேர்க்கடலைப் பயிருக்கு உகந்த நிலம் செம்மண் தரையேயாம். சிவப்பு மண் படிந்து ஈரங்காக்கும் நிலங்களும், மணற் கலப்புடைய நிலங்களும் இப்பயிருக்கேற்றனவாம். நிலம் மணற் பாங்காய் இருக்குமாயின் அதில் விழும் நீர் மண்ணில் எளிதில் சுவறி விடும். நிலத்தில் தண்ணீர் தேங்கி நிற்குமாயின் பயிர் குன்றி விதைகள் மஞ்சள் நிறம் பெறும்.

பயிருக் குகந்த நிலத்தைத் திருத்திப் பண்படுத்திக் கொள்ளவேண்டும். கரம்பு நிலத்திற்கான பண்படுத்தலே இப்பயிருக்கும் போதுமானது. வேனிற் காலத்திற்குப் பின் வைகாசி, ஆனி மாதங்களிற் பெய்யும் மழையோடு நிலத்தை உழுதடித்துப் பின்னுமோர்தரம் உழுதுகொள்ள வேண்டும். நில முலர்ந்து துகளாயிருக்கவேண்டுமாதலால் முற்கூறிய மாதங்களில் மழையில்லாத போழ்தும் உழுதுகொள்ளலாம். இப்பயிருக்கு நான்குழவே போதுமானது. இஃது பசளைச்

செழிப்பற்ற வெற்று நிலத்திலும் பயன் தருவது. விளைவு மிக வேண்டுமாயின் நிலத்திற்கு எருவிடல் வேண்டும். ஆயினும் இதற்கு விலையேறிய உரம் தேவையில்லை ; குப்பை கூளங்களும், சாம்பருமே, போதுமானவை. பயறு முதலிய சிறு தானியங்களைப்போலவே நிலக் கடலையும் மண்ணில் உப்புக்காற்றைப் படியச்செய்து அதனைத் தனக்குள்ளிழுத்துக் கொள்ளும் இயல்புடையது. இவ்வுப்புக் காற்று நிலக் கடலையின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது.

நிலத்தைப் பண்படுத்திக்கொண்ட பின்னர் விதைக்க வேண்டும். விதைப்பதற்கு ஐந்தாறு நாட்களுக்குமுன் காயின் தோட்டை நீக்கி மணிகளைச் சேகரித்துக் கொள்வது வழக்கம். ஓர் ஏகரா பூமிக்கு எழுபத்திரண்டு இராத்தல் நிறையளவான விதைகள் தேவையாய் இருக்கும். தோடோடு விதைப்பதினால் பயிர் விரைவில் தோன்றாது. தோன்றினும், யாவும் ஒரே தன்மையாய் இரா. ஆடி, ஆவணி மாதங்களில் பருவக் காற்றோடு வரும் முதல் மழைக்குப்பின் விதைக்க வேண்டும். ஏற்ற காலத்தில் விதைத்தால் பயிர் பல கிளைகள் தாங்கிச் செழித்து வளரும். மணிகளை அகல வீசி யெறிந்து விதைப்பாரும் உளர். ஆனால், அவ்வாறு செய்வதால், விதைகள் வெளிப்பட்டுக் கிடக்கவும் காகங்கள் அவற்றைத் தின்றுவிடவும் நேரிடும். உழவு சால் வழியே விதைகளை விதைத்து மண்ணால் மூடினால், மணிகளுக்குச் சேதமேற்படாது. ஏழு நாட்களுள் பயிர் தோன்றும். காகங்கள் முளைகளைத் தின்ன வெகு ஆவலோடு காத்திருக்குமாதலால், பண்ணையாட்கள் நிலத்தைக் காப்பது கடனும்.

“ எரினும் நன்றால் எருவிடுதல், கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.”

பயிர் ஒரு மாத மூப்படைந்ததும் களை எடுக்க வேண்டும். இதன் பின்னர், பயிரைச் சூழ மண் கிளைத்துக் கொடுப்பதவசியமாகும். நல் விளைவு பெறவேண்டுமாயின், நிலத்தைக் களை கட்டு வருவதோடு, மண் உதிருதிராயும் துகளாயு மிருக்கின்றதோவென நோக்குதல் தேவையாம். இச் செடிகளிலுண்டாகும் மஞ்சள் நிறமான பூக்கள் பூமியினுட்சென்று வேர்க்கடலைகளாகக் காய்க்கின்றன.

ஐந்தாவது, அல்லது ஆறுவது மாதத்தில் மண்ணைக் கிளறிப் பலனைத் திரட்டலாம். இலைகள் பழுத்து மஞ்சள் வண்ணமுறுவதும், மணிகளின் மேற்றோடு செந்நிறம் பெறுவதும் விளைவின் முதிர்ச்சியைக் காட்டும். நிலக் கடலையைத் திரட்டிக்கொண்ட பின்பு, செடிகளின் தழைகளை அறுத்துப் போரிட்டு வைத்துக்கொண்டால், அவை ஆடுமாடுகளுக்குப் புஷ்டியான உணவாகும்.

வேர்க்கடலை வறுத்துண்ண மிக வினிக்கும். இதில் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத அரிய சத்துக்கள் இருக்கின்றனவென்று உணவு நூல் வல்லார் கூறுகின்றனர். நிலக் கடலையில் எண்ணெய் நிறைந்திருக்கும். நிலக் கடலை யெண்ணெய் சவுக்காரம் செய்வதற்கும் வேறு பல விதங்களிலும் உபயோகமாகின்றது. ஆண்டு தோறும் மேனுடுகளுக்கு நிலக் கடலையும் நிலக் கடலை யெண்ணெயும் ஏற்றுமதியாகின்றன. நிலக் கடலைப் பிண்ணாக்கு கால் நடைகளைக் கொழுக்கச் செய்யும் நல்லுணவாம். நன்செய்ப் பயிர் வளர்ச்சிக்கு இதன் பிண்ணாக்கு நிகரற்ற பசளையாகும்.

இச்செடி எந்நாட்டைச் சார்ந்ததென்பதைக் குறித்துப் பல அபிப்பிராய பேதங்கள் உண்டு. சில தாவர நூல்வல்லார் இச்செடி அமெரிக்காக் கண்டத்தையேனும் ஆப்பிரிக்காக் கண்டத்தையேனும் சார்ந்ததென்று அபிப்பிராயப் படுகின்

றனர். எங்ஙனமாயினு மென்? இதனை நமது நாட்டார் நெடுங்காலமாகப் பயிர் செய்துவருகின்றனர். ஆதலால் நாம் இதைப் போற்றி வளர்ப்பது நமது கடன்.

3. மாயப் பெட்டி

உலகம் தோன்றிய காலத்தில் எபிமிதியஸ் என்னும் வாலிபன் தன்னந்தனியனாக வசித்துவந்தான். வெகு தூரத்திற் கப்பாலுள்ள நாட்டிலிருந்து பண்டோரா என்ற ஒரு சிறுமி அவனுக்குத் துணையாக வந்து சேர்ந்தாள். அவள் அவனுடைய குடிசையில் நுழைந்தவுடன் அங்கே ஒரு பெரிய பெட்டி இருக்கக்கண்டு அதில் இருப்பது யாதெனை வினவினள். எபிமிதியஸ் அவளை நோக்கி, "அருமைப் பண்டோரா! நீ வருவதற்குச் சற்று முன்பு சிரித்த முகத்துடன் ஒருவன் இங்கே வந்து இதைப் பத்திரமாக வைத்திருக்கச் சொல்லிச் சென்றான். அதனால் அதனுள்ளிருப்பது எனக்கே இன்னதெனத் தெரியாது" என்று மறுமொழி கூறினான்.

பண்டோரா சற்று ஆலோசித்து, "ஓ, அப்படியா? அவனை நான் அறிவேன். அவன் ஒரு தேவதூதன். அவன் என்னை இப்பெட்டியுடன் அழைத்து வந்தான். ஆதலின், இப்பெட்டி எனக்காகவே அவன் கொண்டுவந்திருக்கவேண்டும். அநேகமாக இதற்குள் நான் அணிவதற்கேற்ற அழகான ஆடைகளோ, அல்லது நாமிருவரும் விளையாடத் தகுந்த கருவிகளோ, அன்றி நாம் உண்ண உகந்த தின்பண்டங்களோ தாமிருக்கவேண்டும்" எனப் புகன்றாள். "இருக்கலாம், ஆனால் அத்தேவதூதன் வந்து பெட்டியைத் திறக்க விடைதருமுன் நமக்கு அதைத் திறக்க உரிமையில்லை" என்று எபிமிதியஸ் சொல்லிக்கொண்டு

வெளியே போய்விட்டான். பண்டோரா, "என்ன அசட்டுப் பையன்!" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு பெட்டியை உற்று நோக்கினாள்.

அப்பெட்டி மிகவும் அழகானது. அதன் ஓரங்கள் பல அருமையான சித்திரவேலைகள் செய்யப்பட்டிருந்தன. மூடியின் நடுவே ஒரு அழகான முகம் எழுதப்பெற்றுக் கண்கவரும் வனப்பினதாக இருந்தது. பெட்டி யாதொரு பூட்டுமின்றி ஒரு தங்கக் கயிற்றால் தந்திரமாக முடிச்சிட்டுக் கட்டப்பட்டிருந்தது. அம் முடிச்சோ மிகவும் திறமையுடையவர்களாலும் அவிழ்க்க முடியாதபடி அவ்வளவு அபூர்வமானதாக அமைந்திருந்தது. பண்டோராவின் மனம் அம்முடிச்சைச் சோதித்துப் பார்க்கும்படி அவளைத் தூண்டிற்று. அதனைச் சோதிப்பதால் யாதொரு குற்றமும் விளையாதென அவள் நினைத்தாள். அவள் அப்பெட்டியை ஒரு ஓரமாகச் சற்று தூக்கிப்போட்டாள். அது திடீரென்ற ஒலியுடன் கீழே விழுந்தது. அவளுக்கு அதனுள் ஏதோ ஓசை கேட்டது போலத் தோன்றிற்று; உற்றுக் கேட்டாள்.

அப்போது சூரிய வெளிச்சம் பலகணி வழியாக உள்ளே வந்து பெட்டிமேல் விழுந்து கொண்டிருந்தது. பண்டோரா அம்முடிச்சைப் பிடித்துத் தன்னை யறியாமல் ஒருவிதமாக அதை இழுத்தாள். உடனே அது படீரென அவிழ்ந்து விட்டது. அவளால், பன்முறை முயன்றும், அதை மறுபடி முடிச்சிடக்கூடவில்லை. எபிமிதியஸ் வரும் வரை பெட்டியை அப்படியே வைத்திருப்பதென நினைத்த அப்பெண்ணுக்கு மறுநிமிஷத்தில் எவ்வாறாயினும் அவன் தன்னைச் சந்தேகிப்பது நிச்சயமாதலால் அதை ஒரு முறை திறந்து பார்க்கவேண்டுமென்று மனத் துணிவு உண்டாயிற்று. "அன்புள்ள பண்டோரா! எங்களை

வெளியே விடு. நாங்கள் உனக்கு அரிய விளையாட்டுத் தோழர்களாவோம்'' என்ற முணக்கம் பெட்டிக்குள் கேட்டது. அதைச் செவியுற்றதும் தான் எப்படியாவது அதனை மெல்லத் திறந்து உள்ளே இருப்பவைகளைப் பார்த்துவிட்டு அவை வெளியேறுமுன் மூடிவிடவேண்டுமென்று அவள் தீர்மானித்தாள்.

வெளியே ஓடிய எபிமிதியஸ் அங்குமிங்கும் திரிந்து ஒரு விளையாட்டிலும் உற்சாக முண்டாகாமல் உடனே வீடு திரும்பினன். அவன் வாசலருகே வரும்போதுதான் பண்டோரா பெட்டிமேல் கையை வைத்துக்கொண்டிருந்ததால் அவன் சத்தமிட்டுத் தடுத்திருக்கக்கூடும். ஆனல் அவன் அவளைக் கவனித்துக்கொண்டு வாசலில் நின்றான்.

பண்டோரா பெட்டியைத் திறந்தாள். உடனே ஒரு பெரிய புகைப் படலம் வெளியே கிளம்பி எங்கும் இருண்டது. அவள் முன்கேட்ட முணக்கவொலி இடியொலிபோல வெடித்தது. இருந்தாலும் அவள் அஞ்சாமல் அம்மூடியை நன்றாகத் திறந்து உள்ளே பார்த்தாள். அப்போது பல சிறகு முளைத்த பிராணிகள் அதனுள்ளிருந்து வெளியே பறந்தோடின. அதே சமயத்தில் எபிமிதியஸ், "ஐயோ! என்னைக் கொட்டிவிட்டதே! ஐயையோ, வலி பொறுக்க முடியவில்லையே! துடுக்கான பெண்ணே! நீயேன் அத்திய பெட்டியைத் திறந்தாய்?'' என்று கதறினன்.

பண்டோரா திடுக்கிட்டுப் படீரெனப் பெட்டியை மூடி எபிமிதியஸைப் பார்த்தாள். புகைப் படலத்தால் அவளுக்கு ஒன்றும் புலனாகவில்லை. பெரிய பூச்சிகளின் இரைச்சல் காது செவிடுபடும்படிக் கேட்டது. கண் இருட்டிற் பார்க்கப் பழகியவுடன், வௌவாலைப்போன்ற சிறகுகளை

யுடைய நீண்ட கொடுக்குகளோடு கூடிய அருவருப்பான பல ஜந்துக்களை அவள் கண்டாள். அவைகளில் ஒன்று தான் எபிமிதியஸைக் கொட்டிற்று. அச்சமயம் பண்டோரா ஓலமிட்டு அழ ஆரம்பித்தாள். எபிமிதியஸ் மட்டும் ஓடி வந்து அவள் தலையிலிருந்த பூச்சியைத் தட்டிவிடாமற் போனால் அவள் மிகவும் கொட்டப்பட்டிருப்பாள்.

பெட்டியிலிருந்து வெளியே வந்த பொருள்களே உலகத்தில் இப்போது பரவி யிருக்கும் துன்பக் குழாங்கள். அவைகளுள் பலவிதக் கோபதாபங்களிருந்தன; பலவகைப் பட்ட கவலைகளிருந்தன; நூற்றுக் கணக்கான துன்பங்களிருந்தன; எண்ணிறந்த நோய்கள் இருந்தன. மக்கள் வாழ்க்கைக்கு என்னென்ன விதமான இடையூறுகள் உளவோ அவ்வளவும் வெளியே பறந்தன.

அதுவரை உலகில் ஒருவிதமான துன்பமும் இருந்ததில்லை. பண்டோராவும், எபிமிதியஸும் பட்ட துன்பமே முதன் முதலாக மக்களினத்திற்கு ஏற்பட்ட துன்பமாகும். அவர்கள் வேதனை பொறுக்கமாட்டாமல் துள்ளித் துடித்தார்கள்; ஒருவர்மேல் ஒருவர் பகை கொண்டார்கள். எபிமிதியஸ் தனக்குத் துன்பம் வந்தது பண்டோராவாலேயே எனச் சினந்து அவள் முகத்தைப் பார்க்காமல் ஒரு மூலையில் இருந்துகொண்டு கண்ணீர் வடித்தான். சிறுமியோ மாயப் பெட்டிமேல் தலை படும்படி கீழே விழுந்து புரண்டு விம்மி விம்மி அழுதாள்.

திடீரெனப் பெட்டியின் மூடியை யாரோ தட்டுவது போலச் சத்தம் கேட்டது. "இது என்ன சத்தம்?" என்று கூவினாள் பண்டோரா. சிறுவனோ ஒன்றும் பேசவில்லை. "நண்பா, என்னோடு பேசமாட்டாயா?" என்று ஏங்கினாள் அப்பெண். மறுபடியும் தட்டுதல் கேட்டது.

"யார் தட்டுவது?" என மறுபடியும் வினவினாள் சிறுமி. "நீ திறந்தால் அறிவாய். நான் முன் வெளி வந்த தீய பிராணிகளைச் சேர்ந்தவளல்ல. அன்புள்ள சிறுமியே! திறந்து விடு" என்ற மறுமொழி கேட்டது. அந்த ஒலி யில் ஒருவிதக் கவர்ச்சி யிருந்தது. அது ஒரு தேவதை யின் ஒலிபோலத் தோன்றிற்று. "எபிமிதியஸ்! நான் பெட்டியைத திறக்கவா?" என வினவினாள் பண்டோரா. சிறுவன், "உன் மனம் போலச் செய். நீ எவ்வளவோ துன்பத்தைக் கிளப்பிவிட்டாய். தலைக்கு மேல் ஓடிய வெள்ளம் சாண் போனாலென்ன, முழம் போனாலென்ன" என வெறுப்புடன் விடை பகர்ந்தான். மறுபடியும் அவ் வொலி, "துடுக்கான சிறுவா! என்ன கூறினாய்? பண் டோரா, நீ தைரியமாகத் திற. அவனுக்கும் என்னைப் பார்க்க ஆசைதான். உனக்கு விரைவில் நான் நன்மை செய்வேன்" என்று சிரித்துக்கொண்டு சாமர்த்தியமாக மொழிந்தது. அதைக் கேட்டவுடனே எபிமிதியஸ் ஓடிச்சென்று பெட்டி யைத் திறக்கப் பண்டோராவிற்கு உதவி செய்தான்.

பெட்டி திறந்தவுடன், அதிலிருந்து ஒரு அழகான தேவதை ஒளி வீசும் உடலுடன் வெளியே வந்து குடிசை யில் அங்குமிங்கும் உலாவிற்று. அது எபிமிதியஸ் உட லில் துன்புற்ற இடத்தைத் தொட்டது; உடனே அவ னுக்கு நோவு நின்றது. பின் அது பண்டோராவின் உச்சி யில் முத்தமிட்டது. உடனே அவள் வலி நீங்கிச் சுக மடைந்தாள். பண்டோரா, "அழகிய தேவதையே! நீ யார்! உன் பெயரென்ன? உனது சிறகுகள் வானவில்லைப் போல நிறம் பெற்று விளங்குகின்றன" என்று கேட் டாள். "என் பெயர் நன்னம்பிக்கை. என் சிறகுகள் வான வில்லைப்போலிருப்பது உண்மையே. நான் எப்போதும்

மகிழ்ச்சியான குணமுடையவள்" என அத்தேவதை மறு மொழி கூறிற்று. எபிமிதியஸ் அதை எப்போதும் தங்களோடுகூடி யிருக்கும்படி வேண்டிக்கொண்டான். நம்பிக்கை புன் முறுவல் பூத்து, "என் அருமைக் குழந்தைகளே! உங்கள் உயிருள்ள வரையில் நான் உங்களை விட்டுப் பிரியேன். உங்கள் நன்மையை நாடுபவள் நான். நீங்கள் எப்பொழுதும் மனந் தளராமல் நம்பிக்கையோடிருங்கள்" என்று நன்மதி புகன்றது. சிறுவனும், சிறுமியும் ஒரே வாக்காக, "நாங்கள் எப்போதும் நம்பிக்கையைக் கைவிடோம்" எனச் செப்பி மகிழ்ந்தனர்.

ஆதிகாலத்தில் துன்பமில்லாமல் சுவர்க்கம்போல் விளங்கிய இப்புவியில் துன்பம் தோன்றிப் பெருகி வாழ்க்கையை வெறுக்கச் செய்ததையும், பின்பு துன்புற்ற மக்கள் உள்ளத்தில் துன்பம் நீங்கி நல்ல காலம் பிறக்கும் என்னும் நம்பிக்கை தோன்றி ஆறுதல் உண்டாக்கியதையும் விளக்கும் பொருட்டுக் கிரேக்கர்கள் இக்கதையை அமைத்துளர்.

4. சபரி

மலையாத்திரி யென்னும் மலையைச் சார்ந்த காட்டில் வேடுவன் ஒருவனிருந்தான். அவன் வேட்டையாடுவதாகிய தன் குலத்தொழிலைச் செவ்வனே இயற்றி இன்புற்றிருக்குங் காலத்து அவனுக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. அம் மதலைக்குச் சபரி என்று பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தான். பெற்றோருக்கும், மற்றோருக்கும் பெருமகிழ் வூட்டி அக்குழந்தை நன்கு வளர்ந்து வந்தது. காலக் கிரமத்தில் கன்னிப் பருவமடைந்த அவள், செல்வப் புதல்வியானமையால் யாதொரு தொழிலும் செய்யாமல் வனத்தில் அங்குமிங்கும் திரிந்து பொழுது போக்கிக்

கொண்டிருக்கையில், ஒருநாள் தற்செயலாய் எதிரில் ஓர் ஆச்சிரமத்தைக் கண்டு அதன் வாசற் பக்கத்தில் வந்து நின்ருள். அப்பன்னசாலையில் தங்கி அருந்தவம் இயற்றி வரும் முனிவர் வெளியில் வந்து "குழந்தாய்! உன்னைப் பார்க்கும் பொழுது அறிவும் அன்பும் உடையவளாய்க் காணப்படுகின்ருய். ஆயினும் அரணியத்தில் இவ்வாறு வீண்பொழுது போக்குவது வாழ்வுக்குத் தாழ்வைத் தருமென்பதை நீ நன்ருய்த் தெரிந்து கொள்ளவேண்டும். உன் முகத்தை நோக்கும்போது மிக்க உயர் பதவியை அடைவாய் என்று புலப்படுகின்றது ஆனுல் உழைப் பின்றி உயர்வில்லை. இதுமுதல் கானகத்தில் பல இடங் களினின்றும் விறகு சேகரித்து என்போன்ற சாதுக்களுக்கு வழங்கிவந்தால் சின்னுட்களில் எம்பெருமானது இன் னருள் பெற்று உயர்பதம் பெறுவாய்" என்ருர். முனி வரது கனிமொழிகள் அக்கன்னியின் மனத்தில் பசுமரத் தாணிபோற் பதிந்தன.

சபரி அவரைப் பணிந்தெழுந்து அன்று தொட்டுச் சந்தனம், அகில் முதலிய நறுமணங் கமழும் கட்டைகளைச் சேகரித்து நற்றவ முனிவர்களுக்கு அளித்து அப்பெரியார் களது அன்புகூர்ந்த ஆசிமொழியால் அகங்களித்து வந்தாள். இவ்வாறு பல ஆண்டுகள் சென்றன. ஒருநாள் விறகு பொறுக்க அவ்வனத்துள் வெகுதூரஞ் செல்லுகையில் ஒரு ஜோதி தோன்றிடக் கண்டு, மேனிபுளகிக்க அங்குச் சென்று அவள் உற்று நோக்குமளவில் பசும்பொன் மேனி யளாய்ச் சடைமுடி தாங்கினளாய்ப் பேரன்புருவாய்ப் பெருந்தவ மிழைக்கும் ஒரு யோகினியைக் கண்டாள். யோகினியாகிய அணங்கின் திருவடியில் வணங்கியதும் அவ்வருந்தவச் செல்வி சபரியைப் பார்த்து, "முனிவர்

கட்குப் பலநாள் நீ தொண்டு செய்தமையால் அப்பெரியா ரது ஆசி உன்னை இங்கு வரச்செய்தது. மேலும் நான் இப் பொழுது சொல்லும் விதம் செய்வாயாகில் நீ நற்கதியடை வாய். இங்கிருந்து காதவழிக் கப்பால் எனது குருநாத ராகிய மதங்க முனிவரின் ஆச்சிரமம் இருக்கின்றது. அங்குச்சென்று உள்ளன்புடன் பணிவிடை செய்வாயாயின் அவர் திருவுள மிசைந்து மந்திரோபதேசம் செய்து இப் பிறவிப் பயனை நீ அடையுமாறு அருளுவார். ஆதலால் இங்கிருக்கும் கந்த மூலங்களை அருந்திப் பசியாற்றிக் கொண்டு ஏகுக " என்று ஆக்கினை யிட்டனள்.

சபரியும் அவ்வாறே பசி தீர்த்துக்கொண்டு அப்பாம யோகினியைப் பன்முறை வணங்கிப் பின்பு மதங்காச் சிரமத்தை நாடிப் புறப்பட்டாள். பெரியோரிருக்கு மிடம் எக்காலமும் இயற்கையழகு குன்றாது பொலிவுற்றே விளங்குமல்லவா? மயிலாடுவதும், குயில் பாடுவதும், மான்கள் தாவுவதும், பல்வகைப் பறவைகள் கூவுவதும், பிரமசாரிகள் வேதம் ஓதுவதுமாக இலங்கும் மதங்காச் சிரமத்தி னெல்லையை அடைந்தாள். அங்கு மலைப்பிரபா மா நதி விரைந்தோடும் அழகையும் கண்டாள்; மனங் குளிர்ந் தாள். அதிகாலையில் நீராட மதங்க முனிவர் எழுந்தருளி வரும் வழியில் அவரது திருவடிகளுக்கு இனிமை தரக் கூடிய மலர்மெத்தை பரப்பும் பணிவிடையைத் தினமுஞ் செய்து தொலைவில் மறைவிலிருந்து முனிவர் பெருமானது திருமேனியைத் தரிசித்துவந்தாள். ஒரு நாள் அம்முனிவர் அங்கு நடந்துவரும் தொண்டு எதற்காக வென்றும், எவராலாவதென்றுந் தெரிந்து கொண்டு உள்ளம் உவகை யால் நிரம்ப, மறைந்து நிற்கும் ஸ்திரீயை விளித்து, இன்று சுதினமானதால் நீ உபதேசம் பெறலாமென்று அன்புடன்

கூறினர். மிக்க வினயத்துடன் அப்பெரியாரது முன்னில் சபரி வந்து நிற்க அவளை அண்மையிலிருத்தி "ஸ்ரீராம" என்னும் தாரக மந்திரத்தை உபதேசித்தருளினர். இம்மந்திரத்தின் பெருமையைக் கம்பர் பின்வருமாறு விவரித்துள்ளார் :—

நன்மையுஞ் செல்வமுநாளு நல்குமே
தின்மையும் பாவமுஞ் சிதைந்து தேயுமே
சென்மமு மரணமு மின்றித் தீருமே
இம்மையே 'ராம' வென்றி ரண்டெழுத்தினல்.

ஸ்ரீராமரும் இலக்குமணரும் இவ்வழியாகச் சிறிது காலத்தில் வருவார்களென்றும், அவர்களைச் சபரி நேரில் தரிசித்து, உபசரித்துப் பரமானந்த மடைவாளென்றும் அம்முனிவர் ஆசிர்வதித்தார்.

சபரியும் அவ்வனத்தில் ஒரு பர்ணசாலை அமைத்து ராம மந்திரத்தைச் செபித்துக் கொண்டு, ஒரு யோகினியைப்போல் வாழ்ந்து வந்தாள்.

புளிந்தர் குலத்தவளாகிய சபரிக்கு மந்திரோபதேசம் செய்ததைப்பற்றி மதங்க முனிவரது சிஷ்யர்கள் மிக்க வெறுப்பும், பொறாமையுங் கொண்டு எந்நேரமும் அவளைப் பலவாறு பழித்துப் பேசி வந்தனர். இதை முக்கால முணரும் முனிபுங்கவராகிய மதங்கர் நன்கறிந்தனராயினும் சீடர் தமது மூடத்தனத்தைத் தாமே அறிந்து நல்வழிப்படட்டு மென்று வாளாவிருந்தனர். ஒரு நாட் காலையில் சிஷ்யர்கள் வழக்கம்போல் மலைப் பிரபா நதியில் புனலாடப் போன போது அதன் நீர் இரத்தமும் இறைச்சியுமாய் இருப்பதைக் கண்டு அதிசயித்து அளவிறந்த மனவருத்த மெய்தினர்கள். அதன் காரணத்தை அவர்கள் யோசிக்

கையில் ஒருவன், வேடுவப் பெண்ணாகிய சபரி இந்நதியைத் தீண்டினமையால் இவ்வாறுயிற் றென்றனன். மற்றொருவன் தெய்வம் எத்தனை நாள் இவ்வநியாயத்தைச் சகிக்குமென்றான். ஸ்நானம் செய்யவொட்டாமல் கெடுத்து விட்டாளே யென்றான் வேறொருவன். இப்படிப் பலவாறு சபரியை இகழ்ந்து, திகைத்து நிற்கையில், சற்றுத் தூரத்தில் வில்லையேந்திய கரத்தினராய், சடை கொண்ட சிரத்தினராய், கவலை கூர்ந்தவராய், மணியும் ஒளியும் போலவும், மலரும் மணமும் போலவும் இணை சேர்ந்தவராய் இருவர் வருவதைக் கண்டார்கள். முறை பிறழ்ந்த இராவணனால் சிறைப்படுத்தப்பட்ட சீதாபிராட்டியைத்தேடிவந்த இராம லக்ஷ்மணர்களே இவர்கள். இன்னாரென்று உணர்ந்த சீடர்கள் அச்சமும் நடுக்கமு மடைந்து கைகட்டி வாய் புதைத்துத் தங்களுக்கு ஏற்பட்டிருந்த இடரைத் தீர்த்தருள் புரியும் வண்ணம் வேண்டிக்கொண்டனர். "சபரி யென்னும் இழிகுல ஸ்திரீயானவள் இந்தப் புனித நதியாகிய மலைப் பிரவையி லிறங்கி அசுத்தப்படுத்தியதால் அதில் உதிரமும் மாமிசமும் ஓடுகின்றன. இதனை முன்போலவே திவ்ய தீர்த்தமாக்கி எங்களை இரக்ஷிக்க வேண்டு" மென்றனர். எல்லாமறிந்த எல்லாமாகிய இராமபிரான் புன்முறுவல் பூத்து அவர்களை நோக்கி, "அருமறையோர்களே, பக்தியின் பெருமையைப் பகருவது அருமையே! பரம பக்தையாகிய சபரியை நீச ஸ்திரீ என்று நீங்கள் நிந்தித்தமையால் இவ்விபத்து நிகழ்ந்தது. இக்கணமே, சபரியின் பன்னசாலையை அடைந்து அவளது பாததூளியைக் கொண்டு வந்து இடுவீர்களாயின் இத்தண்ணீர் நன்னீராகும்," என்றருளினர். அவர்கள் அவ்வாறே செய்யவும் அந்நதி மாசற்ற தண்புனலாயிற்று.

எம்பெருமானது வருகையை நிஷ்டையி லிருந்தே யறிந்த சபரி இனிமை மிக்க கனிகளை நன்ருய் இருக்கின் றனவா என்று உருசி பார்த்துச் சேகரித்து வைத்துக் கொண்டு காத்திருக்கையில் ராம லக்ஷ்மணர் இருவரும் அவளிடம் வந்து சேர்ந்தனர். அப்பொழுது சபரி இன்பக் கடலில் மூழ்கித் தான் தயாரித்து வைத்திருந்த கனியுண வைப்படைத்து உபசரித்தாள். அளித்த விருந்தை அன் புடன் ஏற்றுச் சபரிக்கு உயர்பதம் நல்கி இரு சகோதரர் களும் தம் வழியே சென்று பம்பா சரசை நண்ணினர்.

5. கபில ரகவல்

(உடல் நிலையாமை)

உலகத்திரே! உலகத்திரே!
நாக்கடிப்பாக வாய்ப்பறை அறைந்து
சாற்றக் கேண்மின்; சாற்றக் கேண்மின்;
மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை;
ஐம்பது இரவில் அகலும் துயிலினுல்;
ஒட்டிய இளமையில் ஓரைந்து நீங்கும்;
ஆக்கை யிளமையில் ஐம்மூன்று நீங்கும்;
எழுபது போகநீக் கிருப்பன முப்பதே.
அவற்றுள்,
இன்புறு நாளும் சிலவே; அதாஅன்று
துன்புறு நாளும் சிலவே.

* * * *
* * * *

(சாதி வேற்றுமை இன்மை)

மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?
காற்றுஞ் சிலரை நீக்கி வீசுமோ?
மாநிலஞ் சுமக்க மாட்டேன் என்னுமோ?

கதிரோன் சிலரைக் காயேன் என்னுமோ?
வாழ்நான்கு சாதிக் குணவு நாட்டிலும்
கீழ்நான்கு சாதிக் குணவு காட்டிலுமோ?
திருவும் வறுமையுஞ் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலை தரணி யோர்க்கே.
குலமும் ஒன்றே, குடியும் ஒன்றே,
இறப்பும் ஒன்றே, பிறப்பும் ஒன்றே,
வழிபடு தெய்வமும் ஒன்றே; ஆதலால்,
முன்னோர் உரைத்த மொழிதவ றுமல்
எந்நா ளாயினும் இரப்பவர்க் கிட்டுப்
புலையும் கொலையும் களவும் தவிர்ந்து
நிலைபெற அறத்தில் நிற்பதை அறிந்து
ஆணும் பெண்ணும் அல்லதை யுணர்ந்து
பேணி யுரைப்பது பிழையெனப் படாது.
சிறப்பும் சீலமும் அல்லது—
பிறப்பு நலந்தருமோ பேதை யீரே.

6. வில்லிபுத்தூராழ்வார்

பல் வளங்களும் மல்கும் மேன்மையது திருமுனைப் பாடி நாடு. அந்நாட்டினைப் பெண்ணையாறு முதலிய பல பேராறுகள் பாய்ந்து செழிக்கச் செய்கின்றன. அந்நாடு சைவ சமய குரவராகிய திருநாவுக்கரசு நாயனாரும் சுந்தர மூர்த்தி நாயனாரும் தன்னிடத்தில் பிறந்தருளிய பெரும் பேறு பெற்றது. அதில் பேரூர்கள் பல விளங்க அவைகளி னிடையே ஒரு சிற்றூர் சனியூர் என்ற பெயருடன் வாழ் வதற்கு உகந்ததாகத் திகழ்கின்றது. அச் சிற்றூரிலே கல்வி, அறிவு, ஒழுக்கங்களாற் சிறந்த பல பெரியோர்கள் வசித்திருந்தனர். அவர்களுள் ஒப்புயர்வற்ற பெரியார்

வீர ராகவாசாரியார் என்ற அந்தணர் திலகர். அவர் திருமால் திருவடிகளுக்கு அடிமை பூண்டவர்.

வீர ராக வாசாரியார் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தனர். அவர் திருமாலடியார்களான பன்னிரண்டு ஆழ்வார்களிடமும் அன்பு பூண்டவரேனும், அவருள் பெரியாழ்வாரிடத்திலே பேரன்பு பூண்டு அவரைத் தமது வழிபடு தெய்வமாகக் கொண்டு பூசித்து வந்தார்.

பெரியாழ்வார், திருநெல்வேலி மா நகருக்கு வடமேற்கிலுள்ள ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்த அடியார். அதனால் அவர் வில்லிபுத்தூராழ்வார் என்றும் அழைக்கப்பெறுவார். பட்டர் பிரான் என்ற திருப்பெயரும் அவரையே குறிக்கும்.

வீர ராக வாசாரியருக்குப் பொருட் செல்வமும் கல்விச் செல்வமும் நிரம்பி யிருந்தும், பிள்ளைச் செல்வமட்டும் அரிதாயிற்று. அதனால் அவர் மனம் கவலைக் கடலுள் ஆழ்ந்திருந்தது. அவர் நாடோறும் தமது குல தெய்வமாகிய வில்லிபுத்தூராழ்வாரை வழிபடும் போதெல்லாம் தமது பெருங் குறையைக் கூறி அதனை நீக்கியருளுமாறு வேண்டி மனமுருகினார். குல தெய்வம் அவருடைய வேண்டுகைக்கு இரங்கிற்று. அவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. வீர ராக வாசாரியர் அப்பிள்ளைக்குத் தமது வழிபடு தெய்வத்தின் பெயர்களுள் ஒன்றாகிய வில்லிபுத்தூராழ்வார் என்ற பெயரைச் சூட்டி மகிழ்ச்சியடைந்தார். சில ஆண்டுகளின் பின் அவருக்கு மற்றொரு மகனாரும் பிறந்தார்.

வில்லிபுத்தூராழ்வாரும் அவர்தம் தம்பியாரும் நல்லாசிரியரை யடுத்துத் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும், அக நானூறு, புற நானூறு, பத்துப்பாட்டு முதலிய இலக்கிய நூல்களையும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்து

பெரும் புலவராயினர். அவர்கள் வட நூற்கடலையும் பருகி வல்லவ ரானுர்கள். வில்லிபுத்தூரார் தமிழில் மிக விரைவாக இனிமையான பாடல்களைப் பாடித் தமிழ் மக்களை இன் புறச் செய்தார். அவருடைய பெரும் புகழ் கதிரவன் ஒளியேபோல் எங்கும் பரவுவதாயிற்று.

அக்காலத்தே திருமுனைப்பாடி நாட்டிற்குத் தலை நக ராக இருந்தது வக்கபாகை என்ற பேரூர். அங்கிருந்து அரசியல் நடாத்திய மன்னன் வரபதி யாட்கோண்டான் என்பவன். அவ்வேந்தன் தனது தாய் மொழியாகிய தமிழ் மொழியினிடத்துப் பேரன்பு பூண்டு அதனை வளர்க்கப் பேராவல் கொண்டான். தலைச் சங்கத்திலும், இடைச் சங்கத்திலும், கடைச் சங்கத்திலும் இருந்த அகத்தியர் முதலாய பெருந்தமிழ்ப் புலவர்களாலே இனிது ஆராய்ந்து, வளர்க்கப்பெற்ற தமிழ்மொழி, படிப்பாரும் வளர்ப்பாரு மில்லாமல் தளர்நிலை யடைதலைக்கண்டு கண்கலங்கி அவ் வரசர் பெருமான் தனது தலை நகரத்திலேயே ஒரு தமிழ்ச் சங்கத்தை நிலைபெறுத்தினுன். அவன் தன் நாட்டிலிருந்த புலவர்களை வரவழைத்து அச் சங்கத்திலிருந்து தமிழை ஆராயுமாறு வேண்டிக்கொண்டான். அவன் நமது வில்லி புத்தூராழ்வா ருடைய கல்வித் திறமையைப் பலர் புகழக் கேட்டு அவரை வரவழைத்து அச் சங்கத்திற்குத் தலைமை பூண வேண்டினுன். புலவர் பெருமானும் அவ்வேண்டு கோளுக்கிணங்கித் தலைவராயினர்.

வீர ராக வாசாரியார் திருமால் திருவடி நீழல் அடைந் தார். அப்போது வில்லிபுத்தூராரும் அவரது தம்பியாரும் தமது சொத்துக்களைப் பிரித்துக்கொள்ளும்போது அப் புலவர்களுக்குள் பூசல் விளைந்தது. அது முற்றி விடவே இரு பெருங் கவிஞரும் தமது அரசனுகிய வரபதி

யாட்கொண்டானிடம் சென்று முறையிட்டனர். பேரறிஞனாகிய அக்காவலன் புலவர்கள் பொருளாசையால் தம்முள் சண்டையிடுவதைக் கண்டு வியப்புற்றான். பஞ்ச பாண்டவர்களும், துரியோதனாதியரும் தாயபாகம் காரணமாக மாறுபட்டுப் போர் செய்து இருவரும் அழிந்து போன வரலாற்றை அவர்கள் ஆராயுமாறு செய்தால் உண்மையறிவு அவர்களுக்கு உண்டாகி அவர்கள் நல்வழிப் படுவர் என அவன் எண்ணினான். அவன் வில்லியை நோக்கி வடமொழியிலுள்ள பாரதக்கதையைத் தமிழில் இனிய பாடல்களாகப் பாடுமாறு கூறி அவருடைய தம்பியாரை அவருக்குத் துணைபுரியும்படி ஆணைதந்தான். பாரதம் தமிழில் அவர்களால் பாடப் பெற்ற பின்னரே அவர்களுடைய தாய வழக்கைத் தான் தீர்த்துவிடத் துணிந்திருப்பதையும் அவன் அவர்களிடம் புகன்றான்.

பாரதப் போர் முதன் முதல் வேத வியாச முனிவரால் வடமொழியில் ஆக்கப் பெற்றது. பால பாரதம் என்றதும் அப்போரைக் கூறுவதே. இவ்வடமொழி நூலை இயற்றியவர் அகத்தியபட்டர் என்பவர். தமிழில் முதல் முதலாகப் பாரதத்தைப் பாடிய புலவர் பெருமான் பெருந்தேவனார் என்பார். அவர் இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்தார். அவர் நூல் பாரத வெண்பா எனப் பெயர் பெறும். அந்நூலைப் பாடியதனாலே அவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என்று அழைக்கப் பெறுகிறார். இம் மூவர் நூல்களையும் ஆராய்ந்து பார்த்து வில்லிபுத்தூராழ்வார் தமிழில் பாரதத்தைப் பாடத் தொடங்கினார்.

பாரதப்போரை அப்புலவரிருவரும் சிந்திக்கச் சிந்திக்க "ஒரு குடிப்பிறந்தார் போரிடின் அக் குடும்பமே அழிந்து போம்," என்ற உண்மை அவர்கள் உள்ளத்தில் பசுமரத்

தாணி போல் பதியலாயிற்று. அதனால் அவர்கள் தாய பாகம் பற்றித் தம்முள் கொண்டிருந்த பகைமை மாறிப் பழையபடி ஒற்றுமையாக வாழத் தொடங்கினார்கள். தான் நினைத்தது முடிவு பெற்றதை அறிந்த அரசனும் அவர்கள் ஒற்றுமை நிலையையறிந்து மகிழ்வுற்றான். அரசன் தமக்குச் செய்த நன்றியை மறவாதவராய் வில்லியார் பாரதப் பாடல்களின் இடையிடையே வரபதி யாட்கொண்டானைப் புகழ்ந்து பாடியுள்ளார். தமிழ்ப் புலவர்களுக்குப் புகலிடமாக விளங்கிய வள்ளலாகிய மன்னவன் பாரதப் பாடல்களைக் கேட்டு இன்ப வெள்ளத்தில் மூழ்கி அவைகளைப் பாராட்டினான்.

சேர, சோழ, பாண்டியர்கள் வில்லிபுத்தூரரை வரவழைத்து அவருடைய இன்பக் கவிகளைக் கேட்டு அவரைப் பலபடப் புகழ்ந்து பல பல பரிசுகள் கொடுத்தார்கள். வில்லி திக்கு விஜயஞ் செய்து அங்கங்கே தருக்கித் திரிந்த புலவர்களை வாதுக் கழைத்து வென்று அவர்களுடைய செருக்கைக் குலைத்ததுடன் தமது கையிலிருந்த துறடு கொண்டு அவர்களுடைய காதுகளை எட்டினமட்டு அறுத்தும் வந்தார். இதையே பிற்காலத்தில் ஒரு புலவர் ஒரு பாட்டில் "குறும்பி அளவாக் காதைக் குடைந்து தோண்டி, எட்டின மட் டறுப்பதற்கோ வில்லி இல்லை" என்று பாடியிருக்கிறார். ஆகையால் அவர் செல்லும் இடங்களிலெல்லாம் அவரைப் புலவர்கள் எதிரேற்றுப் பணிந்தார்கள். அவரும் எதிரற்றுத் திகழ்ந்தார்.

அவர் காலத்தில் திருவண்ணாமலையில் ஒரு பெரியார் இருந்தார். அவரே திருப்புகழ்பாடிய கவியரசர் அருணகிரிநாதர். அவர் முருகக் கடவுளுடைய திருவருளைப் பெற்ற அருட்கவி வாணர்.

அவருடைய பெருமையை அறிந்த வில்லிபுத்தூரார் அவரோடு வாதாடி வெல்ல நினைத்து ஒருநாள் திருவண்ணாமலையை யடைந்தார். வில்லி தாம் வந்த கருத்தை மொழிய, அருணகிரியார் தாம் பாடிவரும் 'கந்தரந்தாதி' என்ற நூலுக்குப் பொருள் விரித்துரைக்கும்படி ஏவினர். வில்லியார் அதில் ஐம்பத்து நான்காம் செய்யுளாகிய "திதத் தத்தத்தி" என்னும் முதற்றொடக்க முடைய தகர வருக்கத்து ஏகாக்ஷரப் பாவுக்கு உரைகூற மாட்டாமல் திகைத்தனர். பிறகு அருணகிரியாரது வேண்டுகோளின்படி துறட்டைத்தூர எறிந்துவிட்டு அவரிடம் விடைபெற்று வில்லிபுத்தூரார் தம்வழி ஏகினர். அவர் சின்னாட்களுக்குப் பின் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

தனிப் பாடல்

குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனிங் கில்லை.
　　குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை.
　　இரண்டொன்றாய் முடிந்து தலை யிறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை.
　　விளையாட்டாய்க் கவிதைதனை விரைந்துபாடித்
தெட்டுதற்கோ வறிவில்லாத் துரைகளுண்டு ;
　　தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே.

—படிக்காசுப் புலவர்.

7. லாம்பர்டிய நாட்டு வீர இளைஞன்

இத்தாலி தேசத்தின் வட பகுதியி லிருக்கிற லாம்பர்டி முதலிய மாகாணங்கள் பல நூற்றாண்டுகளாக ஆஸ்டிரியர்களால் அடக்கி ஆளப்பட்டு வந்தன. ஆஸ்டிரியர்களுடைய கொடுங்கோலுக்கு ஆற்றாது விடுதலை பெறும்படி, இத்தாலியர்கள் பிரெஞ்சுக்காரரைத் துணைக்கொண்டு பெரும்போர்

தொடங்கி கி. பி. 1859-ல் சால்பேர்னோ, சான்மார்ட்டினோ என்ற இடங்களில் வெற்றி பெற்றார்கள்.

அப்போரில் ஒருநாள் பகைஞர் பதுங்கி யிருக்கும் இடங்களைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு சிறு இத்தாலியக் குதிரைப் படை காட்டு வழியே சென்று கொண்டிருந்தது. மரங்களினிடையே மறைந்து நிற்கும் பகை வீரர்களைச் சந்திப்பதற்கு எப்பொழுதும் தயாராக அப்படைவீரர் தமது பார்வையை நெடுந்தூரம் வரை செலுத்திக் கொண்டு அரவமில்லாமல் முன்னேறிச் சென்றனர். இவ்விதமாக அவர்கள் பல மரங்களுக் கிடையே இருந்த ஒரு சிறு குடிசையை அடைந்தார்கள். தலைவாசலில் பன்னிரண்டு வயதுள்ள ஒரு சிறுவன் நின்றுகொண்டிருந்தான். அவ்விளைஞன் தனது கத்தியால் ஒரு சிறு கிளையைக் கம்பாகச் செதுக்கி நின்றான்.

குடிசையின் பலகணியில் ஒரு பெரிய இத்தாலியக் கொடி கட்டப் பெற்று, மெதுவாக வீசிக்கொண்டிருந்த காற்றில் அசைந்துகொண்டிருந்தது. ஆனால் அக் குடிசையில் ஒருவருமில்லை. அப்பக்கத்திலிருந்த குடிகள் அங்கே தமது கொடியைப் பறக்கச் செய்து பகைவராகிய ஆஸ்டிரியருக்கு அஞ்சி அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டார்கள். அச்சிறுவன் பார்வைக்கு மிகவும் அழகான பரந்த முகமும், விசாலமான கண்களும் கொண்டு கம்பீரமாக விளங்கினன். அவன் அவர்களைக் கண்ட மாத்திரத்தில் தன் கையிலிருந்த கம்பை வீசி எறிந்துவிட்டு வணங்கினன். குதிரைப் படைத் தலைவன் அவனை நோக்கி அவன் அங்கே என்ன செய்துகொண்டிருக்கிறனென்றும், அவன் ஏன் தன் குடும்பத்தாரோடு அவ்விடத்தை விட்டுப் போகவில்லை என்றும் வினவினன். சிறுவன் தான் யாருமற்றவனென்றும், தனக்குப் பரோப

காரத்தில் விருப்பம் மிகுதியென்றும், சண்டையில் இத்தாலியர் தம் பகைவரைத் தோற்றோடச் செய்வதைப் பார்க்கும் பொருட்டுத் தன் உயிரைக் கொடுக்கவும் துணிந்து அங்கே தான் நின்றுகொண்டிருப்பதாகவும் மறுமொழி கூறினன். "இப்பக்கமாக ஆஸ்டிரியர் யாரேனும் வந்தனரா?" எனத் தலைவன் வினவ, "சிறுவன் மூன்று நாட்களாக ஒருவரும் வரவில்லை" எனப் புகன்றான்.

தலைவன் குதிரையி லிருந்த வண்ணமே சற்றுச் சிந்தித்தான். அவன் கீழே குதித்துக் குடிசையுள் நுழைந்து மேலே ஏறி நோக்கினன். அவனால் நெடுந்தூரம் பார்க்க முடியவில்லை. அவன் உடனே கீழே யிறங்கித் தலைவாசலிலிருந்த வானுற ஓங்கிய ஒரு மரத்தின் முன் நின்று அதன் மேல் யாராவது ஏறிப்பார்த்தால் நெடுந்தூரம் வரைக் காணலாமென எண்ணித் தன் வீரரை ஏறிட்டுப் பார்த்தான். அவன் திடீரென்று அப்பையனை நோக்கி, "வீரச் சிறுவனே! நீ நெடுந்தூரத் திலிருக்கும் பொருள்களைப் பார்த்தறியும் கூரிய நோக்கு உடையாயோ? உனக்கு இம்மரத்தின்மேல் ஏறமுடியுமோ?" என வினவினன். சிறுவன், "அரை நொடியில் ஏறிவிடுவேன். எனக்கு நெடுந்தூரத்திற் பறக்கும் சிறு பறவையையும் பார்த்தறியும் வல்லமை உண்டு" என விடை பகர்ந்தான்.

தலைவன் :—தம்பி! உடனே மரத்தில் ஏறு. உன் கண்ணுக்கெட்டிய வரையில் எங்கேயாவது பகைவீரர் பதுங்கி யிருக்கின்றனரா? பார்த்துச் சொல். உனக்கு வேண்டிய பரிசுகள் தருவேன்.

சிறுவன் :— ஐயா! பரிசா? எதற்காக? நான் லாம்பர்டியனல்லனோ?



இளைஞன் தனது காற் செருப்பைக் கழற்றி அரைச் சல்லடத்தை இறுக்கிக் கட்டி உடனே அம்மரத்தின்மேல் ஏறத் தொடங்கினன். அப்போது படைத்தலைவன் ஏதோ தன்னை யறியாமலே அச்சமுற்றவனைப் போல அவனைத் தடுத்தான். சிறுவன் திரும்பிப் பார்க்கவே, தலைவன் முன்னல் பார்த்துக்கொண்டே கவனமாக ஏறும்படி அவனை எச்சரித்தான்.

வீர இளைஞன் அரைக்கணப் பொழுதில் மரத்தின் உச்சியை யடைந்தான். அவனுடைய இடுப்பு வரை அவனைக் கிளைகள் மறைத்தன. ஆனல் இடுப்புக்கு மேல் அவனுடலுக்கு ஒரு பாதுகாவலும் இல்லை. சூரியனுடைய ஒளியால் அவனுடைய முகம் பளபளவென்று விளங்கிற்று. அவன் மிக உயரத்தி லிருந்தபடியால் ஒரு சிறு பூச்சி போலக் காணப்பட்டான்.

தலைவன் :—நேரே கவனித்துப் பார்! உனக்கு என்ன தெரிகிறது?

சிறுவன் :—(கையை நெற்றிமேல் வைத்து சூரிய வெளிச்சத்தைத் தடுத்து) அதோ, அரை மைலுக்கப்பால் இரண்டு ஆஸ்டிரிய வீரர்கள் வெள்ளுடை யுடுத்துக் குதிரை மேற் கொண்டு பாதையில் நிற்கின்றனர்.

தலைவன் :—அவர்கள் என்ன செய்கிறார்கள்?

சிறுவன் :—அவர்கள் அசையாது நின்றுகொண்டிருக்கிறார்கள்.

தலைவன் :—சரி, வலதுபுறம் திரும்பிப் பார்; யாது காண்கிறாய்?

சிறுவன் :—ஓ! மரங்களுக்கிடையே பளபள வென்று மின்னுகின்றன. அவை துப்பாக்கி முனைகளே. மரங்க

ளுக் காப்பாலுள்ள வயல்களில் பகைவர்கள் ஒளிந்திருக்கிறார்கள்போலும்.

அப்போது ஒரு குண்டு பாய்ந்து வந்து குடிசையின் முன்னால் கீழே விழுந்தது.

தலைவன் :—உடனே கீழே இறங்கு.—அவர்கள் உன்னைப் பார்த்துவிட்டார்கள் ; வேறொன்றும் வேண்டாம். இறங்கு கீழே.

இளைஞன் :—அச்சமில்லை, அச்சமில்லை. வேறு ஏதேனும் பார்க்கவேண்டுமா ?

தலைவன் :—இறங்கிவா. இடதுபுறம் என்ன இருக்கிறது ?

சிறுவன் இடதுபுறம் திரும்பினான். அவ்வேளை மற்றொரு குண்டு விண்ணிற் பறந்துவந்து மரத்தை உரைசிக்கொண்டு போயிற்று. "உடனே இறங்கு" எனக் கூவிக் கட்டளையிட்டான் அஞ்சிய தலைவன்.

இளைஞன் :—இதோ வந்துவிட்டேன். ஆனால் நான் கொஞ்சமும் அஞ்சவில்லை. என்னை மரம் பாதுகாக்கிறது. இடதுபுறம் தெரியவேண்டுமா ?

தலைவன் :—ஆமாம். ஆனால் கீழே இறங்கு.

இளைஞன் :—சரி. அதோ, ஒரு சிறு கோவில் தெரிகிறது. அதோ—

அப்பொழுது மூன்றாவது குண்டு சீறிக் கொண்டு விண்ணைக் கிழித்து வந்தது. ஒருநொடிப்பொழுது பையன் கிளையில் தொங்கிக்கொண் டிருப்பவன் போலக் காணப்பட்டான். மறு நொடியில் தலைகீழாக அவன் மரத்திலிருந்து கைகளை விரித்துக்கொண்டு மல்லாந்து விழுந்தான். "ஐயோ,

பையா!'' என்று கூவிக்கொண்டு தலைவன் ஓடினான். இளைனுடைய இடது புறத்திலிருந்து இரத்தம் பெருகி வந்தது. மூன்று வீரர்கள் குதித்தோடி வந்தார்கள். தலைவன் பையனுடைய சட்டையைத் திறந்தான். குண்டு சிறுவனுடைய இடது மார்பிற் பாய்ந்திருந்தது. "இறந்துவிட்டான்'' எனக் கூவினான் தலைவன். "இல்லை. உயிர் இருக்கிறது.'' என்று ஒரு வீரன் கூறினான். "ஐயோ வீர இளைஞனே! தைரியமாயிரு; தைரியத்தைக் கைவிடாதே'' என்று தலைவன் சொல்லி அப்பையனை மார்போடு அணைத்துக்கொண்டு தன் கைக்குட்டையால் புண்ணை அழுத்தி உதிரம் வெளி வராமல் தடுத்தான். அப்போது வீரச் சிறுவன் கண்களை உருட்டி விழித்துப் பார்த்தான். அவனுடைய தலை கீழே சாய்ந்தது; அவன் வீர சுவர்க்க மடைந்தான்.

தலைவன் அவ்விளைஞனைச் சிறிது நேரம் வைத்திருந்தான்; கவலையால் அவன் முகம் வெளுத்தது; சற்று நேரம் கூர்ந்து பார்த்து விட்டுப் பையனைப் புல்லின்மேல் கிடத்தினான். அவன் கண்களில் நீர் ததும்பிற்று. "ஐயோ, அருமைச் சிறுவனே! உன்னுடைய வீரமே வீரம்! உன்னை இழந்தோமே!'' என அவன் கண்ணீர் வடித்தான். வீரர்கள் அடக்க முடியாத மனவருத்தத்தோடு அசைவற்று நின்றார்கள். தலைவன் குடிசைக்குள்ளே போய் அங்கே பறந்து கொண்டிருந்த கொடியை எடுத்து வந்து சிறுவனுடைய தலைப்புறத்தில் நட்டான். வீரர்கள் அவனுடைய செருப்பையும், குல்லாவையும், கத்தியையும், அவன் சீவிய கம்பையும் எடுத்து வந்து அவன் பக்கத்தில் வைத்தார்கள். அவர்கள் ஒரு கணம் அசைவற்று நின்றார்கள்.

தலைவன்:—நண்பர்களே! இப்பையன் ஒரு படைவீரனாகவே இறந்தான். ஆதலால் படைவீரருக்குரிய இரா

னுவ மரியாதைகளை யெல்லாம் இவன் பெறுவானாக ; புறப் படுங்கள்.

இங்ஙனம் கூறிய தலைவன் அவ்வீர இளைஞனுடைய கையை முத்தமிட்டுத் தனது குதிரையில் ஏறினான். ஏனை யோரும் தமது குதிரைகளில் ஏறிக்கொண்டனர். உடனே அப்படை முன்னே சென்றது.

சான்மார்ட்டி நோவில் வெற்றி மாலை சூடிய லாம் பர்டியச் சேனை அன்று மாலையில் அதே வழியாகச் சென் றது. முன்னணியில் சென்ற படைத் தலைவன் அச்சிறுவ னைக் கண்டு தலைவணங்கினான். அவ்வீர இளைஞனுடைய தீரச் செயலை எல்லோரும் அறிந்திருந்தார்கள். ஒரு வீரன் சில பூக்களைப் பறித்து அவன்மேல் தூவினான். அச்சேனா வீரரனைவரும் அவன்மேல் மலர்களைப் பெய்து பணிந்தார் கள். ஒருவன் தனக்குக் கிடைத்த பரிசுப் பதக்கத்தை அச் சிறுவனுக்குச் சூட்டினான். அந்தோ, அவ்வீரச் சிறுவன் ! அவனுடைய திருமுகம் தனதருமை நாட்டுக்காகத் தன் உயிரைக் கொடுக்கும் பேறு தனக்குக் கிடைத்ததே என மகிழ்ச்சியுடன் மலர்ந்திருப்பதைப்போலப் புல்லின்மேல் பொலிவுடன் திகழ்ந்தது ! லாம்பர்டிய வீர இளைஞன் புகழை இன்றும் அந்நாட்டினர் மறவாமல் போற்றி வருகின் றனர்.

8. சொற்கள்

நாம் மனத்தில் நினைக்குங் கருத்துக்களைப் பிறருக்குத் தெரிவித்தற்குப் பாஷை அல்லது மொழி பயன்படுகின் றது. நாம் பிறந்தது முதற் பேசிவரும் பாஷை தமிழ் மொழியாகும். தொன்றுதொட்டு இம்மொழி மிக மேலான நிலைமையிலிருந்து வந்திருக்கிறது. தமிழானது

பழைமைக்கும், இனிமைக்கும், தனிமைக்கும் ஒப்புயர் வற்ற ஒரு பாஷையாகும்.

தமிழ் என்னும் சொல்லிற்குப் பலவிதமாகப் பொருள் உரைப்பார்கள். அறியாமையை நீக்குவது என்னுங் கருத் துக் கொண்ட திரமிளம் என்னும் வட சொல்லே தமிழ் என மாறிற்றென்பர் சிலர். தமிழ்=இனிமை; இம் மொழி இனிமையுடையது பற்றி இதற்குத் தமிழ் என்னும் நாமம் வந்ததாக வேறு சிலர் கூறுவர். தமி=ஒப்பில்லாமை; ஆத லால் தமிழ் என்பதற்கு ஒப்பில்லாத பாஷை என்று பொருள் படுமென்பர் பின்னும் சிலர். தமி=தனி; தனி "ழ" கரம் சம்ஸ்கிருதத்தில் இராமல், தமிழ்ப் பாஷையில் மட்டுமே யிருப்பதால் தமிழ் என்னுஞ் சொல் வந்ததாக ஒரு சார்பார் விவரிப்பர். தமிழென்பதில், 'த' கரம் வல்லினம்; 'ம' கரம் மெல்லினம்; 'ழ' கரம் இடையினம்; ஆதலால் 'தமிழ்' மூவின முடையதைக் குறிக்கு மென்பர் மற்றுஞ் சிலர். தமிழராய்ப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் அதைப் பிழை யின்றிப் பேசவும், எழுதவும் பழகி, அதனிடத்து அன்பு பாராட்டி, அதை ஓங்கச் செய்வது நமது கடமையாகும்.

ஒலிக் குறிப்புக்களே பாஷைக்கு அடிப்படையான ஆதாரம். இவ்வொலிக் குறிப்புக்கள் வரிவடிவத்தில் எழுத் தெனப்படும். எழுத்துக்கள் சேர்ந்து சொற்களும், சொற் கள் சேர்ந்து வாக்கியங்களும், வாக்கியங்கள் சேர்ந்து பாஷையு மாகின்றன.

தமிழ்ச் சொற்களைக் கவனிக்கு மிடத்துப் புகையிலை, வேலன், மனையாள் முதலிய சொற்கள் ஒவ்வொரு காரணம் பற்றி அமைந்திருப்பதால் இவை காரணப் பெயர்க ளென்றும், மரம், கல், மண் முதலிய சொற்கள் காரணங் கூற முடியாமற் பொருளின் பெயராய் வந்திருப்பதால்

இவைகளை இடுகுறிப் பெயர்களென்றுங் கூறுகிறோம். தாய் மொழிப் பாடங்களிற் காணப்படும் இவ்விருவிதச் சொற்களையும் அவ்வப்போது கவனித்தல் நலமாகும்.

நம் மொழியில் இதர பாஷைகளின் சொற்களும் வந்து கலந்துள்ளன. இவ்விதங் கலப்பது ஒரு பாஷையின் அபிவிருத்திக்கு அவசியமே. அரசாங்க முறையிலும், மத சம்பந்த மாகவும், வியாபார முறையிலும், நவீன சாஸ்திர முறையிலும், தேவையான சொற்களைப் பல்வேறு பாஷைகளிலிருந்தும், நமது பாஷையில் வேண்டிய அளவு அமைத்துக் கொள்ளுதல் அதன் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

நமது பாஷையை ஆராயுமிடத்து வடமொழிச் சொற்கள் நூற்றுக்கணக்காக அதன்கண் விரவியுள்ளதைக் காண்போம். ஜ, ஷ, ஸ, க்ஷ, ஹ முதலிய ஆரிய மொழி எழுத்துக்கள் நமது நெடுங்கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வெழுத்துக்க ளுள்ள பதங்கள் வடமொழிச் சொற்களென்று எளிதில் அறியலாம். பக்ஷி, பக்ஷணம், ஜாதகம், ஹாரம் முதலிய வடமொழிச் சொற்களைத் தமிழில் பட்சி, பட்சணம், சாதகம், ஆரம் என எழுதுகிறோம். மாஸம், வருஷம், ராமன், யந்திரம் முதலிய ஆரிய மொழிச் சொற்கள் தமிழில் மாறிவரும் விதங்களை ஆங்காங்குக் கண்டறிதல் வேண்டும்.

முகம்மதியர் ஆட்சியில் நம் நாடு சிறிதுகாலம் இருந்தமையால் அசல், ஜரூர், ஜாகீர், பைசல், தஸ்தாவேஜு, ஜமாபந்தி, தாசில்தார், திவான் பகதூர், நாஸர், நமூது, ஜாப்தா முதலிய பல உருது பாஷைப் பதங்களும், நமது மொழியிற்சேர்ந்துள்ளன. வேடிக்கை, எச்சரிக்கை, கெம்பு, வாடகை முதலிய தெலுங்குப் பதங்களும் தமிழ் மொழி

யிற் காணப்படுகின்றன. தற்கால ஆங்கில அரசாட்சி பற்றி லாந்தர், கவர்னர், ஈரங்கி, ஜெயில், காபி, கிளப், லைஸன்ஸ், சிலேட், மெடல், சர்க்கஸ், டிராமா, கிராமோபோன், டாக்டர், மாஜிஸ்டிரேட் முதலிய இங்கிலீஷ் சொற்களும் இப்பொழுது பழக்கத்தில் வந்துள்ளன.

மேலும் மற்ருெரு விதச் சொற்களைப் பற்றி நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். கிருஷ்ணன் என்னும் பெயர் கிட்டு, கிச்சு என்றும், தலைஅணை என்பது தலகாணி என்றும், வருகிருர் என்பது வரார் என்றும் இழிவுற்றுக் கிராமியச் சொற்களாக மாறுகின்றன. இவ்வாறு மருவிச் சிதைந்த சொற்கள் பல, தினசரிப் பேச்சில் வழங்குகின்றன. இவைகளை அறவே விலக்குதல் வேண்டும்.

பல்வேறு மொழிகளின் சொற்கள் நமது பாஷையில் விரவி வருவது ஒரு சார்பாக நல மெனினும், நமது தாய் மொழியின் தூய்மையைப் போற்றும் பொருட்டு, அன்னிய பாஷைச் சொற்களைக் கூடிய வரையில் விலக்கித் தனித் தமிழில் பேசவும் எழுதவும் பழகுதல் வேண்டும். இவ்வாறு செய்தல் தாய் மொழியைப் பற்றிய நமது கடமையாகும்.

9. தமிழ்மொழிப் பாட்டு

யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்குங் காணேம்.
பாமர ராய் விலங்குகளாய் உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமம் அது தமிழர் எனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்ருே ? சொல்லீர்.
தேமதுரத் தமிழோசை உலக மெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

யாம் அறிந்த புலவரிலே கம்பனைப் போல்,
வள்ளுவர் போல், இளங் கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை ; உண்மை ;
வெறும் புகழ்ச்சி யில்லை.
ஊமை யராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம் ; ஒரு சொல் கேளீர்.
சேமமுற வேண்டு மெனில் தெரு வெல்லாம்
தமிழ் முழக்கஞ் செழிக்கச் செய்வீர்.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியிற் பெயர்த்தல் வேண்டும்.
இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்
மொழியில் இயற்றல் வேண்டும்.
மறைவாக நமக்குள்ளே பழங் கதைகள்
சொல்வதில் ஓர் மகிமை யில்லை ;
திறமான புலமை யெனில் வெளி நாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

—பாரதியார்.

10. மோஸஸ் முனிவர்

பூர்வகாலத்தில் எகிப்து தேசத்தைப் பார்வோன் என்ற ஒரு கொடுங்கோல் மன்னன் ஆண்டு வந்தனன். அக்காலத்தில் பாலஸ்தீன நாட்டைச் சேர்ந்த இஸ்ரவேலர் என்ற ஒரு பெரிய சந்ததியார், எகிப்தியருக்கு அடிமைகளாய் அவர் நாட்டில் வாழ்ந்து வந்தனர். தனது தேசத்தாரைவிடப் புதிதாகக் குடிவந்த இஸ்ரவேலரது ஜன அபிவிருத்தியைக் கண்டு பொறாமையுற்ற பார்வோன் அவர்களைக் கொடுமையாக நடத்தக் கருதி, மண் சுமத்தல் முதலிய இழி தொழில்களைச் செய்ய வற்புறுத்தி அவர்களைத் துன்புறுத்தினன்.

இதற்கெல்லாம் இஸ்ரவேலர் மனங்கலங்கவில்லை. அவர்களது பெருக்கத்தைத் தடுக்கும்பொருட்டு இஸ்ரவேலருக்குப் பிறக்கும் ஒவ்வொரு ஆண் மகவையும் நீல நதியில் போட்டுவிடும்படி மன்னன் ஆஞ்ஞாபித்தான்.

லேவியன் குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இஸ்ரவேல் ஸ்திரீ ஓர் ஆண் குழந்தையை ஈன்றாள். அக்குழந்தை மிகவும் அழகாய் இருப்பதைக் கண்டு ஆற்றிலெறிய மனமில்லாமல் அதை எவ்விதத்திலும் உய்விக்க ஓர் உபாயஞ் செய்தாள். நாணற் புல்லினால் ஒரு பேழை செய்து, தண்ணீர் ஏறாதபடி வச்சிரத்தால் சந்து பொருத்தி, அதனில் குழந்தையைப் படுக்க வைத்து, இராஜஸ்திரீகள் நீராடும் துறைக்கருகில் ஒரு நாணற் புதரில் விடுத்துத் தனது குமாரியைப் பெட்டிக்குக் காவலாக நிற்கும்படி பணித்து இல்லம் ஏகினாள்.

சிறிது நேரத்தில் பார்வோனது குமாரி அத் துறைக்கு நீராட வந்தாள். குழந்தையின் அழுகைக் குரலைக்கேட்ட அவள் நாற்புறமும் சுற்றிப் பார்க்கையில், நாணற் புற்களின் மத்தியில் ஒரு பெட்டி மிதப்பதைக் கண்ணுற்றாள். உடனே தனது தோழிகளில் ஒருத்தியை ஏவி, அதை எடுத்துவரச் செய்து திறந்து பார்த்ததும், அதில் ரூபலாவண்யமுள்ள ஓர் ஆண் குழந்தை கிடப்பதைக் கண்டு பரவசமடைந்தாள். பிறகு அது இஸ்ரவேலர் குழந்தையென்று அறிந்தும் கொல்ல மனமில்லாமல் அதை வளர்க்க உறுதி கொண்டாள். இப் பச்சைப் பிள்ளையை எவ்வாறு பாலூட்டி வளர்க்கலாம் என்று அருகிலிருந்தவர்களை வினவினாள். காவல் காத்திருந்த குழந்தையின் தமக்கை, ராஜ குமாரியை அணுகிப் பாலனுக்குப் பால் கொடுத்து வளர்க்கத் தகுந்த தாதி ஒருத்தி அருகிலிருப்பதாகவும், வேண்டுமானால்

அழைத்து வரக் கூடுமென்றும் பணிவுடன் நவின்றாள். இள வரசியின் ஆஞ்ஞைப்படி அப்பெண் தாதியை அழைத்து

நாணற் புற்களின மத்தியில் மோஸஸ் அகப்படுதல்.

வர, அவளை நோக்கி, "நீ இக்குழந்தையை வளர்த்துவா; நான் உனக்கு அதற்கான ஊதியம் அளிப்பேன்" என்று சொல்லி அம்மதலையை அவளிடம் பொறுப்புக் கட்டினாள்.

பாலனும் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான். தக்க பருவம் வந்தவுடன் தாயும் அவனை அரசன் மகளிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பித்தாள். தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்ட அச் சிறுவன் எகிப்து பாஷையில் அப்பொருள்படும் 'மோஸஸ்' என்னும் பெயர் அளிக்கப்பட்டு அரண்மனையில் வளர்ந்து வந்தான்.

இந்த மோஸஸ் என்பவர் நெடிய உருவமும், சிவந்த மேனியும், நல்ல எழிலும், வனப்பும் வாய்ந்தவர்; இராஜ லக்ஷணங்கள் யாவும் பொருந்தியவர். அவரிடம் சாந்தம், பொறை, தயை, அன்பு முதலிய நற்குணங்கள் குடி கொண்டு விளங்கின. கருவிலே திருவுடையவ ராகி இணை யற்றுத் திகழ்ந்தனர். இவர் இராஜ மாளிகையில் வளர்ந்து வரினும் தமது ஜனமாகிய ஏபிரேயரோடு அதிகப் பழக்க முடையவ ராக இருந்தனர். நாளடைவில் எகிப்தியரிடம் இவருக்கு இயல்பாகவே வெறுப்பு மிகக் கூர்ந்தது.

இவ்வாறு சில ஆண்டுகள் கழிந்தன. இஸ்ரவேலரிடம் இவர் காட்டிய பற்று வெளியாகி மன்னனுக்குத் தெரிந்தது. அதை யறிந்த பார்வோன் வெகுண்டு இவரைக் கொலைபுரிய எத்தனித்தான். அதனால் காவலன் கைக்குத்தப்பி மோஸஸ், மிதியான் நாட்டிற்கு ஓடிப்போய் விட்டார். அங்கு சிப்பேராள் என்னும் ஒரு மாதைத் திருமணஞ் செய்து தமது மாமனர் வீட்டிலேயே ஆடுகள் மேய்க்குந் தொழிலில் அமர்ந்து, காலங்கழித்து வந்தார்.

ஒரு நாள் மோஸஸ் காட்டில் ஆடு மேய்க்கும்பொழுது, கடவுள் அவருக்கு ஒரு முட்செடியி னிடத்தே ஜோதி ரூப மாகக் காட்சி கொடுத்தார். முட்செடியில் அக்கினி ஜொலித் தெரிந்தும் செடி வேகாம லிருந்தது. அந்த அதிசயம் யாதென்று காண மோஸஸ் முட்செடியி னருகிற் சென்றார். அப்பொழுது ஓர் அசரீரி வாக்குப் பின்வருமாறு எழுந் தது :—“மோஸஸே! என் ஜனமாகிய இஸ்ரவேலரை எகிப்தியரின் கையினின்று இரட்சித்து, அவர்களது சொந்த நாடாகிய பாலஸ்தீனத்தில் சேர்க்கச் சித்தம் கொண்டுளேன். நீ எகிப்து சென்று இஸ்ரவேல் ஜனத்தின் மூப்பரைக் கூட்டிக்கொண்டு பார்வோன் சந்நிதியிற் போய்

எபிரேயரை விடுவிக்க வேண்டு. பிறகு அவர்களைப் பாலஸ்தீனத்திற்கு அழைத்துச் செல்." அதைச் செவியுற்ற மோஸஸ், "தேவரீர் ஆணைப்படியே செய்வேன். ஆனால் என் வார்த்தையை மூப்பர்கள் நம்ப வேண்டுமே அதற்கு யாது செய்வேன்" என்றான். அப்பொழுது பகவான் மோஸஸை நோக்கி "இதோ உன் கையில் இருக்கிற கோலைக் கீழேம்பாடு" என்றார். போட்டவுடன் கோல் பாம்பாயிற்று. பின்பு "வாலைப் பிடி" என்றார். அப்பொழுது அது பழையபடி கோலாயிற்று. பின்னர் அவனது கையை மடியிலே வைத்தெடுக்க ஏவினார். கையானது பனியினும் வெண்மையாகத் தோன்றிற்று. மறுமுறையும் கையை அவர் ஏவிய படி மடியில் வைத்தெடுக்க அது முன் போலவே ஆயிற்று. "இன்னும் அடையாளம் வேண்டுமாயின் தண்ணீரை அள்ளித் தரையில் ஊற்று; அப்பொழுது அது இரத்தமாகும்" என்று ஈசன் மொழிந்தார். இவ்வற்புதங்களை யெல்லாம் நேரிற்கண்ட மோஸஸ் பெரிதும் தைரியமடைந்து இறைவனது ஆணையைச் சிரமேற் கொண்டு தன் மனைவி மக்களுடன் எகிப்து தேசம் சென்று அங்கிருந்த இஸ்ரவேல் மூப்பருக்குப் பகவா னருளிய அறிகுறிக ளான அற்புதங்களைக் காட்டி அவரது சித்தத்தைத் தெரிவித்தார்.

பின்பு, மோஸஸ் தமக்கு அருந்துணைவரா யுள்ள ஆரோன் முதலியவருடன் பார்வோனது திருவோலக்க மண்டபம் சென்று கர்த்தருடைய பண்டிகை கொண்டாடும் பொருட்டு இஸ்ரவேலரை, மூன்று நாள் பிரயாணத்திற்கப்பால் அழைத்துச் செல்ல அவனிடம் அனுமதி வேண்டினர். முன்னிருந்த மன்னன் மரித்துவிடப் புதிய பார்வோன் ஒருவன் அரசாண்டு வந்தான். அவன் கடின சிந்தை யுடையவனாகி அவரது வேண்டுகோளை மறுத்து

விட்டான். அப்பொழுது மோஸஸ் தனது கோலைக் கீழே நழுவவிட்டார். அது பாம்பாகி எகிப்திய பிடாரர் அனுப்பிய பாம்புகளை யெல்லாம் விழுங்கிவிட்டது. அப்பொழுதும் பார்வோன் இசையவில்லை. பின்பு மோஸஸ் தனது தெய்வ பலத்தால் நீர் நிலைகளை இரத்தமாக்கியும், தேரை, தவளைகளால் நிலங்களை நிரப்பியும், பேன்களால் துன்புறுத்தியும், வண்டுகளால் வருத்தியும், கொள்ளை நோய்களால் உயிர்களைச் சேதப்படுத்தியும், வெட்டுக்கிளிகளால் விளை பொருள்களை அழித்தும், எங்கும் இருளைப் பரவச் செய்தும், பல பீடைகளை விளைவித்தனர். முடிவில் பார்வோன் அஞ்சி, இஸ்ரவேலரை அழைத்துச செல்ல அனுமதித்தான். அவர்கள் அத்தேச எல்லையிலுள்ள சமுத்திரக் கரையிலே வந்து தங்கினுர்கள்.

இவ்வாறு எபிரேயர் தெய்வ வல்லமையால், அடிமைத் தன்மையினின்றும்விடுவிக்கப்பட்டுஎகிப்துதேசத்தினின்று நீங்கியது பார்வோனுக்கு நாணம், வெகுளி இவைகளை விளைவித்தது. உடனே அவன் தனது நால்வகைச் சேனையையும் ஏவி, அவர்களைப் பின் தொடர்ந்து சென்று மீட்டுவரக் கட்டளை பிறப்பித்தான். இஸ்ரவேலர் எகிப்தியப் படைகளைக் கண்டு அஞ்சினுர்கள். ஆயினும் மோஸஸ் அவர்களைத் தேற்றித் தனது கையிலுள்ள கோலை நீட்டினுர். திடீரென்று கடல் இரண்டாகப் பிரிந்து தரை தோன்றிற்று. அத் தரை வழியாக இஸ்ரவேலர் சாகரத்தைக் கடந்து அக்கரை சேர்ந்தனர். துரத்திக்கொண்டு வந்த எகிப்தியரும் அப்புதுத் தரையின் மத்தியில் வந்தடைந்தனர். மோஸஸ் அக்கரையில் நின்று தன் கரத்திலுள்ள கோலை நீட்டினுர். அப்பொழுது கடல் முன்போல் ஒன்று சேர்ந்து எகிப்திய சேனைகளை மூடிக்கொண்டது. அவர்களில் ஒருவரும் மீதியின்றித் தண்ணீரில் மூழ்கிப் போயினர்.

பிறகு மோஸஸ் தன் இனத்தாரைப் 'பாலும் தேனும் பாயும் கானன்' தேசத்திற்கு வழி நடத்திக்கொண்டு போனார். நாற்பது ஆண்டுகள் இவர்கள் வனாந்தரங்களில் திரிந்து செல்ல நேர்ந்தது. இவர்கட்கு உணவு கிடைக்காமை பற்றிப் பகவான் வானத்தினின்று 'மன்னு' என்னும் ஒருவித ஆகாரத்தைச் சொரியச்செய்தார். தண்ணீர் கிடைக்

மோஸஸ் பாறையிலிருந்து வெள்ளம் வருவித்தல்.

காத ஒரு தருணத்தில் ஒரு பாறையை மோஸஸ் முனிவர் தேவன் ஆணைப்படி அடிக்க வெள்ளம் பிரவாகித்து வந்தது. சீனய் மலையில் தங்கியபொழுது மோஸஸ் பத்துக் கற்பனைகள் என்னும் நீதிகளை உபதேசித்தார். ஒருகால் கடவுள் வார்த்தையை இம்முனிவர் மதிக்காததால், "நீ

கானன் தேசத்தைப் பார்ப்பாய். ஆனால் அதில் பிரவே சிக்க மாட்டாய்'' என்று ஈசுவர சாபம் பெற்றிருந்ததால் அவர் அந்நாட்டுள் செல்லாது, புறம்பே யிருந்த மலையடி வாரத்தில் தமது காலத்தைக் கழித்து, தமது 120-வது வயதில் இறைவனடி அடைந்தார்.

இம்முனிவரது உத்தம சரித்திரம் விவிலிய நூலில் விவரித்து எழுதப்பட்டிருக்கிறது.

11. புற்கள்

பச்சைப் பசேலென மைதானங்களிற் பரவி முளைத்து நம் கண்ணைக் கவர்வன புற்களே. அவை பல்வேறு வகை களாய் மனிதர்களுடைய வாழ்க்கைக்கு இன்றியமையா தனவா யிருக்கின்றன. நாள் முழுவதும் வேலை செய்து களைத்துப்போன மனிதன் தன்னுடைய சலிப்பைப் போக் கிக் கொள்ளும்படி உட்காருவதற்காகக் கருணை நிதியாகிய கடவுள் எங்கும் விரித்து வைத்திருக்கிற பச்சை இரத் தினக் கம்பளங்களே அங்கங்கே செறிந்து காணப்படும் புல் வெளிகள். "காலைக்கல், மாலைப்புல்'' என்பது நம் நாட்டு முதுமொழி.

புல் வெளிகள் இயல்பாக அமைந்திருக்கும் இடங்கள் நாட்டுப் புறங்களே. நகர்ப் புறங்களிலோ தமது வசதிக்காக மக்கள் புல் வெளிகளை உண்டாக்கி வளர்க்கின்றார்கள். சென்னை, மதுரை போன்ற பெரிய நகரங்களில் நகர சபை யார் பெரிய தோட்டங்களை அமைத்து நாம் கண்ணாரக் கண்டு மகிழ அவைகளில் புல் வெளிகளை வளர்த்துப் பாது காக்கின்றனர். மாலை வேளைகளில் ஆடவரும், மகளிரும், சிறுவர்களும், சிறுமிகளும் அங்கங்கே அப் புற்றரைகளில் அமர்ந்து உல்லாசமாகப் பொழுது போக்குகிறார்கள்.

விண்மீன், கடல் மணல் இவைகளைப்போல் புல் வகைகள் எண்ணிறந்தன. அறுகு, கோரை, தருப்பை, நாணல், மூங்கில், கரும்பு, நெல், சோளம், கம்பு, கோதுமை முதலியன புற்களே. அவைகளுட் சில மனிதர்களுடைய முயற்சி யில்லாமலே வரப்புக்களிலும், தோட்டங்களிலும், காடுகளிலும் முளைத்து வளர்கின்றன. அவை பூத்துக் காய்த்துத் தம் விதைகளைச் சிதறி அவைகளை எண்ணிறந்த பறவைகளுக்கு உணவாக அளிக்கின்றன. புல் வெளிகள் இல்லாமற்போனால் ஆடு மாடுகள், மான் முதலிய பல விலங்கினங்களே உலகத்தில் இல்லாமல் அழிந்துபோம். புல் லினங்களைச் சேர்ந்த நெல்லும், கோதுமையும் இல்லாமற் போனால் மனிதர்களைத்தான் மண்மேல் கண்டுபிடிக்க முடியுமா? மேலும் உயிர்ப் பிராணிகள் வெளி விடுகின்ற மூச்சிலுள்ள கரியமில வாயுவை உட்கொண்டு அவைகளின் சுக வாழ்க்கைக்கு இன்றியமையாத பிராண வாயுவை வெளியிட்டுக் காற்றைச் சுத்தப் படுத்தும் வேலையை எங்கும் பரந்து கிடக்கும் இப்புற்கள் செய்யாவிடில் எந்தப் பிராணியும் உயிர் தரிக்காது. ஆதலின் மா, பலா முதலிய பல விருட்சங்களையும், ரோஜா, மல்லிகை முதலிய பூச் செடிகளையும் விட நமக்கு நன்மை விளைவிப்பன புற்களே.

இங்ஙன மாகப் புற்கள், உணவையும் தண்ணீரையும் போல மனிதனுடைய சுக வாழ்க்கைக்கு இன்றியமை யாதவை என்றாலும் நாம் அவைகளின் இனங்களையும், அமைப்பையும், குணத்தையும் ஆராய முன் வராது அசட்டை செய்கிறோம். புல்லினம் மர இனங்களி னின்று வேறு படுகிறது. “மர மெனப்படுவ அகக் காழனவே, புல்லெனப் படுவ புறக் காழனவே” என்று ஆசிரியர் தொல்காப்பிய

னர் தமது நூலில் புல் இது, மரம் இது என விளக்கியிருக்கிறார். காழ் என்பது வயிரம். உட் பகுதியில் வயிரமுடையன மரங்கள். மா, தேக்கு முதலிய மரங்களுக்கு வயிரம் உட் பகுதியிலேயே அமைகின்றது. புற்களில் கடின பாகம் புறத்திலேயே இருக்கிறது. கரும்பு, மூங்கில் முதலியவற்றிற்கு வயிரம் உள்ளே அமையாமல் புறத்திலேயே விளைகின்றது.

ஏனைய தாவரங்களுக் கிருப்பது போல் புற்களிலும் வேர், தண்டு, இலை, பூ, காய் என்னும் உறுப்புக்கள் உள. இவைகளின் வேர்கள் மெல்லிய சல்லி வேர்களாகும். அறுகம் புல் முதலிய சிறு புற்களின் தண்டுகள் மெல்லியதாக அமைந்து, கணுவிற்குக் கணு வேர்கள் விட்டு பூமியில் படருந் தன்மையன. இவைகளை ஆடு மாடுகள் மேய்ந்துவிட்டாலும், அல்லது மனிதர்கள் அரிந்துவிட்டாலும், வேர்கள் நிலத்தினின்று பெயர்க்கப்படாமையால் மறுபடியும் இப்புற்கள் தழைத்து வளரும். புற்களின் இலைகள் காம்புகளின்றி நீண்டு, நுனி கூர்மை யாகவும் சிலவற்றின் ஓரம் கருக் காகவும் உள. முளையில் இவைகள் சுருண்டிருந்து வளருங்கால் பிரியும். எவ்வளவு காற் றடித்தாலும் மழை பெய்தாலும் இவைகள் சாய்ந்து கொடுக்குமே யல்லாமல் சேதப்படா. புற்களின் பூக்கள் மிகச் சிறியனவாய் இருக்கின்றன. அவைகளைப் பரிசோதித்தால் ஆண் பாக மாகிய மகரந்தத் தண்டு, மகரந்தப் பை, மகரந்தப் பொடிகளையும் பெண் பாகமாகிய கிலம், அண்டாசயம் முதலிய பாகங்களையும் காணலாம். மகரந்தப் பொடிகள் அண்டாசயத்தையடைந்து தொலியோடு கூடிய விதைகளாக விளைகின்றன இவ்விதைகள் பரவி விழுந்து மழை பெய்ததும் முளைத்துப் பசும் புற்களாக வளர்கின்றன. சில புற்களின் மெல்லிய

தண்டுகள் படர்ந்து ஓடி வேர் விடுவதாலும், இளம் புற்களைப் பிடுங்கி நாம் நடுவதாலும் புதிய புற்கள் உண்டாகி விருத்தியாகும்.

"சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்" என்னும் பழமொழிக் கிணங்கக் கடவுள் சிருஷ்டியில் எதையும் அற்பமென்று அலட்சியஞ் செய்தல் தகாது. அற்பப் புற்களும் அளவற்ற நன்மை பயக்கின்றன.

12. தாமரை

பூவிற் சிறந்த புனித மலரே!
நாவிற் சிறந்த நாவலர் பகரும்
அணி நவில் பொருளாய் அமைந்த மலரே!
தாயாந் தண்ணீ ரின்று ளுன்னை.
விண்மே லுலவும் விரிகதிர் எழிலின்
மயங்கி மட்டில் காதல் கொண்டு
வளர்கதிர்க் காதலன் வாண்முகம் காணக்
கண்ணெனுங் கானிதழ் கடிதினில் திறந்து
விண்ணவன் பொன்முகம் வியந்து நோக்குவை.
மாலையில் மேற்றிசை பகலவன் மறையக்
கருதருந் துயருடன் கண்ணே ரிதழ்பல
குவித்துக் கூம்பிச் சாம்பி நின்று
புவியோர் புகழப் புலரியங் குணதிசை
வருமோர் காதலன் வரவை நாடிப்
புவிசூ ழிருளிற் புரிவாய் தவமே.
பொன்மகள் பொலிபொற் பீட மாகுவை

நாவினில் நங்கையைத் தாங்கிடும் அயனும்
வண்டென மாமறை பாடிப் பாடித்
தங்குவன் உனது தகைசால் உளத்தே.
கலைமகள் பயிலும் சாலையும் ஆகுவை.
பாவும் பனுவலும் பாவலர் உளமும்
காணுங் கனவுங் கற்பனைத் திறமும்
நின்னையே சூழ்ந்து நின்றிடுங் கண்டாய்!
உலகி லுயர்நிலை பெற்று நின்ற
பண்டைப் பலநாட் டவற்றுள் புகழே
மண்டிய பாரத நாட்டின் மக்கள்
மனதிற் குகந்த மங்கல வடிவாய்,
மாநிலத் துதித்தாய் மலரே!
பூவினிற் சிறந்த புனித மலரே!

—P. R. ராஜசூடாமணி.

13. கன்னியா குமரி

கன்னியா குமரி,
24-10-32.

பேரன்புடைய நண்ப,

இன்று காலை திருவனந்த புரத்தை விட்டுப் புறப்பட்டு மோட்டார் வண்டியில் இங்கு வந்து சேர்ந்தேன். இங்குள்ள கற்சாலைகள் மேடு பள்ள மின்றி நன் னிலையி லிருப்பதால் இடையிலுள்ள ஐம்பத்து நான்கு மைல் தூரப் பிரயாண மும் வருத்தங் கொடுக்க வில்லை. சாலையினிரு புறத்திலும் நான் இதுவரைக் கண்டிராத இயற்கைக் காட்சிகள் மனோ

கரமா யிருந்தன. உயர்ந்த குன்றுகளும், தாழ்ந்த பள்ளத் தாக்குகளும், எங்கும் கமுகு, வாழை, பலா, மிளகுக் கொடிகள் முதலியன செறிந்த சோலைகளும், நிலவளம் நீர்வளம் மலிந்த கழனிகளும், பல தாமரைத் தடாகங்களும், நீரோடைகளும் வழி முழுவதிலும் காணப்பட்டன.

நமது தாய் நாட்டின் தென் கோடியாய், தமிழகத்திற் கெல்லை யாக "வட வேங்கடம் தென்குமரி" எனப் புலவர் புகழும் கன்னியா குமரி முனையை இன்று கண்ணாரக் கண்டேன். என் உள்ளத்தில் நிகழ்ந்த களிப்பையும் குதூகலத்தையும் என்னென்று கூறுவேன்! எதிரே கடல். இங்குத் தரை முடிகிறது. கீழைக்கடலும் மேலைக்கடலும் ஒருங்கே கூடுகின்றன. தெற்கிற் காண்பது இந்து மகா சமுத்திரம். கடலுக் கருகில் கன்னியா குமரியின் கோயில். இவைகளைக் காணும்பொழுது கவலைகள் நீங்கி மனதிற்கு ஒரு அமைதி உண்டாகின்றது. இதனால் இம் முனையைப் புண்ணிய க்ஷேத்திரமாக இந்துக்கள் கருதுகின்றனர். இம் முனையில் ஒரு சிற்றூர் இருக்கிறது. இங்கே வருபவர்கள் தங்கி யிருப்பதற்குப் பல வசதியான சத்திரங்கள் உள. நான் மகா ராஜா சத்திரத்தில் தங்கி யிருக்கிறேன். சில கனவான்கள், கடற் கரையில் வசிப்பதற்கு மாளிகைகள் கட்டி யிருக்கிறார்கள். கட லோரத்தில் மீன் பிடிக்கும் பரதவர்கள் சிறு சிறு குடிசைகள் கட்டிக்கொண்டு வாழ்கின்றனர்.

நமது நாட்டில் இமய மலை முதல் கன்னியா குமரி வரை யுள்ள பல இடங்களி லிருந்தும் நாள்தோறும் பலர் இங்கு வந்து, கடலில் நீராடிக் கன்னியம்மனைத் தெரிசித்துத் தமது பாவ மெல்லாம் நீங்கியது போல மனச் சாந்தி பெற்றுத் திரும்புகிறார்கள்.

இவ்வூர்க் கோயிலினுள்ள கன்னியா குமரி யம்மையின் திரு உருவம் உள்ளத்தைக் கவரும் பேரழகு வாய்ந்தது. பூசை நிவேதனங்கள் மிக்க பக்தி சிரத்தையுடனும் ஆசாரத்துடனும் நடைபெறுகின்றன. குமரியம்மன் திருமண மியற்ருமல் என்றும் குன்ருக் கன்னிக் குமரியாக இருக்கிருள். அவ்வம்மை இங் கெழுந்தருளி யிருக்குங் காரணத்தாலே இம்முனை குமரிமுனை யென்றும், இவ்வூர் கன்னியா குமரி யென்றும் பெயர் பெற்றது.

மாலையிலே கடற்கரை யோரமாக உலாவச் சென்ற பொழுது எங்குங் காணுத ஓர் அதிசயங் கண்டேன்! கடற் கரையில் அழகான பல நிற மணல்கள் காணக் கிடக்கின்றன. அவைகளில் சில குங்குமம் போலச் செம் மணலாகவும், சில மை போலக் கரு மணலாகவும், சில அரிசி போலவும், குறுணைகள் போலவும் உருவம் அமைந்துள்ளன. இக் கல் லரிசிகள், குறுணைகள், பல நிற மணல்கள், இவைகளைப்பற்றி ஒரு கதை கூறுகின்றனர். முன்னொரு காலத்திலே குமரி யம்மனுக்குத் திருமணப் பேச்சு நிகழ்ந்ததென்றும், பின்னர் மணம் நின்றுவிடவே அதற்காகச் சேகரிக்கப்பட்ட குங்குமம் செம் மணலாகவும், கண்ணுக்கான அஞ்சனம் கரு மணலாகவும், அரிசி கல் லரிசியாகவும் மாறி இப்பொழுதுங் காணப்படுகின்றனவாம்.

மேற்கூறிய திருமணத்தைப் பற்றி இங் குள்ளோர் பின் வரும் வரலாறு கூறுகின்றனர் :—கன்னியா குமரிக்கு மேற்கே ஆறு மைல் தூரத்தில் சுசீந்திரம் என்ற ஊரிப்பொழுது மிருக்கிறது. அங்கே ஒரு பெரிய சிவன் கோயிலுள்ளது. அதிலுள்ள சிவபெருமான் பெயர் தாணுமாலயன். அவர் கன்னியா குமரிக்கு வந்து குமரி யம்மனைக் கண்டு தம்மை மணஞ் செய்து கொள்ளும்படி கேட்டுக்

கொண்டார். அதற்கு அவ் வம்மை, "நீங்கள் நாளை விடிவதற்குள் கணு வில்லாத கரும்பும், கண் ணில்லாத தேங்காயும்; அன்றே விதைத்து அன்றே விளைந்து அன்றே அறுத்த நெல்லி னரிசியும் கொண்டுவந்து தருவீராயின் உம்மை நான் விவாகஞ் செய்துகொள்ளுவே" னென்று மறுமொழி உரைத்தாள்.

சிவனுர் அவ்வாறே செய்வதாகக் கூறிச் சென்றார். அவர் அவைகளைத் தமது தெய்வத் தன்மையால் தயார் செய்துகொண்டு மறுநாள் விடிவதற்குள் கன்னியா குமரியை நோக்கிச் சென்ருர். இவர்களது திருமணம் நிறைவேறின் உலகிற்குப் பல தீமைகள் விளையுமென் றெண்ணிய திருமால் வழியி லிருக்கிற ஒரு பாறையின் மேல் சேவலைப் போல் நின்று கூவினுர். அதனைச் செவி யுற்ற சிவபிரான் பொழுது விடிந்து விட்டதாக நம்பிக் கன்னியா குமரிக்குப் போனுல் கல்யாணம் நடை பெருதென்று தம் மூரை நோக்கித் திரும்பி விட்டார். இதற்குச் சான்ருகச் சுசீந்திரத்தி லிருந்து கன்னியா குமரிக்குச் செல்லும் வழியில் ஒரு பாறையில் இப்போதும் சேவலின் காலடி போலவும் பரம சிவனின் திருவடி போலவும் அடையாளங்க ளிருக்கின்றன. இந்த அடிச் சுவடுகளின் முன்னுள்ள பாறையில் தட்டினுல் வெண்கலச் சத்தம் கேட்கின்றது. அவ்விடத்திலேயே குமரி யம்மனுக்கு அவர் கொண்டு போன திரவியங்களை மறைத்து வைத்திருக்கின்ருர் என்ற ஓர் ஐதிகம் வழங்குகின்றது.

முன் காலத்தில் கன்னியா குமரி யம்மன் மூக்கில் அணியாக ஒரு நாக இரத்தின மிருந்தது. அதன் ஒளியும் விலையும் அளவிடமுடியாதன. அவ்வொளி கடலில் பல மைல்களுக் கப்பாலும் வீசியது. அதுகண்டு பல மாலுமிகள்

அதைக் கலங்கரை விளக்கமோ என மயங்குவா ராயினர். அதனல் இக்கோயில் கிழக்கு வாயில் எப்பொழுதும் அடைக்கப் பெற்றிருக்கிறது என்பர். இப்போது அந்நாக மணி யில்லை.

எதிரிற் காணும் இந்துமகா சமுத்திர மாகிய நீர்ப் பரப்பு சரித்திர காலத்துக்குமுன் பெருநிலப் பரப்பாக விருந்த தென்றும், அதற்குக் கன்னிநாடு அல்லது 'லெமூரியா' வென்று பெயர் வழங்கிற் றென்றும், இந்த மாநிலத் திற் றுன் முதன் முதல் மக்கள் தோன்றி நாற் றிசையும் சென்று குடியேறின ரென்றும், அந் நாட்டைக் கடல் கொண்ட தென்றும் ஆராய்ச்சி யாளர் கூறுகின்றனர்.

கன்னியா குமரியின் கட லோரத்தில் நின்று கொண்டு சிந்திக்கும் அறிஞர்க்குப் புலவர் பெருமா ணுகிய குமர குருபர சுவாமிகள் அருளிச் செய்த ஒரு திருப் பாட்டு நினைவிற்கு வராம லிரா து.

"நீரிற் குமிழி இளமை; நிறை செல்வம்
நீரிற் சுருட்டும் நெடுந் திரைகள்;—நீரில்
எழுத்தாகும் யாக்கை; நமரங்காள்! என்னே
வழுத்தாத(து) எம்பிரான் மன்று?"

கிழக்குச் சமுத்திரமும், மேற்குச் சமுத்திரமும் இம் முனையில் கூடுவதற் கறி குறியாகக் காலையில் கதிரவன் கடலில் உதித்துத் தோன்றுவதையும், மாலையில் அவன் சமுத்திரத்தில் மறைவதையுங் காணலாம். மேலும் பௌர்ணமி தினம் மாலை வேளையில் இவ்விடத்தில் நின்றுகொண்டு நோக்குவோருக்குக் கிழக்கே நிறைமதி கடலினின் றெழுவதும், மேற்கே ஞாயிறு கடலிற்குள் அதே காலத்தில் மறைவதும் கண் கொள்ளாக் காட்சியே!

அன்புடைய நண்ப! உனது பொறுமையைச் சோதிக்கும்படியான நீடிய நிருபத்தை யெழுதியதற்கு உன் மன்னிப்பை எதிர்பார்க்கிறேன். திருநிறை செல்வி காந்திமதிக்கு விளையாடப் பலவிதக் கிளிஞ்சில்களும், சோழிகளும், கல்லரிசிகளும் திரும்பும்போது கொண்டு வருவேன்.

இங்ஙனம்,
உனது பேரன்புள்ள நண்பன்,
க. மாணிக்கம்.

14. அகல்யா பாய்

அரசியல் வன்மையில் ஆடவரைப் போலவே பெண்டிரும் ஆற்ற லுடையவர்க ளென்பதற்கு எடுத்துக் காட்டாக அகல்யா பா யென்னும் நன்மாதின் வரலாறு திகழ்கின்றது. சற் றேறக் குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன்னே, பம்பாய் மாகாணத்தில், ஆமது நகரைச் சார்ந்த பதார்த்தி யென்னுஞ் சிற்றூரில், ஆனந்த ராவ் சந்து என்னும் உழவ னொருவனுக்கு அவன் செய்த அருந்தவத்தின் பயனாக அகல்யா பா யென்னும் அருமைப் புதல்வி பிறந்தனள். ஆனந்த ராவ் அவளுக்குக் கல்வி கற்பித்து ஒன்பதாவது வயதில் மணஞ் செய்விக்கக் கருதினர். மணமுடிக்கும் முயற்சி முற்றுப் பெறுமலிருந்த போது, ஒருநாள் மல்ஹார் ராவ் ஹோல்கார் என்பவர் தற்செயலாய்ப் பதார்த்தி என்னும் ஊருக்கு வரும்படி நேரிட்டது. அவர் ஆனந்த ராவ் வீட்டிற் கருகி லிருந்த கோயி லொன்றில் தங்கிய காலை அவர் அகல்யா பாயின் அழகையும் குணங்களையும் பார்த்து மெச்சி, அவ ளின்னு ளென்று உசாவி யறிந்து அப்பெண் மணியைத் தமது புதல்வன் காந்தி ராவுக்கு மணம் செய்விக்க

விரும்பினர். அதற்கு ஆனந்தராவும் இசைந்தமையால் கருதிய படியே மணம் நிகழ்ந்தது.

பின்னர் அகல்யா பாய் இந்தூருக்குச் சென்று தன் கணவனோடு இல்லறம் நடாத்தினள். அவள் தன் மாமியாருடைய செருக்கு, பொறாமை முதலியவற்றைப் பொறுத்துக் கொண்டும், தன் மாமனாருக்கு வயது காலத்தில் ஆறுதல் கூறிக் கொண்டும், வேலைக்காரர்களைக் கடிந்து வேலை யேவாமல் யாவர்க்கும் நன்மையாகவே நடந்தும், சமய நூல்களையும், அறிவு நூல்களையும் நன்கு கற்றும், கற்றபடி நின்றும் சுகமாக வாழ்ந்திருந்தாள். அவளுக்கு ஒரு ஆண் மகவும் ஒரு பெண் மகவும் பிறந்தன.

இங்ஙனம் வாழும் நாளில் அவளுடைய கணவன் ஜாட்ஸ் என்னும் கொடிய ஜாதியாரை யடக்கச் சென்று அவரோடு நிகழ்ந்த போரில் மரித்துவிட்டான். அதனைக் கேள்வியுற்ற அகல்யா பாய் கணவனது பிரி வாற்றாமையால் உயிர்துறக்கக் கருதினள். அப்போது அவள் மாமனாராகிய மல்ஹார் ராவ் அவளை நோக்கி "வயோதிக நிலையில் என்னை என் மகன் கைவிட்டுப் போயினன். நீயும் எனக்கு அவனைப் போன்ற குழந்தையே. உன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் நான் சற்று ஆறுதலடைவேன். நீ உயிர் விடக் கருதினால் யானும் இறந் தொழிவே" னென்று கூறினார். மாமனாரின் மீது இரக்கங் கொண்ட அகல்யா பாய் தன் துக்கத்தை யடக்கிக் கொண்டு உயிர் வாழ்ந்திருந்தாள்.

மல்ஹார் ராவ் முதியவரா யிருந்தமையால் அரசாட்சியைப் பற்றி அகல்யா பாயே முற்றிலுங் கவனிக்க நேர்ந்தது. அவள் அரசாங்கத்தின் கணக்குகளைச் செவ்வையாக ஒழுங்கு படுத்தி நீதி முறைகளைத் தவறாது நடத்தி யாரும் குறை கூறுவதற் கிட மில்லாமல் ஆட்சி புரிந்தனள். சில

நாள் கழிந்தபின் மல்ஹார் ராவ் எங்கேயோ போர் புரிந்து விட்டுத் திரும்புங் காலே அலம்பூ ரென்னு மிடத்தில் இறந்து விட்டனர். பின்னர் அகல்யா பாய் தன் புதல்வ ளுன மாலி ராவ் என்பவனுக்குப் பட்டஞ் சூட்டினள். அவனும் ஒரு மாதத்தி லிறந்து போய்விட்டான். ஆதலால் அகல்யா பாய் தானே அரசாள வேண்டியதா யிருந்தது. அப்போது அமைச்சர்களி லொருவ ளுகிய கங்காதர ஜஸ்வான்ட் என்பவன் சிங்காதனத்தி லொரு குழந்தையை இருத்தி அதற்குப் பாதுகாப்பாள ளுகத் தான் நியமிக்கப்பட வேண்டு மென்றும், அகல்யா பாய் பெண்ணு யிருப்பதனுல் அவள் அரசு செலுத்துதல் பொருத்த மில்லை யென்றும் வற்புறுத்தினுன்.

அவன் தனக்குப் பொருள் சேர்க்க விரும்பி இவ்வாறு கூறினனென்று தெரிந்த அகல்யா பாய் அவன் கருத்திற் கிணங்காமையால் அவன் சினங்கொண்டு இந்தூரைப் படை யெடுத்துப் பிடிக்கும்படி யாகப் பீஷ்வாவுக்கு ஒரு கடித மெழுதினுன். ஜஸ்வான்ட் சொன்னபடி செய்வதற்குப் பீஷ் வாவின் மாமனுன ராகோ என்பவன் இசைந்தா னென்று கேட்ட அகல்யா பாய் ராகோவிற்கு ஒரு எச்சரிக்கைக் கடித மெழுதினுள். அவள் எழுதியதாவது, "உன் தலையில் நீயே கல்லைத் தூக்கிப் போட்டுக் கொள்கிறுய். உன் தீய எண்ணம் நிறைவேறுது. இந்தஅரசு என்னுடையதுதான். நான் இருக்கும் வரையில் அது என்னுடைய தாகவே இருக்கும்" என்பதே. ராகோ இக் கடிதத்தைப் பொருட் படுத்தாது படையெடுத்து மேற் செல்லத் தொடங்கினன். அகல்யா பாயும் தனது படைத்தலைவ ளுன துக்காஜியைப் படை வகுக்கும்படி கட்டளை யிட்டுப் பான்ஸ்லே, கெய்க்வார் முதலிய அரசர்களின் உதவி பெற்றுப் பெரியதொரு படை

சேர்த்து யுத்தம் புரியச் சித்தமாயினள். அவளது பெருஞ் சேனையைக் கண்ட ராதோ வென்பவன் வியப்பும் அச்சமு முடையவனாய் அகல்யா பாயின் மகனான மாலிராவ் இறந்து போன துக்கம் விசாரிப்பதற்குத் தான் வந்ததாகச் சொல்லி அகல்யா பாயினிடம் விடைபெற்றுக் கொண்டு மிகுந்த வெட்கத்துடன் ஊர்போய்ச் சேர்ந்தான்.

அவன் சிலநாள் கழித்து அகல்யா பாயி னிடத்தில் பணம் பறிக்க விரும்பினன். அதற்கு இணங்காமை கண்டு அவன் அவளோடு போர்புரியக் கருதிய காலை அவளே ஆண்வேடம் பூண்டு ஐந்நூறு பெண்களை யுத்தத்திற்கு உடனழைத்துச் சென்றாள். அப்பொழுதும் ராதோ என் பவன் வெட்கப்பட்டுப் பின்னடைந்தான்.

அவள் அரசாண்ட காலத்தி லொரு தடவை அவளு டைய சேனாதிபதி துக்காஜி என்பவன் கடன் பணம் வசூலிப்பதற் காக ஜெய்ப்பூருக்குச் சென்றான். அங்கே அகாரணமாக அவ்வூர்க் குடிகளா லடியுண்டு தன்னைக் காப் பாற்றிக் கொள்ளப் பணமும் படையும் வேண்டுமென்று அகல்யா பாய்க்கு எழுதினான். அப்பொழுது அவள் ஐம்பத் தெட்டு வய துடையவளா யிருந்தும் ஊக்கங் குறைவு படா மல் அவனுக்கு எழுதிய விடையாவது :—“ உனக்கு வேண்டிய பணமும் படையும் அனுப்புகிறேன். போர் புரிந்து எதிரிகளை வெல்ல வேண்டும். உன்னால் முடியா விட்டால் நான் வந்து பொருவேன் ” என்பது.

அகல்யா பாய் நாடோறும் விடியற்கால மெழுந்து, நீரில் முழுகிக் கடவுள் வழிபாடு செய்து, சமய நூல்களைப் பாரா யணஞ் செய்து, அதிதிகட்கு அன்னமிட்டபின் தான் உணவு உண்பாள். பகற் காலத்திலே அரச காரியங்களைத் தானே நேராகக் கவனித்து, யார்க்கும் எளிதாய்க் காட்சி

கொடுத்து, ஏழைகளை யாதரித்து நீதி செலுத்தி வந்தாள். அவள் அரசாட்சியிலே கலகம், களவு, போர் முதலியன கிடையா. வாணிபம் நன்றாக நடந்தது. பதினாறு கோடி ரூபாய் வரை பல ஆலயங்களுக்குத் தருமமாக அவள் எழுதி வைத்தாள். எழுபதாவது வயதிலே அவள் இம் மண்ணுலகை நீத்தனள். அவளை இன்றைக்கும் மகாராட்டியர்கள் ஒரு தெய்வமாக வழிபட்டு வருகின்றனர்.

15. மிருகக் காட்சி சாலை

சுந்தரம் :—இன்று விடுமுறை நாளானதால் இந்நகரத்திலுள்ள மிருகக் காட்சி சாலையைப் போய்ப் பார்த்து வர நினைக்கின்றேன். கமலம், நீயும் வருகிறாயா?

கமலம் :—மிருகக்காட்சி சாலை என்பது என்ன, அண்ணா?

சுந்தரம் :—காணுதற் கரிய பல காட்டு மிருகங்களையும் விநோதப் பிராணிகளையும் கண்காட்சியாகச் சேகரித்து வைத்து வளர்க்குமிடம் மிருகக் காட்சி சாலை எனப்படும். பொது ஜனங்கள் அங்குச்சென்று அம்மிருகங்களைக் கண்டு களிக்க அது துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்டது.

கமலம் :—அவ்வாறாகில் நானும கட்டாயமாக வருகிறேன். அது மிக்க வேடிக்கையா யிருக்கும்.

[இருவரும் நல்ல உடை யுடுத்து மிருகக் காட்சி சாலைக்குச் செல்லுகிறார்கள்.]

சுந்தரம் :—இதுதான் நான் சொல்லிய மிருகக் காட்சித் தோட்டம். அதோ நிற்பவர் அங்குள்ள மிருகங்களைக் கண்காணித்துப் பராமரிக்கும் அதிகாரி. அவர் பிராணிநூல்

நிபுணர். அவரைச் சிநேகம் செய்து அவருடன் உள்ளே சென்று பார்ப்போம்.

[சுந்தரம் அவரிடம் சென்று] நமஸ்காரம். தயை செய்து எங்களைத் தங்கள் ஆதீனத்தி லுள்ள இத் தோட்டத்திற்குள் இட்டுச் சென்று அங்குள்ள பிராணிகளைப் பற்றி விவரித்து விளக்க வேண்டுகிறேன்.

பிராணிநூற் புலவர் :—அப்படியே செய்ய எனக்கு மிக்க சந்தோஷம். தற்பொழுது எனக்கு வேறு அவசர வேலை ஒன்றுமில்லை. உள்ளே செல்லலாம் வாருங்கள்.

கமலம் :—திரளான ஆடவரும் மகளிரும் முன்னமேயே வந்து பார்த்துக்கொண் டிருக்கிறார்களே!

பிராணிநூற் புலவர் :—இங்குச் சிங்கம், வேங்கைப் புலி, சிறுத்தைப் புலி, கழுதைப் புலி, கரடி, ஒட்டகம், ஒட்டைச் சிவிங்கி, வரிக்குதிரை, பல்வகை மான்கள், காங்கரு, தீப் பறவை, காண்டா மிருகம், மலைப் பாம்பு, முதலை, பஞ்ச வர்ணக் கிளி மற்றும் பல விநோத ஜந்துக்களும் உள.

கமலம் :—முதலில் சிங்கங்களைப் பார்ப்போம்.

புலவர் :—இவ்வழி வாருங்கள். இக்கூண்டில் நிற்பது மிருகேந்திரன் எனப்படுகிற சிங்கம்.

கமலம் :—இதைப் பார்க்கும் பொழுதே பயமா யிருக்கிறது. [இவர்களைக் கண்டதும் சிங்கம் கர்ஜிக்கிறது.]

சுந்தரம் :—அதன் அருகில் படுத்திருப்பன யாவை?

புலவர் :—பெண் சிங்கமும், குட்டிகளும். இந்தச் சிங்கக் குட்டிகள் இங்குப் பிறந்தன.

சுந்தரம் :—கமலம், ஆண் சிங்கத்திற்குப் பிடரி மயிர் இருக்கிறது. பெண்ணுக்கு இல்லை. ஐயா! இந்தப் பெரிய சிங்கங்கள் எங்கிருந்து வந்தன?

புலவர் :—இங்குள்ள ஆண் சிங்கம் ஆப்பிரிக்காக் கண்டத்தில் குட்டியா யிருக்கும் போதே பிடிக்கப்பட்டு, இரும்புக் கம்பிகளுள்ள கூண்டில் வெகு ஜாக்கிரதையாக வைத்துப் போஷிக்கப்பட்டு, கப்பல் மூலமாக இங்குக் கொண்டுவரப் பட்டது. இப் பெண் சிங்கம் நமது தேசத்தி லுள்ள இராஜபுதனத்து வனாந்தரங்களில் பிடிக்கப்பட்டது. சிங்கத்தின் வாயை நோக்குங்கள். அது குகைபோல் காண்கின்றது. அதனால் மிருகேந்திரன் ஒரு எருதைக் கூட வெகு எளிதில் கௌவிச் செல்லக் கூடும். அதன் பற்கள் கோரமாகப் பருத்துள. அதன் முன்னங் கால்கள் ஒரே அறையில் ஒரு யானையின் மத்தகத்தைக் கூடப் பிளந்து விடும். ஆனால் மிருக ராஜன் என்னும் பெயருக் கேற்பக் கம்பீரமும் பெருந்தன்மையும் அது வாய்ந்தது. இதை விளக்கப் பல கதைகள் படித் திருப்பீர்கள். ஆனால் அடுத்த கட்டடத்தி லுள்ள வேங்கைப் புலியும் சிறுத்தையும் மிகக் கள்ளத் தனமும், கொடுமையும் உள்ளவை.

கமலம் :—வெளியில் மரத்தடியில் நிற்கும் விசித்திரமான பிராணி யாது ?

புலவர் :—அது ஒட்டைச் சிவிங்கி. இதுவும் ஆப்பிரிக்காவி லிருந்து கொண்டுவரப் பட்டது; மற்றைத் தேசங்களில் இது இல்லை. சுமார் 18 அடி உயரமுள்ள இது ஏனைய மிருகங்களைக் காட்டிலும் மிகவும் உயரமானது.

சுந்தரம் :—ஆம்; இதன் கால்களும் கழுத்தும் மிகவும் நீண்டிருக்கின்றன.

கமலம் :—ஒட்டகத்தைப்போல் நீண்ட கழுத்தும் சிவிங்கிபோல் தேகத்தில் குறுக்கு நெடுக்காய் வெண்கோடு

களும் இருப்பதால் இப்பிராணிக்கு ஒட்டைச் சிவிங்கி என்ற பெயர் வந்தது போலும்.



புலவர் :—அது சரி; இதன் அழகான கண்களையும், தலையில் மயிர் அடர்ந்த கொம்புகளையும் கவனியுங்கள். இம்மிருகம் சத்தம் போடுவதே இல்லை; எப்பொழுதும் மௌன மாகவே இருக்கும்.

சுந்தரம் :—கொம்புகள் இருப்பதோடு, காலின் குளம்புகள் பருத்து, அகன்று இரு பிளவாய் இருக்கின்றன. ஆடு மாடு போல் அசை போடும் சாகபட்சணிதானே இது?

புலவர் :—நிரம்ப சரி. அது நாக்கை நீட்டி மரத்தில் உயரமா யுள்ள இலைகளையுந் தழைகளையும் இழுத்து உண் பதைக் கவனி.

கமலம் :—அதன் நாக்கு ஒரு முழ நீள முள்ளதாகக் காண்கிறது.

புலவர் :—இது கழுத்தைத் தாழ்த்திப் பூமியில் முளைத் திருக்கும் புல்லையும் மேயும். ஒட்டகம் போல் பல நாள் தண்ணீர் பருகாமலே இருக்கவும் செய்யும்.

சுந்தரம் :—இதை எப்படிப் பிடிக்கிறார்கள்?

புலவர் :—இதைப் பிடிப்பது துர்லபம். நாலுகாற் பாய்ச்சலாக ஓடத்தொடங்கினால் இது வாயு வேகமாக ஓடும். பொதுவில் சாது வானது. ஆனால் அதைப் பிடிக் கக் கிட்ட நெருங்கினால் பின்னங் காலால் பலமாய் உதைக் கும். திமிங்கலத்தின் வால் அடி, சிங்கத்தின் கால் அறை, சிவிங்கியின் கால் உதை இவைகளின் பலத்துக்கு வேறு எதுவும் நிகரில்லை.

சுந்தரம் :—அதோ அவலக்ஷண மாக யானைபோல் ஜலக்கரையில் நிற்கிறதே அது யாது?

புலவர் :—அது காண்டா மிருகம். அதைக் கல்லானை என்றுங் கூறுவார்கள்.

சுந்தரம் :—அதன் உயரம் 5 அடியும் நீளம் 10 அடியும் இருக்குமோ?

புலவர் :—ஆம். கால்கள் குட்டை. கண்களும் சிறி யனவே.

கமலம் :—அதன் மூக்கில் ஒரு நீண்ட கொம்பு தெரி கிறது.

புலவர் :—முட் செடிகளையும், தழைகளையும் இது தின்னும். அவைகளை வேரோடு பெயர்ப்பதற்கு இக் கொம்பு உபயோகப்படுகிறது. மேலும் யானை, புலி



முதலான பிராணிகள் காண்டா மிருகத்தை எதிர்த்தால் அது இக் கொம்பினால் அவைகளைக் குத்தித் தூக்கி எறிந்து அவைகள் கீழே விழுந்ததும், காலால் துவைத்துக் கொன்று விடும். என்றாலும் எந்தப் பிராணியையும் வலியச் சென்று இது தீங்கு செய்யாது.

கமலம் :—அதன் தேகத்தில் மடிப்பு மடிப்பாய்த் தோல்கள் தொங்குகின்றனவே. ஏன்?

புலவர் :—அத்தோல் மடிப்புகள் தடித்து உரமாக இருப்பதால் முட்கள், சிங்கத்தின் நகங்கள், கத்தி, ஈட்டி முதலிய கூரிய ஆயுதங்கள் அவைகளில் குத்திச் செல்லா.

சுந்தரம் :—இவைகளைப் பிடிக்கும் விதம் யாது?

புலவர் :—ஆப்பிரிக்கா, ஆசியாக் கண்டங்களிலுள்ள சதுப்பு நிலக் காடுகளே காண்டா மிருகங்களுக்கு இருப்

பிடம். அவை குட்டிகளோடு சஞ்சரிக்கும் போது பீரங்கிக் குண்டுகளால் தாய் தந்தையர்களைப் பன்முறை சுட்டுக் கொன்று விட்டுக் குட்டிகளைப் பிடித்துப் பழக்குவார்கள்.

சுந்தரம் :—அதோ, மனிதனைப் போல் உயர முள்ள ஒரு பெரிய பட்சி ஓடுகிறதே, அது யாது ?

புலவர் :—அது தீப்பறவை அல்லது நெருப்புக்கோழி. ஒட்டகங்களைப் போல் பாலைவனங்களில் வசிப்பதாலும் கழுத்து நீண் டிருப்பதாலும் இதனை ஒட்டகப் பட்சி என் றும் அழைப்பார்கள். காலில் இரண்டு அகன்ற விரல்கள் இருப்பதால் மணலில் நன்ருக வளைந்து, வளைந்து ஓடும். இதைப் பிடித்தல் எளிதான காரியமல்ல.

கமலம் .—அதோ, ஒரு விசித்திரமான பிராணி தாவித் தாவி ஓடுகிறதே. அதுதான் காங்கரு என்று சொல்லப்படுவதோ ?



புலவர் :—நீ சொல்வது சரி. அதன் முன்னங் கால்கள் மிகக் குட்டையாயும், பின்னங் கால்கள் நீண்டு மடிந்தும் இருப்பதால் அது அவ்வாறு செல்லுகிறது. இது ஆஸ்திரேலியாவில் தான் கிடைக்கிறது. அதன் அடிவயிற்றி லுள்ள பையினின்று காங்கருக் குட்டி எட்டிப் பார்ப்பதைக் கவனி.

சுந்தரம் :—அந்தக் கூண்டில் ஒரு பிரமாண்டமான பாம்பு உடலை வளைத்து நெளிகிறதே. அது மலைப்பாம்பல்லவா ?

புலவர் :—ஆமாம். முதலை யொன்று தண்ணீர்த் தடாகத்தில் வளர்க்கப்படுவதைக் காட்டுகிறேன் வாருங்கள்.

சுந்தரம் :—இது ஒரு பூதாகாரமான பல்லிபோல் தோன்றுகிறது.

புலவர் :—இதின் செதிள்கள் கெட்டியாய் இருப்பதைக் கவனியுங்கள். இதன் பெரிய வாயால் மனிதர்களைக் கூடக் கௌவித் தப்பவிடாமல் கடித்துக் கொன்று விழுங்கிவிடும். நேரமாய்விட்டது, நான் என் அலுவல்களைக் கவனிக்கச் செல்லவேண்டும்.

சுந்தரம் :—தாங்கள் எங்களிடம் பேரன்பு வைத்துப் பல அரிய விஷயங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்க வைத்ததற்கு எமது மனமார்ந்த வந்தனத்தை அளிக்கிறோம். ஆனால் இன்னும் ஒரு ஐயம் உளது.

புலவர் :—அது யாது ?

சுந்தரம் :—இக்காட்சி சாலையை வைத்திருப்பதால் பிரதி மாதமும் சர்க்காருக்கு அதிகச் செலவாகுமென்று தோன்றுகிறது. மிருகக் காட்சி சாலையால் என்ன உபயோகம் ?

புலவர் :—சுந்தரம்! நீ புத்திசாலி! பொது ஜனங்களின் நன்மைக் கென்றே இதை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். எண்ணரிய ஜனங்கள் இங்கு வந்து காணக் கிடைக்காத இம்மிருகங்களைக் கண்டு மகிழ்வதுடன் தமது உலக அறிவை விருத்தி செய்துகொள்ளுகிறார்கள். மேலும் கடவுளது சிருஷ்டிப் பெருமைகளை நாம் இங்குக் காண்கிறோமல்லவா?

கமலம் :—போய் வருகிறோம்.

16. திருக்குறள்

1. அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு.

2. கண்ணுடைய ரென்பவர் கற்றோர்; முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

3. தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

4. கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக.

5. செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்றல் அரிது.

6. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று.

7. அருளில்லார்க் கவ்வுலக மில்லை; பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

8. செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

9. இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

10. அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

11. உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

12. எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு.

17. கங்கை நதி

"தாருவில் சந்தானம், விரதத்திற் சோமவாரம், தகை பெறு நிலத்தினிற் காஸ்மீரகண்டம், தலத்திற் சிதம்பரம், சீருலாவு ரிஷிகளில் வசிட்டர், பசுவிற் காமதேனு, முனிவரில் நாரதன், நவமணிகளிற் பதுமராகம், நதிகளிற் கங்கை யாகுமன்றோ?" என்று புலவர் புகழ்ந்து போற்றும் கங்காநதி யான். ஜீவ நதியாகிய நான் இந்து ஸ்தானத்திற்கு ஓர் அணிகலனாயும், அதன் உயிராயும் விளங்குகின்றேன். வட இந்தியாவின் பெருமைக்கும் செல்வத்திற்கும் செழிப்பிற்கும் ஜன நெருக்கத்திற்கும் காரணம் யானே! வானளாவிய இமயமலையில் உற்பத்தியாகி ஆயிரம் மைல் அகன்ற சமவெளிப் பிரதேசத்தில் ஊர்ந்து சென்று பல்லாயிர வருஷங்களாக மக்களை உண வூட்டி வளர்க்கின்றேன்.

ஆதிகாலத்தில் இங்குக் குடியேறிய ஆரியர் தம் உயிர் நிலைபோன்ற என்னைத் தெய்வமாகப் போற்றினர். அவர்கள்

பாடிய இருக்கு வேதத்தில் இரண்டு இடங்களில் என்னைத் துதித்துளர். மகா பாரதத்திலும் என்னைப் புகழ்ந்து பல கதைகள் கூறியுளர். மிகத் தொன்மை வாய்ந்த என்னை இன்றும் இந்தியர்கள் தங்களது பாவங்களைப் போக்கக் கூடிய புண்ணிய நதியாகவே கருதுகின்றனர். அயல் நாட்டார்களும் எனது புனிதத்தைப் பற்றி வியந்து கூறி யுளர்.

முற்காலத்தில் கடுந்தவம் புரிந்து பகீரதர் என்னும் மன்னன் என்னை விண்ணுலகி லிருந்து மண்ணுலகுக்கு அழைத்து வந்ததையும், பரமசிவன் என்னைத் தலையில் தாங்கினதையும், ஜந்ஹு என்னும் மஹரிஷி என்னைச் செவியினால் வாங்கி வெளிவிட்டதையும், நான் குமரக் கட வுளைச் சரவணப் பொய்கையில் தாங்கி வளர்த்ததையும், நானும் உமாதேவியும் பர்வத ராஜனாகிய ஹிமவானின் இரண்டு பெண்களென்பதையும், எனக்குப் பாகீரதி, ஜான் ஹவி முதலிய பெயர்கள் வந்ததன் காரணத்தையும் ஸ்ரீமத் இராமாயணத்தில் படித்திருப்பீர்கள்.

இமய மலையில், கங்கோத்தரி என்னும் இடத்திற்குக் காத தூரத்திற் கப்பால் நான் உற்பத்தி யாகின்றேன். அங் ஙனம் யான் உற்பவிக்கு மிடம், கடல் மட்டத்தி லிருந்து பதினாலாயிரம் அடி உயரத்தில் உள்ள ஒரு கற்பாறையின் அடித்தளமாகும். அப்பாறையின் மேல் எக் காலத்திலும் பனி படிந்திருக்கும். அவ்விடத்தில் நான் இருபத்தேழு அடி அகலமும் ஒரடி ஆழமும் உள்ள ஒரு சிற் றுருகச் சம வெளியை நோக்கி ஓடி வருகின்றேன். கடல் மட்டத் திற்கு இரண்டாயிரம் அடி உயரத்தில், தேவப் பிரயாகை என்னு மிடத்தில் அலகநந்தம் என்னும் வேறொரு ஆறு என்னுடன் கூடுகின்றது. இதன் பின்னர்த்தான் என்னைக்

கங்கை யென்று அழைக்கிறார்கள். அதுவரை என் பெயர் 'பாகீரதி' எனப்படும். பிறகு நான் இன்னும் ஒரு ஆயிரம் அடி கீழிறங்கி ஹரித்துவாரத்தை அடைகின்றேன். பிறகு தென் கிழக்கு முகமாக நானூற் றெண்பத் தெட்டு மைல் ஓடி, பிரயாகை (அலகபாத்) என்னு மிடத்தில் யமுனைப் பேரியாறுடன் கலக்கின்றேன். இவ்விடத்திற்குத் திரு வேணி என்று பெயர். இதுவரைத் தோணிகள் செல்ல முடியாதபடி அத்துணை வேகமாக ஓடி வந்த யான் அலக பாத் முதல், ஆழ முடையேனாய் அகன்று மிகவும் மெது வாகச் செல்லுகின்றேன். அலகபாத் வரும்வரை எனது நீளம் அறுநூற் றறுபத் தெட்டு மைல். பின்னர் ஐக்கிய மாகாணம், பேகார், வங்காளம் முதலிய மாகாணங்களிற் பாய்ந்து வங்காளக் குடாக்கடலிற் சங்கம மாகின்றேன்.

எனது வடபால் இமயமும், தென்பால் விந்தியமும் இருப்பதால், அவ் விரு மலைகளிலும் உற்பத்தி யாகும் பல சிற்றாறுகளும் பேராறுகளும் ஏராளமான நீரையும் மிக்க வளமுள்ள வண்டலையும் கொண்டு என்னிற் சேர்கின்றன. எனது உப நதிகளில் முக்கிய மானவை யமுனை, சோனை, கோமதி, கோக்கிரா, கண்டகி முதலியன.

என்னினின்று, அறுபது மைல் நீள முள்ள இரு கால்வாய்களையும், பல கிளைக்கால்களையும் அரசாங்கத்தார் வெட்டி இருக்கின்றனர். அன்றியும், கடலிலிருந்து இரு பது காத தூரத்தில் நான் பல சிற்றாறுகளாகப் பிரிந்து தாழ்ந்த சதுப்பு நிலமான காட்டிடங்களின் ஊடே ஓடிக் கடலிற் கலக்கின்றேன். அவ்விதம் பிரிவனவற்றில் ஹூக்லி முக்கிய மானது.

இமயத்தி னின்றும் விந்திய மலையி னின்றும் ஓடி வருகின்ற உபநதிகள் ஏராளமான வண்டலையுஞ் சேற்றை

யுங்கொண்டு வருகின்றதால், நான் பாயும் இடங்களெல்லாம் இயற்கையிலேயே மிக்க வளம் பொருந்திப் பயிர்த் தொழிலுக்கு மிகவும் ஏற்ற தாகின்றன. இதனாலே வட இந்தியாவில் பயிர்த்தொழில் செழித்து எங்குப் பார்த்தாலும் பச்சை பசேலென்று பொலிந்து விளங்குகின்றது.

பயிர்த் தொழில் வசதி யுள்ள இடங்களில் மனிதர் விரும்பிக் குடியேறுவர். எனது இரு கரைகளிலும் அவ்விதமே குடியேறினர். அதனால் பல பட்டணங்கள் உண்டாயின. நகரங்களும் நாடுகளும் மிகுந்தன. ஆதியிலே இந்துஸ்தானத்தில் புகழ் வாய்ந்த அயோத்தி, மிதிலை முதலிய பழம் பதிகளும், பின்னர் மகதநாடும், அதன் பின்னர் மொகலாய நாடுகளின் பெரும்பாகமும் நான் ஓடும் சமவெளியிலேயே யிருந்தன. மேலும், இந்தியாவின் மதங்களுட் பல தோன்றிய இடமும் இச் சமவெளியே யாகும்.

என் உற்பத்திஸ்தான முதல் சங்கமம் வரை, எனது கரைகள் மிகப் புனிதம் வாய்ந்தன வாகக் கருதப்படுகின்றன. இக்கரைகளிலே பல்லாயிரக் கணக்கான கோயில்கள் உள. இந்துக்கள் மிகப் புனித மாகக் கருதும் ஹரித்துவாரம், காசி க்ஷேத்திரம், பிரயாகை முதலிய இடங்களும், காளிகட்டமும் (கல்கத்தா) எனது ஓரத்தில் உள்ளனவே.

நான் மிக்க அகலமும் ஆழமு முடையேனாகையால் கப்பல்கள் முகத்துவாரத்தி லிருந்து உள் நாட்டிலே சிறிது தூரஞ் செல்லமுடியும். இதனால் வங்காளத்தின் வியாபாரம் ஓங்கி யிருக்கிறது. அலகபாத் முதல் முகத்துவாரம் வரை எனது நீரோட்டத்தில் தோணிகளும் படகுகளும் பிரயாணஞ் செய்யலாம். அதனால் பண்டங்களை ஓரிடத்திலிருந்து

மற்றோ ரிடத்திற்குக் குறைந்த செலவிலே கொண்டுபோக வசதி யுண்டாகிறது. இவ் வசதிக ளெல்லாம் நான் இடையறாத நீர்ப் பெருக் குடையவ ளாய் இருப்பதாலேயே அமைந்துள்ளன. பல் விதங்களில் நன்மை புரிந்து வட இந்தியாவின் உயிரா யுள்ள என்னைக் கங்கா தேவி எனத் தொழுவது இயற்கையன்றோ ?

18. சிற்றோடை

செங்கால் நாரை கருநாரை
சேருங் குன்றிற் பிறந்தேனே.
தங்கா துடனே குதித்திறங்கித்
தழைத்த பன்னைச் செடியூடே
பொங்கா நுரைத்துப் பளபளத்துப்
பொட்டென் றிறங்கி வருவேனே.
அங்கோர் பள்ளத் தாக்கினிலே
அலறி மண்டி வருவேனே. (1)

காரார் மலைகள் அத்தனையும்
கடிதிற் கடந்தே இழிவேனே.
நீரார் பள்ளத் தாக்கினிலே
நெளிந்து நழுவி வருவேனே.
சீரார் சிற்றூர் பல பலவும்
சிறிய நகருங் கடந்தோடி
நேராய்ப் பாலம் ஒரு நூறும்
நெருங்கி நுழைந்து வருவேனே. (2)

கண்ணார் கந்தன் வாழ்கின்ற
கழனி யருகே கரை புரளுந்
தண்ணார் நதியிற் கலந்திடவே
தாவி யோடிச் செல்வேனே.

மண்மேல் நிலையா மானிடர்கள்
வந்து வந்து போவார்கள்.
மண்மேல் நானோ என்றென்றும்
மன்னி யோடிச் செல்வேனே. (3)

அங்கும் இங்கும் நுழைவேனே.
அழகார் மலர்கள் மிதந்தோடப்
பொங்கி ஆழ்ந்து வருவேனே.
பொன்னார் கெண்டை மீனினமும்
தங்க வெயிலிற் சிறுமீனும்
தத்திப் பாய்ந்து விளையாடத்
துங்க முத்தாய்த் தெளிந்தோடித்
துலங்கச் சிரித்து வருவேனே. (4)

பளிங்கில் வார்த்த நீர்போலப்
பழுதில் சான்றோர் கவிபோலக்
களங்க மில்லா உள்ளத்தைக்
காட்டிக் களித்து வருவேனே.
விளங்கும் நீர்மேல் வெண்ணுரைகள்
மிதந்து செல்லும் அணியாகத்
துளங்கும் ஆடியென, என்னில்
தோன்றும் நேர்ந்த பொருளெல்லாம். (5)

எண்ணார் பொருள்கள் தொடர்ந்திடவே
என்னை யிழுத்துச் சென்றந்தத்
தண்ணார் நதியிற் கலந்திடவே
தாவி ஓடி வருவேனே.

மண்மேல் நிலையா மானிடர்கள்
வந்து வந்து போவார்கள்.
மண்மேல் நானோ என்றென்றும்
மன்னி யோடிச் செல்வேனே. (6)

இளைஞர் விடுத்த கப்பலுடன்
இளம்பெண் எறிந்த பழம்பூவும்
முளரிக் குவளை நாண்மலரும்
முதிர்ந்து விழுந்த காய்கனியும்
கிளையும் கொம்பும் இலையனைத்தும்
கிட்டும் பொருள்கள் பற்பலவும்
வளைய வாரி வர்த்தகர்போல்
பண்ட மாற்றி வருவேனே. (7)

காடு கரம்பு கழனிகளில்,
கமழ்பூங் காவிற் கானகத்தில்,
ஓடும் பொழுதே உளமகிழ்வேன்
உண்ண நன்னீர் உவந்தளிப்பேன்
பாடுங் குயில்கள் பண்ணிசைப்பப்,
பச்சைக் கிளிகள் கதைசொல்ல,
ஆடு மயிலின் நாடகங்கள்
அனைத்தும் கண்டு வருவேனே. (8)

கண்ணார் கந்தன் வாழ்கின்ற
கழனி யருகே கரைபுரளுந்
தண்ணார் நதியிற் கலந்திடவே
தாவி யோடிச் செல்வேனே.

மண்மேல் நிலையா மானிடர்கள்
வந்து வந்து போவார்கள்
மண்மேல் நானே என்றென்றும்
மன்னி யோடிச் செல்வேனே. (9)

—P. R. ராஜசூடாமணி.

19. சியவன முனிவர்

நிலவளம் நீர்வள மிக்க கோசல நாட்டின்கண் எவ்வகை உறுப்புக்களும் ஒருங்கு நிறைந்த அயோத்திமா நகரத்திலே, சரியாதி என்ற மன்னன் செங்கோல் செலுத்தி வந்தான். அவன் பல மடந்தையரை மணந்தும் சுகன்னி என்னும் பெயர் படைத்த ஒரே ஒரு பெண் மகவையே உடைத்தாயிருந்தான். அவனுடைய அரண்மனைக்கு அண்டையிலிருந்த சந்தனம், பாதிரி, வேங்கை, மகிழ், மாலதி, மௌவல் முதலிய தாவரங்க ளடர்ந்த ஒரு பூஞ் சோலையின் நடுவண் அழகிய தாமரைத் தடாக மொன்றிருந்தது. அப்பொழிலின் ஒரு மருங்கில் சியவன ரென்ற ஒரு முனிவர் நெடு நாளாகத் தவங் கிடந்தனர். அவர் அசை வின்றி இருந்தமையால் அவர்மீது ஒரு புற்று வளர்ந்து மூடி அவரிருந்த இடந் தெரியாமற் செய்துவிட்டது.

சரியாதி மன்னன் தன் மனைவிக ளுடனும், தன் அருமைப் பெண் குழந்தை யுடனும் தோட்டத்தில் உலாவி வந்த போது, சுகன்னி அங் குள்ள புற்றிற் கருகே சென்று, அதனுள் மெல்லிய வோசை கேட்கப் பெற்று, அப்புற்றிற்குள் யாதிருப்ப தென்று தெரிய விரும்பி, ஒரு முள்ளை யெடுத்து அதனுட் புகுத்தினள். முள்ளை வெளியே யெடுத்த போது அதன் நுனியில் குருதி படிந் திருந்தமை

யால் அதனுள் ளிருக்கும் உயி ரொன்றினைத் தான் துன்புறுத்திய தாகக் கருதி வருத்த முற்றனள்.

பின்னர், அவளும் மன்னனும் பிறரும் அரண்மனைக்கு மீண்டனர். மீண்டது முதல் அரண்மனையி லுள்ள யாவ ரும் மலசலங் கழித்தற்கு இயலாது வருந்தினர். அரசன் அமைச்சர்களை யழைத்து அதற்குக் காரணம் வினவிய காலை அவர்கள் பொழி லகத்தே தவங் கிடக்குஞ் சியவன முனிவருக்கு யாராவது இன்னல் விளைவித் திருக்கவேண்டு மென்று செப்பினர். அங்ஙனம் யார் செய்திருத்தல் கூடு மென்று அரசன் உசாவிய காலை, வேலைக்கார ரனைவரும் தாங்கள் தீங்கு யாதுஞ் செய்யவில்லை யென்று கூறி விடவே, சுகன்னி அரசன்பாற் சென்று புற்றினைத் தான் முள்ளாற் குத்தியதை யறிவித்தாள். உடனே அரசன் புற்றை மெதுவாகப் பிரித்து, அங் கிருந்த சியவன முனி வரை வணங்கி, அரண்மனையி லிருந்த ஜனங்களுடைய நோயைத் தீர்க்கவேண்டு மென்று வேண்டினன். அப் போது முனிவர் "அரசனே! முள்ளாற் குத்தப்பட்ட என் கண் குருடாகி விட்டது. ஆயினும் அக் குற்றத்தை நான் பொறுத்துக் கொள்கின்றேன். உன் புதல்வி யாகிய சுகன் னியை எனக்கு மணம்புரிவித்து எனக்குப் பணிவிடை செய் வித்தால் உங்களது இன்னல் தீரும்" என்றனர். மன்னன் தனது செல்வப் புதல்வியைக் குருடராயுங் கிழவராயு மிருந்த சியவன முனிவருக்கு மனைவியாகக் கொடுப்பதற்கு மனம் இசையப் பெறாது வருந்தினன். ஆனால் அவ்வாறு செய்யாது, தன்னைச் சேர்ந்தவர்கள் படுந் துன்பத்தை நிவர்த்தி செய்ய முடியவில்லை. அத் தருணத்தில் சுகன்னி தான் செய்த குற்றத்திற்குத் தானே தண்டனை பெறுதல் தகுதியென் றெண்ணித் தன்னை முனிவருக்கு மணம்

புரிவிக்குமாறு தந்தையை வேண்டி, அவ்வாறே செய்யப் பெற்று முனிவரின் இல்லக் கிழத்தி யாயினள்.

பின்னர், கிழமுனிவரும் இளம் பெண்ணும் காட்டிற்குச் சென்று ஒரு ஆசிரமத்திற் றங்கினர். கற்பரசி யாகிய சுகன்னி தன் கணவரை ஒரு சிறிதும் இகழாது, முழு அன்போடு அவர்க்குப் பணிவிடை யாற்றி வந்தாள். அவளது கற்பினை விண்ணவரும் வியந்தனர்.

தேவ மருத்துவர்களாகிய அசுவினி தேவர்களென்பார் சுகன்னியின் உருவழகினைக் கண்டு மயங்கி உள்ளங் கவரும் இளைஞர் வடிவங் கொண்டு அவள் முன் தோன்றி "மிகுந்த அழகுடைய நீ, காட்டிலே மரவுரி தரித்துக் கண் தெரியாத கிழ முனிவரின் பத்தினியா யிருப்பதாற் பயனென்னை? எங்களுடன் போந்தால் எவ்வகை இன்பங்களையும் நுகர்ந்து சுகமாக வாழலாமே" என் றியம்பினர். சுகன்னி அவர்களது தீய சொற்களைக் கேட்டு, உள்ளம் பதைத்து, உடல் நடுங்கி, அவர்களை நோக்கி "ஒரு பெண்ணின் கற்பினைக் கெடுக்க முயலுவது கழுவாயற்ற பெருங் குற்ற மென்பதை நீங்கள் அறியமாட்டீர்களா? மரியாதையுடன் போகா விட்டால் நீங்கள் கெட்டொழிவீர்கள்" என்று சினந்து கூறினள். அப்போது அவர்கள் அவளுடைய கற்பைச் சோதிக்கவே தாங்கள் வந்ததாகவும், தங்களுக்குக் கெடுதற் சித்த மில்லையென்றும், கூறி அவள் கணவரை அவளுக் கேற்ற இளைஞராக மாற்றும் ஆற்றல் தங்களுக் கிருப்பதாகவுந் தெரிவித்தார்கள். அவர்கள் கருத்தினை யவள் சியவன முனிவருக்கு அறிவித்தாள். அவர் அதற் கிசைந்து அவர்களை யழைத்து வரும்படி கட்டளை யிட்டனர். அசுவினி தேவ ரிருவரும் சியவன முனிவர் ஆச்சிரமத்திற்குச் சென்று அவ ரியற்றிய வந்தனை வழிபாடுகளை யேற்றுக்கொண்டு

அவரை ஒரு குளத்திற் கழைத்துப் போய் அவரோடு தாமும் அக்குளத்தில் மூழ்கினர். மூழ்கி யெழுந்த வுடன்



மூவரும் அழகு மிக்க இளைஞர்க ளாகக் காணப்பட்டார்கள். மூவர்க்கும் யாதொரு உருவ வேறுபாடும் தோன்றுது போகவே, சுகன்னி மிகுந்த மனக்கலக்க மெய்தித் தனது வழிபடு தெய்வத்தைத் தியானித்துத் துதித்துத் தன்

கற்பு உண்மையாக இருந்தால், தான் எறியும் மாலை யானது தன் கணவன் கழுத்திலேயே விழவேண்டு மென்று வேண்டிக்கொண்டு ஒரு மல ரலங்கலைச் சுழற்றி எறிந்தாள். அது சியவன முனிவரின் கழுத்திலேயே விழுந்தது. அதனைக் கண்ட அசுவினி தேவர்கள் சுகன்னியின் அருங் கற்பைப் பாராட்டி நாணமுற்று அகன்றனர். அவள் அளவற்ற மகிழ்ச்சி யடைந்து தன் கணவரோடு அயோத்தி சென்று தந்தையரால் குதூகலத்தோடும், பெருங்களிப்போடும் வரவேற்கப் பெற்று இன்ப வாழ்க்கை நடத்தினள். இன்றும் இளமை கொடுக்கும் மருந்தொன்று சியவனப் பிராசனம் என்ற பெயரோடு வழங்குகின்றது.

20. ஸர் சி. வி. ராமன்

பிரகிருதி விஞ்ஞான கலை ஆராய்ச்சிக்காகச் சென்ற 1930-ம் ஆண்டு "நோபில் பரிசு" பெற்ற ஸர் சி.வி. ராமனைப் பற்றி அறிந்துகொள்ள நீங்கள் யாவரும் விரும்புவீர்கள். இவரது முழுப் பெயர் சந்திர சேகர வேங்கடராமன். இந்தியா தன்னைப் புகழுக்கு இடமாக்கிக் கொள்வதற்கு அவ்வப் போது பெற்றெடுக்கும் அரும் பெரும் மக்களுள் ஸர் சி. வி. ராமனும் ஒருவராவர். 1888-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாந் தேதியன்று இவர் திரிச்சிராப்பள்ளியில் பிறந்தார். இவரது தந்தை யாகிய சந்திர சேகர ஐயர் தஞ்சாவூர்ச் சில்லா பாபவிநாசத்திற் கருகிலுள்ள மாங்குடியைச் சேர்ந்தவர். அவர் தமது வருவாயின் பொருட்டு அப்போது திரிச்சிராப்பள்ளியில் கல்லூரி ஒன்றில் இரசாயன நூற் போதகராக வேலை பார்த்து வந்தார்.

சி. வி. ராமனுக்கு நான்கு வயதாகும்போது சந்திர சேகர ஐயர் விசாகப்பட்டினத்திலுள்ள கல்லூரி ஒன்றில்

ஸர் சி. வி. ராமன்.

ஆசிரியராக நியமிக்கப்பட்டார். சி. வி. ராமன் விசாகப் பட்டினத்திலேயே கல்வி பயின்று தமது பதினுன்காவது வயதில் "எப். ஏ." பரீக்ஷையில் முதன்மையாகத் தேறினுர்.

இளமையிலேயே சி.வி. ராமன் கூர்ந்த அறிவும், திறமையும், சுறுசுறுப்பும், பூத பௌதிக இரசாயன நூல்களில் மிக்க ஆர்வமும் உடையவராக விளங்கினுர். தமது ஏழாவது வயதிலேயே விஞ்ஞான அறிவு நூல் ஒன்றை ஆவலுடன் படித்து முடித்தனராம். அவ்விடத்தின் சுகாதாரம் தமக்கு ஒவ்வாமையால் சி.வி. ராமன் அடிக்கடி நோயுற்றுத் துன்ப மடைந்தார். ஒரு சமயம் கடுமையான நோய் வாய்ப்பட்டுக் கவலைக் கிடமான நிலையில் படுத்தப் படுக்கையாக இருந்தார். அந்நிலையிலும் மின்சார சம்பந்தமான பரிசோதனை ஒன்றைச் செய்து காட்டுமாறு தமது தந்தையைப் பெரிதும் வற்புறுத்தினுராம்: அவர் சிறிதும் தயக்க மின்றி உடனே கல்லூரியி லிருந்த பரிசோதனைக் கருவிகளை வீட்டிற்குக் கொண்டு வந்து பரிசோதனையைச் செய்து காட்டினுர். அதன் பிறகு தான் நமது சி.வி. ராமனுக்குத் திருப்தி ஏற்பட்டதாம்.

பீ. ஏ. படிப்பிற்காகச் சென்னைப்பட்டினத்தி லுள்ள இராசதானிக் கல்லூரியிற் சேர்ந்தார். இவர் உருவிற் சிறியவராயினும் அறிவிற் பெரியவராக இருந்ததால் கலாசாலை ஆசிரியர்கள் பலரும் இவரிடம் அதிக அன்புடன் நடந்து கொண்டார்கள். தமது பதினுருவது வயதில் பீ. ஏ. பரீட்சையில் முதன்மையாகத் தேறி எல்பின்ஸ்டன் பொற்பதக்கமும், ஆரணி ஜாகிர்தாரின் பொற்பதக்கமும் பரிசு பெற்றுர்.

பிறகு, அக் கல்லூரியிலேயே விஞ்ஞான கலையைப் பாடமாக எடுத்துக்கொண்டு எம். ஏ. பட்டத்திற்காகப் படித்து வந்தார். ஒருநாள் இவர் ஒளி சம்பந்தமான பரி சோதனையைச் செய்யும் போது அதுவரையிற் கண்டறியாத சில புதுமைகள் தோன்றக் கண்டார். உடனே அவற்றை ஆராய்ந்து விரிவான கட்டுரை ஒன்று எழுதி மேனாட்டுப் பத்திரிகை மூலம் வெளியிட்டார். மற்றொருநாள் தம் முடன் பயின்ற மாணவர் ஒருவர் ஒலி சம்பந்தமான பரி சோதனை செய்து கொண்டிருக்கும் போது சில மாறுபாடு கள் தோன்றக் கண்டு சி. வி. ராமனிடம் அதனைத் தெரிவித் தார். அவர் அம் மாறுபாட்டின் காரணத்தை உடனே உய்த் துணர்ந்து அதனை விளக்கிக் காட்டினார். பின் அதுபற்றி விரிவாக அம்மாணவருடன் ஆராய்ச்சி செய்து ஒரு கட்டுரை வெளியிட்டார். இவர் கண்டுபிடித்து வெளியிட்ட அரு மையான புது ஆராய்ச்சிகளைக் கண்ட பிரபல விஞ்ஞானி கள் பலரும் இவரது அறிவின் திறமையைப் பாராட்டி ஊக்க மளிக்கும் நற்செய்திகள் பல அனுப்பினர். இவரது ஆசிரியராக அப்போதிருந்த ஜோன்சு என்பவர் "வேங்கட ராமன் விரைவில் உலகம் போற்றப் பெறுவான்" என்று கூறினாராம். விளையும் பயிர் முளையிலேயே தெரியுமல்லவா?

இவர், தம் ஓய்வு நேரங்களில் தேச வரலாறு, பொரு ளாதார நூல், கணித நூல் முதலிய கலைகளையும் பயின்று வந்தார். விஞ்ஞானிகளுக்குக் கணித அறிவு இன்றியமை யாததென்று உணர்ந்து அக் கலையைப் பெரிதும் பயின்று தேர்ச்சி யடைந்தார். பிறகு தமது பதினெட்டாவது வய தில் எம். ஏ. பரீக்ஷையில் முதல் தரமாகத் தேறினார்.

மேல் படிப்பிற்காக மேனாட்டுக்குச் செல்ல அவரது உடல் நிலை இடந்தர வில்லை. அக் காலத்தில் விஞ்ஞான கலையில் பெரிதும் பொதுமக்கள் ஊக்கங் கொள்வதில்லை; விஞ்ஞானிகளுக்குத் தகுந்த ஆதரவும் கிடையாது. எனவே தமது ஆசிரியர்களின் ஆலோசனையின் பேரில் "இந்தியப் பொருள் இலாகா" உத்தியோக நியமனத்திற்காக நடந்த போட்டிப் பரீக்ஷைக்குச் சென்றார். அதில் நமது சி. வி. ராமன் முதன்மையாகத் தேறவே கல்கத்தாவில் உதவி அக்கௌண்டெண்ட் ஜெனரலாக நியமிக்கப்பட்டார்.

பத்து ஆண்டுகள் வரையில் அவ் வரசாங்க உத்தியோகம் வகித்துத் திறமையாக நடத்திப் புகழும் பேரும் பெற்றார். கல்கத்தாவி லுள்ள "இந்தியக் கலை ஆராய்ச்சிச் சங்கத்தில்" சேர்ந்து தம் ஓய்வு நேரங்களி லெல்லாம், தளரா ஊக்கத்துடன் விஞ்ஞான கலை ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் தாம் கண்டுபிடித்தவைகளை வெளியிட்டார். இப்போது அச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினராகவும், தலைவராகவும் இவர் விளங்குகிறார். தாம் ஆராய்ச்சி செய்து வெளியிட்டுள்ளவற்றின் பயனாக இவருக்கு மென்மேலும் புகழ் பெருக ஆரம்பித்தது. இடையிடையே இரங்கூன், நாகப்பூர் முதலிய இடங்களுக்கு மாற்றப்பட்ட போதிலும் விஞ்ஞான கலை ஆராய்ச்சியில் இவர் கொண்டிருந்த அளவற்ற ஆர்வமும் ஊக்கமும் சிறிதும் குறையவில்லை.

அப்போது பாலட் என்பவர் பெயரால் கல்கத்தா சர்வ கலாசாலையில் விஞ்ஞான நூற்புலவர் ஒருவரை நியமிக்க ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டது. அதற்குத் தகுதியுடைய ஒருவர் கிடைக்காமலிருந்த நிலையில் சி. வி. ராமன் தம் ஆராய்ச்சியின் பயனாக ஈட்டிய பெரும் புகழ், அச் சர்வ

கலாசாலை உப அத்தியட்சராக இருந்த சர் ஆசுதோஷ் முகர்ஜியின் கவனத்தைப் பெற்றது. உடனே அவர் சி. வி. ராமனை அணுகி, அப் புலவர் பதவியை ஏற்கும்படிப் பெரிதும் வேண்டிக்கொண்டார். விஞ்ஞான ஆராய்ச்சியில் தமக்கிருந்த ஆர்வ மிகுதியால் தமக்குக் கிடைத்து வரும் பெரிய வருவாயைச் சிறிதேனும் பொருட்படுத்தாமல் நமது சி. வி. ராமன் அரசாங்க உத்தியோகத்தி லிருந்து விலகிச் சர்வ கலாசாலைப் புலவராக மிகவும் சொற்ப சம்பளத்திலமர்ந்தார்.

விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் பயிற்சி பெற இந்தியாவின் பல்வே றிடங்களி லிருந்தும் மாணவர் பலர் இவரையடைந்தார்கள். தான் ஆராய்ச்சி செய்து புதியன கண்டு பிடிப்பதைவிடத் தம் மாணவர்கள் ஆராய்ச்சியில் திறமை பெற வேண்டு மென்று பெரிதும் பாடுபட்டார். அதன் பயனுகப் பல மாணவர்கள் பெரும் பேர் அடைந்தார்கள். இடையிடையே இவரால் வெளியிடப்பட்ட ஆராய்ச்சிகள் உலகப்பிரசித்தி பெறலாயின. உலகத்தி லுள்ள பல்வேறு சர்வ கலாசாலைகளும் பல பட்டங்களை இவருக்களித்தன. மற்றும் "லண்டன் ராயல் சங்கத்தின்" அங்கத்தினராக விரும்பிச் சேர்த்துக் கொள்ளப் பட்டார். சென்ற 1929-ம் ஆண்டில் நம் மிந்திய அரசாங்கத்தார் இவருக்கு "ஸர்" என்ற உயரிய பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார்கள். ரோம் நகரி லுள்ள "கலை ஆராய்ச்சிச் சங்கத்தினர்" பொற்பதக்கம் ஒன் றளித்தார்கள். லண்டன் ராயல் சங்கத்தினரும் பதக்கம் ஒன் றளித்தார்கள்.

சுவீடனில் ஆல்பிரட் நோபில் என்ற இரசாயன வல்லுநர் ஒருவர் இருந்தார். இவர் பாறைகளைத் தகர்த்தெறியும் புதிய வெடி ஒன்றைக் கண்டுபிடித்து அதன் மூலம் ஏராள

மான பொருளைச் சம்பாதித்தார். அவர் எழுதி வைத்த மரண சாசனப்படி ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டது. அந் நிதியின் வட்டியைக் கொண்டு, விஞ்ஞானம், இரசாயனம், வைத்தியம், இலக்கியம், உலக சமாதானம் முதலிய துறைகளில் பெரிதும் பாடுபட்டு மானிட சமூகத்திற்குப் பயன் விளைவிப்போர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இப் பரிசுக்கு "நோபில் பரிசு" என்று பெயர். உலகத்திலுள்ள மற்றெல்லாப் பரிசுகளையும்விட இப் பரிசுதான் மிக்க மதிப்பு வாய்ந்தது. சென்ற 1930-ம் ஆண்டில் விஞ்ஞான கலை ஆராய்ச்சித் திறமைக்காக இந் நோபில் பரிசு நமது ஸர் சி. வி. ராமனுக்கு அளிக்கப்பட்டது. ஆசியாக் கண்டத்தில் இத் துறையில் முதன் முதலாக இப் பரிசு பெற்றவர் இவர்தான்.

ஸர் சி. வி. ராமன் ஒலி சம்பந்தமாக விரிவான ஆராய்ச்சி செய்து புத்தக உருவமாக வெளியிட்டுள்ளார். இத் துறையில் இவருக்கு இப்போது நிகர் ஒருவருமில்லை. ஜெர்மெனியில் தயாரிக்கப்பட்ட "பல் பொருட் களஞ்சிய" நூலுக்கு அந் நாட்டவர் வேண்டுகோளின்படி ஒலி சம்பந்தமான கட்டுரை யொன்று இவரால் வரைந்து அளிக்கப்பட்டது. ஒளியைப் பற்றிப் பலவித ஆராய்ச்சிகள் செய்து வெளியிட்டுள்ளார். வானம், கடல் இவைகளின் நீல நிறத்தின் காரணத்தைச் செவ்வையாகக் கண்டு பிடித்தவர் இவர்தான். இவரிடம் எண்ணிறந்த மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஏதாவது புதுமைகளைக் கண்டுபிடித்து வெளியிட்ட வண்ணமாகவே இன்னு மிருக்கின்றனர். மேனாட்டுச் சர்வகலா சாலைகளின் வேண்டுகோளுக் கிணங்கி சி. வி. ராமன் இரண்டொரு முறை மேனாடுகளுக்குச்

சென்று தாம் செய்த ஆராய்ச்சிகளைப் பற்றி விரிவுரைகள் நிகழ்த்தி அந் நாட்டவர் மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றுள்ளார். ஜெ. என். டாட்டா என்பவர் மூலதன மளித்து ஏற்படுத்தியுள்ள நவீன அறிவியற் கலையாராய்ச்சிச் சாலையின் தலைவராக நியமனம் பெற்று இவர் தற்பொழுது அங்கு வசிக்கின்றனர்.

பெரிய விஞ்ஞான ஆராய்ச்சி விஷயங்களைப் பாமர ஜனங்களும் அறியும்படி மிக எளிய நடையில் பேசுவதில் இவருக்கு ஒப்பாரு மிக்காரு மில்லை. அன்பு, ஊக்கம், தன்னல மின்மை, ஆடம்பர மின்மை முதலிய அரும் பெருங் குணங்கள் இவரிடம் உண்டு. தன் தாய் நாடாகிய இந்தியாவின்மேல் பெரிதும் பற்றுடையவர். இயற்கை அழகைக் கண்டு ஆனந்த முறுவதில் இவரை ஒரு கவி என்றே சொல்லலாம். எனவே நமது ஸர் சி. வி. ராமனைப்போல் நீங்களும் தளரா ஊக்கத்துடனும், விடாமுயற்சியுடனும், பாடு படுவீர்களானால் நீவிர் ஒவ்வொருவரும் ஒரு ஸர் சி.வி. ராமனைப் புகழ் பெறலாம் என்பதில் ஐயமுமுண்டோ? கடவுள் இவருக்கு நீண்ட ஆயுளையும், வலிமையையும் அருள்வாராக.

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று."

21. விநோதப் பாக்கள்

கங்கை குடத்திலே அடங்கும்

விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த விறைவர் சடாம
குடத்திலே கங்கை யடங்கும் —காளமேகர்.

ஆடைச் சிறப்பு

மேலாடை யின்றிச் சபைபுகுந்தால் இந்த மேதினியோர்
நூலாயிரம் படித் தாலுமெண் ணுர்நுவல் பாற்கடலோ
மாலா னவர்அணி பொன்னுடைகண்டு மகளைத் தந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடைசுற்றும் அரன்தனக்கே.

நிந்தாஸ் துதி

நாட்டுக்குள் ஆட்டுக்கு நாலுகால் ஐயாநின்
ஆட்டுக் கிரண்டு காலானுலும்—நாட்டமுள்ள
சீர்மேவு தில்லைச் சிவனே இவ் வாட்டைவிட்டுப்
போமோ சொல்லாயப் புலி.

22. பிறர்க்குதவி

உதவியின் சிறப்பை யென்னென் றுரைப்பது? உதவி புரிதல் எனுந் தன்மை தெய்வத் தன்மையே யாகும். இத் தன்மை இயற்கையில் விளங்கும் முக்கிய இயல்பாகும். எங் ஙன மெனில், நாடோறுங் காலையிலே குணதிசையில் எழுஞ் செங்கதிரவனைப் பாருங்கள். அவன் இவ் வுலகிற்கு உதவி புரிவதில் முதல்வனுய் விளங்குகின்ருன். பகலோன் காய் வதால் கடல்நீர் ஆவியாகி விசும்பில் எழுந்து மழை பொழி கின்றது. தினகரனது கிரணத்தால் தாவரங்கள் பசிய நிறம் பெற்று வளருகின்றன.

இவ் வுலகிலுள்ள மிகச் சிறு பொருள்களும் ஒன்றிற் கொன்று உதவி புரிந்து வாழ்கின்றன. உலகத்தி லுள்ள சரா சரப் பொருள்களிடத்தில் உதவி புரியுங் குண மில்லையாயின், அவை இவ்வுலகி லிருக்க இடம் பெறுவாம். சிறிய தேனீ நாடோறும் மலர்களிற் புகுந்து பூந்தாதிற் புரண்டு தேனைப்

பருகாவிடில், மரங்கள் கனி கொடா. மலர்கள் தம் மகத்துறைந்த தேனை வண்டுகளுக்கு ஊட்டாவிடில், வண்டுகள் மாண்டு போகும். இப்படியே பார்க்கும்பொழுது ஒன்றிற்கொன்று உதவிபுரிதல் என்னுங் குணம் இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பொருளையும் ஒன்று சேர்த்துக் கட்டுகின்ற பொற் சங்கிலியாக விருக்கிறது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த இவ்வரிய குணம், எல்லாவுயிர்களிலுஞ் சிறந்து விளங்குகின்ற மனிதனிடத்தில் முழுமையாகக் காணப்படாவிட்டால், அவன் பரிபூரணமான முன்னேற்ற மடைய முடியாது. எவனிடத்தில் இக்குணம் முதிர்ந்து கனிந்து விளங்குகின்றதோ அவனே மகாஞானி; அவனே மகாத்துமா. எப்பொழுதும் பிறர்க்கு உதவிபுரிய வேண்டு மென்னும் பேரவாவோடு கண்ணுங் கருத்துமாய் முயற்சித்து வருகிறவனை உலகம் போற்று மென்பதற்கு ஐயமில்லை. தன் னல முடைய மக்கள் அவனைக் கண்டு நாணுவார்கள்.

நமது தேச மெங்கும் புகழ்பெற்ற ஈசுவர சந்திரர் என்பவர் ஒருநாள் வங்காளத்தில் ஒரு நதிக்கரை வழியாக நடந்து செல்கையில், அங்கு நீராடு துறையில் ஓரிடத்தில் ஒரு மனிதனைக் கண்டார். அவன் துயர்க்கடலில் மூழ்கினவனைப் போற் காணப்பட்டான். அவன் தன் முழந்தாளைக் கட்டிக்கொண்டு தலை கவிழ்ந்த வாறு இருந்தான். ஈசுவர சந்திரர் அவனது நிலையைக் கண்டு உள்ளங் கனிந்து அவனை அணுகினர். அவன் முதலில் அவரிடத்தில் தனக் குற்றவைகளைச் சொல்ல மறுத்தான். ஆயினும், முடிவில், தன் ஒரே மகளைத் தக்க வரனொருவனுக்கு மணம் செய்து கொடுக்கும் பொருட்டுத் தான் வாழ்ந்திருந்த வீட்டை அடமானம் வைத்துக் கடன் கொண்டதையும், பின்பு,

அக்கடனைத் தீர்க்க வகை யில்லாமையால், கடன்காரர் அவ்வீட்டை மறுநாள் ஏலமிட வர விருப்பதையும் அவரிடங் கூறினன். தன் வயது சென்ற தாய் இளமை முதல் வாழ்ந்த அவ் வீட்டை விட்டு வேறொரு வீட்டிற் குடிபுக மன மற்றிருப்ப தாகவுஞ் சொன்னன். ஈசுவர சந்திரர் அவனிடமிருந்து கடன் கொடுத்தவ னுடைய மேல் விலாசத்தைத் தெரிந்துகொண்டு அவ்விடமிருந்து போய்விட்டார். மறுநாள் அவர் கடன் கொடுத்தவனைச் சந்தித்து அவனுக்குச் செல்லாகவேண்டிய பொருள் முழுவதையுங் கட்டி இரசீது பெற்றுக்கொண்டு போய்விட்டார். கடன்பட்டவனுக்கு வெகுநாள்வரை தனக் குதவி செய்தவர் இன்னரென்றே புலப்படா திருந்தது.

ஸர் பிலிப் ஸிட்னி என்பவர் போர்க்களத்தில் காயம் பட்டு மரணத் தறுவாயி லிருக்கையில், சில வீரர்கள் ஒரு பாத்திரத்தில் நீர் கொண்டுவந்து அவரிடங் கொடுத்தார்கள். அவர் அதைக் குடிக்கப் போகுந் தருணத்தில், அருகே ஒரு வீரன் விடாய்த்திருப்பதைக் கண்டு, தமது கையிலிருந்த நீர்ப் பாத்திரத்தை அவனிடங் கொடுத்து விட்டார். அவன் அதை ஆவலோடு வாங்கிப் பருகுவதைக் கண்டு அவர் மகிழ் வடைந்து உயிர்துறந்ததாகச் சரித்திரம் கூறும்.

"காலத்தினுற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

ஆகையால் செய்கின்ற உதவியை உற்ற விடத்தே செய்யவேண்டும். இஃது மிகவும் எளிய தன்று. எப்பொழுதும் சுய நலத்தையே கருதி வாழும் மக்கள் பிறருடைய துயரமும் துன்பமும் எத்தன்மையன வென்று எளிதில் அறிய முடியாது. பிறருடைய துயரத்தையும் துன்பத்

S.—7

தையும் அறிந்து உதவி புரிவதற்கு இளமையிலிருந்தே பழகவேண்டும்.

ஒரு தருணம் சித்தார்த்தர் ஒரு பூங்காவி லிருக்கையில், அங்கே ஓர் அன்னம் அம்பு பட்டுக் கிடந்தது. அதன் வெண்மையான இறகுகள் செங் குருதியில் தோய்ந்து கிடந்தன. அவ்வன்னம் நோவைத் தாங்க முடியாமல் துடித்துக்கொண் டிருந்தது. சித்தார்த்தர் ஓடிச் சென்று, அப்பறவையை மெத்தெனப் பிடித்து அதன்மேல் தைத் திருந்த பாணத்தை மெல்லென எடுத்தார். பின்பு அதன் புண்ணில் மருந் திலைகளைப் பிழிந்து கட்டினார். அதன் துயரத்தைத் தம்மா லானமட்டும் ஆற்ற முயன்றார். ஆயினும், அதற்குற்ற நோவு எப்படிப்பட்ட தென்று அவர் அறியாதிருந்தார். ஆதலால், அவர், அந்தக் கணையை எடுத்துத் தமது கரத்தில் உறுத்திப் பார்த்தார். அப்பொழுதுதான் அவருக்கு அப்பறவையின் நோய் எத் தன்மைத் தென்று புலப்பட்டது. இவ்வாறு பிற வுயிர்களின் துயரை உணர அவர் இளமை முதற் கொண்டே பயின்றதினால், முடிவில் உலகி லுள்ள எல்லா உயிர்க ளிடத்தும் அன்பு மிக்க மகா புத்தராய் விளங்கினார்.

பிறர்க்கு உதவி புரிவதில் அன்பே நமது உள்ளத்தை மேற்கொள்ள வேண்டும். ஆதலால் மனித சமூக வாழ்க்கைக்கு அன்பே முக்கிய ஆதாரமாகும்.

"அன்பிலார் எல்லாந் தமக்குரியர் ; அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு."

23. மகானுகிய சைரஸ்

நெடுங் காலத்திற்கு முன், நமது பரத கண்டத்தின் வடமேற்கில் பாரசீகம் என்றும், மீதியா என்றும் இரு பெரு நாடுகள் இருந்தன. மீதியா என்னும் நாட்டை அஸ்தியா கஸ் என்பவன் ஆண்டுவந்தான். பராக்கிரம சாலி யாகிய அஸ்தியாகஸ் பாரசீகரை வென்று தன் ஞணையின் கீழ் அடக்கி வைத்திருந்தான். ஆகையால் மீதியர், பாரசீகரை இழிவாக நடத்தி வந்தனர். இங்ஙனம் இருக்கையில் ஒரு நாள் அஸ்தியாகஸ் தன் மகள் வயிற்றிற் பிறக்கும் மகன் ஆசியாக் கண்டம் முழுவதையும் ஆளுவான் என்று கனவு கண்டான். தன் மகனுக்குப் பட்டங் கிடைக்காமல், தன் மகளுக்குப் பிறக்கும் பேரன் தன் நாட்டை யாள்வது அஸ் தியாகஸ் மன்னனுக்கு விருப்பமில்லை. ஆகையால், அவன் பாரசீக நாட்டி லுள்ள சிற் றரச ெனுருவனுக்குத் தன் மகளை விவாகஞ் செய்து கொடுத்துவிட்டான். அம் மகள் வயிற்றிற் பிறந்தவனே சைரஸ்.

சைரஸ் பிறந்த செய்தியைக் கேட்ட அஸ்தியாகஸ் மனக்கலக்க மடைந்து அவனைக் கொன்றுவிடப் பல சூழ்ச்சி கள் செய்தான். ஆயினும், சைரஸ் அச்சூழ்ச்சிகளுக் கெல் லாம் தப்பிப் பிழைத்துப் பாரசீகத்திலேயே வளர்ந்து வந் தான். சைரஸ் உயிரோ டிருப்பதை அறிந்து அஸ்தியாகஸ் அவனையும், அவன் தாயையும் தன்னிடம் அழைத்துக் கொண்டான். ஆயினும், அவ னுள்ளத்தில் சைரஸை எவ் வாருயினும் கொன்றுவிட வேண்டு மென்னும் எண்ணமட் டும் நீங்க வில்லை. சைரஸ் மீதியா வுக்குச் சென்றபொழுது அவனுக்கு வயது பன்னிரண்டு.

சைரஸ் மீதியாவிற்குச் சென்ற இரண்டாவது மாதத் தில், ஒருநாள், அஸ்தியாகஸ் தன் பட்டமகிஷியின் பிறந்த

நாளைக் கொண்டாடுமாறு சிற்றரசர் பலரையும் விருந்திற் கழைத் திருந்தான். அன்று, அரண்மனையில் ஒரு மணிக் கூடத்தில் பெரு விருந் தொன்று ஆயத்தமா யிருந்தது. அங் குப் பல வேந்தர்கள் தத்தமக் குரிய ஆசனங்களில் அமர்ந் திருந்தனர். அரசனும், அரசியும் சீரிய மணித் தவிசுகளில் வீற்றிருந்தனர். சைரஸும் அவன் தாயும் அரசற் கருகா மையில் உரிய ஆசனங்களில் அமர்ந் திருந்தனர். பல பணி யாளர் பொற் றட்டுகளில் தேன்படு கனிகளும், விண்ணமு தினும் தித்திக்கும் பல்வகைச் சிற்றுண்டிகளும், அறுசுவை அடிசில்களும் விருந்தினர் முன் கொண்டு வந்து வைத்தனர். மணிக் குமிழிகள் செறிந்த திராக்ஷை நறவம் நிறைந்த பல பொற் கிண்ணங்கள் ஒவ்வொருவர் முன்னும் வைக்கப் பட்டன.

அப்பொழுது யாவரும் பெருங் களிப்போடு உண்ணத் தொடங்கினர். சைரஸ் பாரசீக நாட்டில் இத்தகைய விருந்தை ஒருபொழுதும் கண்டறிந்திரா னென்றும், ஆதலால் யாவற்றையும் மிக்க விருப்பத்தோடு உண்பா னென்றும் அஸ்தியாகஸ் கருதி யிருந்தான். ஆனால் சைரஸ் ஒன்றுமே உண்ணாது வாளா இருந்ததைக் கண்டதும், அவனை நோக்கி, அஸ்தியாகஸ், "சைரஸே! இதற்கு முன் ஒரு பொழுதும் இத்தகைய விருந்தைப் பார்த்திருக்க மாட்டாயே; ஏன் யாவற்றையும் உண்டு மகிழா திருக்கின் றாய்?" என்று வினவினான்.

அதைக் கேட்ட சைரஸ் எழுந்து நின்று, "பார சீகருக்கு இத்தகைய விருந்துகளில் விருப்பமில்லை. நாங்கள் விருந் தளிக்கும் பொழுது இதனினும் சிறந்த முறைகளைக் கையாடுகிறோம். நாங்கள் கோதுமை ரொட்டியும்,இறைச்சி யும் உண்டு தெள்ளிய நீரைப் பருகுவோமே யன்றி இத்

தகைய சம்பிரமமான உணவுப் பொருள்களை நாடமாட்டோம். நாங்கள், செவிக் குண வில்லாத பொழுது சிறிது வயிற்றுக்கும் ஈவோம். நீர் வேட்கை யடைந்த பொழுது நன்னீரைப் பருகுவோம். இதனுல் நாங்கள் நோயுறுவதில்லை ; அன்றியும் உடலுறுதி யடைந்து வாழ்கின்ருேம். எம் நாட்டு வழக்கப் படி செய்வதையே நான் விரும்புகிறேன் ” என்ருன்.

அஸ்தியாகஸ் :—இங்கேயும் அப்படியே செய்யத் தடை யில்லை. நீ உனக் கிஷ்டமானபடி ரொட்டியைத் தின்று நீரைப் பருகித் திண்ணியவுடலோடு உன் நாட்டிற்குத் திரும்பிப் போகலாம். ஆனுல், உனக்கென் ருக்கிய இவ் வரிய தட்டுக்களி லுள்ள உணவுப் பொருள்களை யெல்லாம் நான் என்ன செய்வது ?

சைரஸ் :—இவற்றை யெல்லாம் எனக்கே கொடுத்து விட இசைகிறீரா ?

அஸ்தியாகஸ் :—முழு மனதோடு கொடுக்கிறேன். ஆனுல், நீயோ இவற்றை உண்ண மாட்டாயே. அங்ஙனமிருக்க, இவற்றை என்ன செய்வாய் ?

சைரஸ் :—இவ் வரண்மனையில் என்னிடம் அன்பாயிருந்தவர்களுக்கு இவற்றை யெல்லாம் கொடுத்துவிடுகிறேன்.

அஸ்தியாகஸ் :—உன் னிஷ்டப்படியே செய்.

சைரஸ் உடனே அங்கிருந்த ஏவலரை ஒவ்வொருவராய் அழைத்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொருளாகக் கொடுத்துவிட்டான். ஆயினும் அரசனுடைய பானபாத்திரக் காரனுக்கு மட்டும் ஒன்றுமே கொடுக்க வில்லை. அரசன் அதன் காரணத்தை விசாரித்த பொழுது, சைரஸ்,

மன்னனை நோக்கி! "அரசே! இவன் உமது பான பாத்திரத்தில் நஞ்சிடுகின்றான்" என்றான்.

அதைக் கேட்ட அரசன், "இஃது உண்மையா? நீ கண்டனையா? நான் முன்னரே இப்படி நடக்குமென்று சந்தேகித்தேன். அப்படியே ஆயிற்று," என்று சினந்து கூறினன்.

அப்பொழுது சைரஸ் பதருது, "அவன் நஞ் சிடுவதை நான் நேரிற் பார்க்க வில்லை. ஆயினும், இவ் வரண்மனையில் பெரு விருந்துகள் நடைபெறும் பொழு தெல்லாம், இங்குள்ளவர்கள் செய்கின்ற செய்கைகளையும், அரச ராகிய தாங்கள் செய்கின்ற வினைகளையும் கண்டு, பான பாத்திரக் காரன் உங்களுக்கு நஞ்சிடுவ தாக நான் தீர்மானித்துக் கொண்டேன். நீங்க ளெல்லோரும் மயக்கந் தரும் மதுவை மட்டுக்கு மிஞ்சி யுண்ட பின் மதியற்றவ ராகி விடுகிறீர்கள். சிறுவர்களாகிய எங்களிடம் எங்கெந்தக் காரியங்களைச் செய்யக் கூடா தென்று கூறுகிறீர்களோ, அவற்றையே நீங்கள் செய்கிறீர்கள். அரசர்களது வாயில் ஆண்டிகள் பேசு மொழியும், ஆண்டிகளது வாயில் அரசர்க ளுடைய மொழியும் பிறக்கின்றன," என்றான்.

அப்பொழுது அஸ்தியாகஸ் நகைத்து, "இதுதானா? நன்று, நன்று. உன் தந்தையார் ஒருபொழுதும் மதுபானம் செய்வ தில்லையா?" என்று கேட்டான்.

அதற்கு சைரஸ், "என் தந்தை படிகம் போற் றெளிந்த நன் னீ ரன்றி வேறெதையும் பருகுவதில்லை" யென்று கூறினன்.

சைரஸ், தன் பாட்ட னுடைய அரண்மனையில் மது பானத்தினல் ஏற்பட்டிருந்த சீர்கேட்டைக் கண்டு, தான்

வெகு எளிதில் தன் பாட்டனை வென்று அரசனாகக் கூடு மென்று கருதினான். அங்ஙனமே அவன் ஏற்ற காலத்தில் தன் பாட்டனது சேனையை எதிர்த்து, வெற்றி பெற்றுத் தானே பாரசீகத்திற்கும் மீதியாவிற்கும் அரசனானான்.

24. மனோ ராஜ்ஜியம்

ஒருகதை உரைப்பேன் கேள் நீ—ஓதுமோர் நகரந்தன்னில்
தரித்திரப் பிரமசாரி சார்ந்தொரு சிராத்தத்து (உ)ண்டான்.
அரைத்திடும் பொரிமாத் தோண்டி அவற்கொரு மறை
யோன் ஈந்தான்.
திருப்தியில் பருப்பும் சோறும் தின்றதோர் மயக்கத்தாலே

மற்றொரு நகர்க்குச் செல்லும் வழியிலோர் மணல்தடத்தில்
சற்றொரு கணப்போ தங்கே தரித்தவன் இருந்து, நெஞ்சில்
உற்ற காரியங்கள் கோடி உன்னினன். "இந்த மாவை
விற்றுநாம் ஆடுவாங்கி மேய்க்கில் ஓரிரண்டு குட்டி

"போடும். அவ்விரண்டில் ஒன்று பொருந்திய·கடாவைவிற்று
நாடுபெண் ஆடிரண்டு நய விலை யாகக் கொள்வோம்.
ஆடொரு நாலாம். அந்த ஆடுகள் இரண்டிரண்டாப்
போடும்: அக்குட் டியோடே பொருந்திய பனிரண்டாமே.

"பன்னிரண்டாடும் விற்றுப் பசுக்கள் ஓரிரண்டு கொள்
[வோம்.
தன்னிலே பட்டிமேய்ந்து தருக்கியே இரண்டும் ஈனும்.
மன்னுபால் நெய்யும் விற்று மற்றிரு பசுவும் கொள்வோம்.
அன்ன அப்பசுக்கள் ஆறும் ஆறு சேங்கன்று நல்கும்.

"மூவணை யேரும் கட்டி முன்னுள நிலங்க ளெல்லாம்
ஓவற வளங்களாக உழுது நாம் பயிர்கள் இட்டே

மேவு தானியங்கள் எல்லாம் விலைகளைக் குறைய விற்றுக்
காவலன் அறிக்கையாலே கனக்கலூர் வீடுகட்டி,

“ இருந்து நாம் பணமுங்காசும் ஏரொடு பொருளும் தேடிப்
பொருந்திய பிராமணர்க்குப் போஜனம் இடுவோம். இட்டால்
வருந்தியே நமக்குப் பெண்ணும் வலியவே தருவார். அந்தத்
திருந்திழையாளும் நாமும் செருக்கி அங்கிருக்கும் நாளில்,

“ மாரனும் இரதிதானும் மருவியவாறு நாமும்
ஆரவே இனிது வாழ்ந்தே அருமந்த மகனைப் பெற்றே
பேருறு சோமசன்மா என்று பேரிட்டவ்வூரில்
காரகஸ்தனுமாய் வாழ்வுகனம்பெற இருப்போம் என்றும்.

“ அப்படி யிருக்கும் நாளில் அந்தியில் பசுக்கள் கட்டக்
கொப்படர் கண்ணுள் செல்லக் குழந்தையும்அழும். நாம்ஓடி
இப்படி அடிப்போம் அங்கே ” என்றொரு தடி யெடுத்துச்
செப்பிய பொரிமாத் தோண்டி சிதறிட அடித்திட்டானே.

கலங்கினன் பிரமசாரி, காரகஸ்தங்க ளெல்லாம்
துலங்கிய பொரிமா வைத்த தோண்டியொ டழிந்ததென்றே
மலங்கு கண்ணீர்கள் சோர வயிற்றினில் அடித்துக்கொண்டே
நிலந்தனில் புரண்டுவீழ்ந்து நெடுந்துயர் அடைந்தானன்றே.

25. அரசிறை

அரசர் அனைவரும், ஓதல், பொருதல், உலகு புரத்தல், ஈதல், வேட்டல், படைபயிறல் என்னும்அறுதொழிலுடைய வராவார். இவற்றுள், உலகு புரத்தலே முதன்மையாகும். அரசர் நாட்டைக் காக்குமாறே மற்றேனைய ஐந்து தொழில் களையும் மேற்கொள்கின்றனர். ஒரு குடும்பத்தில் எவ்வாறு தகப்பன் தலைமை வகித்து அக்குடும்பத்தாரைக்

காக்கின்றனே, அவ்வாறே அரசனும் தன் நாட்டில் தலைமை வகித்து அதனைக் காக்கக் கடமைப்பட் டிருக்கின் றான்.

மக்கள் அனைவரும் குழுமி உறைபவர். ஒன்றுகூடி வாழும் இயல் புடையவர் யாவரும், தம்மை நடாத்தும் நாயக னெருவனைத் தெரிந்துகொண்டு அவனது ஆணைப் படி ஒழுகுவது வழக்கம். மனிதன் காட்டில் திரிந்து வன விலங்குகளை வேட்டையாடி வயிறு வளர்த்த காலத்திலும், பின்னர், நாகரிக மடைந்து முன்னேறிய காலத்திலும், தன்னிலும் திறமை வாய்ந்த ஒருவனுக்கு முடிவணங்கி வந்தான். வலிமை மிக்கவர் வலிமை குன்றியவரை மேற் கொண்டு ஆளுதல் தொன்று தொட்டே ஏற்பட்ட தாகும். இங்ஙனம் தலைமை பூண்ட வல்லவன் தன்னைச் சார்ந்த வரைக் காக்கக் கடமைப்பட் டிருக்கிறான். அவனைச் சார்ந்தவர்தம் முயற்சியால் தேடிய பொருளில் ஒரு பகு தியை அவனுக்கு இறையாகச் செலுத்தி வந்தனர். அங் ஙனம், குடிகள் தம் தலைவர்க்கு இறை செலுத்த வேண்டி யது கடமையாயிற்று.

அரசிறை என்பது, ஓர் அரசனுக்கு அவன் நாட்டுக் குடிகள் செலுத்தும் பொருளும், பகைப் புல மன்னர் பணிந்து கொடுக்கும் பொருளுமாம். மிகத் தொன்மை யான காலங்களிலே, குறிப்பிட்ட வடிவும் மதிப்பு முடைய நாணயங்கள் ஏற்படவில்லை. அந்நாட்களில்ஒருவன் தனக்குத் தேவையான பொருளை வாங்கும் பொருட்டுத் தன்னிடத் தில் மிகுதியாயுள்ள மற்றெரு பொருளைக் கொடுப்பான். ஆகையால் அக் காலங்களில் நிகழ்ந்த வாணிபம் முழுவதும் பண்ட மாற்று முறை யாகவே நடந்தது. குடிகள் தம்மைக் காக்கும் அரசனுக்குத் திறை செலுத்தும்பொழுதும்

பண்டங்களையே கொண்டுவந்து கொடுத்தார்கள். குறிஞ்சி நிலத்தில் வாழ்பவர் தம்மைப் பராமரிக்கும் அரசனுக்குக் குறிஞ்சி நிலப் பொருள்களையே திறையாகச் செலுத்தி வந்தனர். முல்லை நிலத்தில் வாழ்பவர் தம் தலைவனுக்கு முல்லை நிலப் பொருள்களை யளிப்பர். இவ்வாறே வேறு நிலத்தவரும் தம் மரசனுக்கு இறை செலுத்திவந்தனர்.

ஓர் அரசன் தன் நாட்டிற்கு வேற்றரசரால் வருந் தீமையைத் தடுக்கவேண்டும். ஆகையால் அவன் எப் பொழுதும் விழிப்புடையவனாகித் தன்னைச் சூழ வுள்ள அயல் நாட்டு மன்னரைப் பணியச் செய்தல் வேண்டும். இதன் பொருட்டு மன்ன னொருவன் படை வலிமை மிகுந்த வனா யிருக்கவேண்டும். பெரும் படை யொன்றைப் போற் றுதற்குப் பொருள் மிகவும் அவசிய மாம்.

மேழிச் செல்வமே நாட்டின்பிரதானசெல்வமாம். உழவர் அனைவரும் வான் நோக்கி வாழ்பவர். நீரின்றி அமையாது உலகு. ஆதலால் மன்னுயிரைக் காக்கும் மன்னன், வான் மறந்த காலத்திலும் உலகில் உயிர்கள் உலவாத வாறு, நீர் நிலைகள் அமைத்தும், வாய்க்கால்கள் தோண்டியும், ஏரிகள் வெட்டியும் உழவருடைய தொழிலுக்கு உதவி புரிவது இன்றியமையாத தாகும். இக் கடமையைக் குறைவின்றி நிறைவேற்றுவதற்கும் பொருள் தேவை.

வேந்த னொருவன், நாடுதற் குரிய மற்றொரு செல்வம் குடிகளின் நோயற்ற வாழ்க்கை யாம். நோயற்ற வாழ்க்கையி னால் குடிகள் குறை வற்ற செல்வ முடையவர்களாய் இருப்பார்கள். குடிகள் நிறை செல்வ முடையவராய் இருக்கும்பொழுது அரசனது களஞ்சியம் தானாகவே நிறையும். இதன் பொருட்டுக் காவலனொருவன் தன் குடி களின் சுகாதாரத்தைப் பேணும் அதிகாரிகளை யேற்படுத்

துவ தோடு ஊர் தோறும் மருத்துவச் சாலைகளையும் நிறுவ வேண்டும்.

இப்படியே ஒவ்வொன்றுகச் சிந்திக்கு மளவில், குடிகளைக் காக்கும் பொருட்டு அரசர் செய்யவேண்டிய முறையொழுங்குகள் பலவாம். அவை யனைத்தையுஞ் செய்வதற்கு ஏராளமான பொருள் தேவை. இதன் பொருட்டே குடிகள் இறை செலுத்தக் கடமைப்பட்டவ ராவார்.

முற் காலத்தில் செந்தமிழ் உலகை யாண்ட மன்னரது தலை நகரங்களில் ஞாலங் காவலர் நாட்டிறை பகருங் காலை முரசங் கடைமுகத் தெழுதல் வழக்கமா யிருந்தது. சோழ நாட்டை யாண்ட கரிகாலனைப் பல அயல்நாட்டு மன்னர் பணிந்து இறை செலுத்துஞ் செம்மையை,

"மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக்
கோனிறை கொடுத்த கொற்றப் பந்தரும்
மகதநன் னாட்டு வாள்வாய் வேந்தன்
பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபமு
மவந்தி வேந்த னுவந்தனன் கொடுத்த
நிவந்தோங்கு மரபிற் றோரண வாயிலும்"

என இளங்கோ வடிகள் வருணித் திருக்கின்றார். இது போன்ற பல உதாரணங்களாலும் பிறவாற்றானும் வலிமை மிக்க மன்ன னொருவனைச் சிறப்பிக்க அயல் நாட்டு மன்னர் பல அரிய பொருள்களை இறை செலுத்துவது மிகவுந் தொன்மையான வழக்கமாகும்.

நமது நாட்டை யாண்ட மன்னர்கள் தம் குடிகளிட மிருந்து ஆறி லொரு பங்கு கடமை கொள்வது வழக்கமா யிருந்தது. இவ் வர சிறை நிலத்தை உழுது வருகின்ற பலனில் ஆறி லொரு பங்கே யாகும். இது வன்றி வேறு பல வரிகளும் ஏற்பட்டிருந்தன. அரசியல் செவ்வனே நடை

பெறுமாறு மன்னர் நீதி தவறாது விதிக்கும் இறைகளைக் குடிகள் செலுத்தக் கடமைப்பட்டவ ராவார். ஏனெனின், "கொற்றவர் நகர்க்குழைத்துக் கூலியா விறையைக் கொள்வர்." அன்றியும், குடிகள் அரசர் செய்த "நன்றி மறப்பது நன்றன்று."

ஆயினும், "கிளர்வேந்தன் தன்னாடு வாட்டான் என்றல் வனப்பு." செங்கோல் முறைமை கோடாத மன்னர் தம் மடி நிழலில் வாழ்வாரை வருத்தாமல், காலமறிந்து ஆறி லொரு பங்கு திறை கொள்ளவேண்டும் என்று மனுநெறி கூறும். கால மறிந்து திறை கொள்ளவேண்டு மென்றமையால், நிலுவை யின்றிக் கொள்ளுதலுமாம். அன்றியும், அரசன் திறை சுமத்தும் பொழுது, குடிகள் அதனைத் தாங்குவரோ, இல்லையோ வென்பதனையும் செவ்வனே சீர்தூக்கிச் செய்ய வேண்டும். அரசாங்கம் இனிது நடை பெறக் குடிகள் இறை செலுத்துதல் இன்றி யமையாத தாகும்.

26. வீதிவிடங்கன்

பண்டைக் காலத்தில் தமிழகம் முப்பெரும் அரசுக ளாகப் பிரிக்கப்பட்டு, தமிழ் நாட்டுமூவேந்தர்க ளாகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் செங்கோல் செலுத்தப்பட் டது. இம் மூன்று நாட்டிலும் முதல் நாடாக மேன்மை பெற்ற சோழ தேசம், தெய்வத் தன்மை வாய்ந்த காவிரி நதி பாய்வதால் பல் வளமும் நிறைந்து பூமிதேவிக்கு முகம் போல விளங்கிற்று. இச்சோழ வள நாட்டில் தியாகராஜப் பெருமான் எழுந்தருளிய சிவாலயத்தையும், கமலாலயம் என்னும் புண்ணிய தடாகத்தையும் உடைத்தா யுள்ள திரு வாரூர் இன்றைக்கும் சிறப்புற்று விளங்குகிறது.

நெடுங் காலத்திற்கு முன்னே இவ்வூரை இராஜ நகராகக் கொண்டு மனு என்னுஞ் சோழ அரசர் ஆண்டு வந்தனர். இவர், "மன்னுயிரைத் தன்னுயிர்போல்" காத்து வரும் மாண்புற்றவர். உலக முழுவதையும் ஒரு குடை நிழலில் வைத்துச் செங்கோல் செலுத்தியவர்.

இவ்விதமாக ஒப்புயர்வற்று ஆண்டு வருகையில், அம் மனுச் சக்கரவர்த்தி யானவர் புத்திரப் பேறில்லாமல் மனம் வருந்தி அனேக தானங்களும், தருமங்களும், வேள்விகளும், விரதங்களும் இயற்றி வந்தனர். "தீராக் குறைக்குத் தெய்வமே கதி" என்கிறபடி அத் திருவாரூரிற் கோயில் கொண் டருளிய தியாகராஜப் பெருமானைத் தானும் தன் தரும பத்தினியும் தமக்குச் சந்தான பாக்கிய மளிக்கப் பன்னாள் வேண்டி வந்தனர்.

'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்னும் முதுமொழிக் கிணங்க, இராஜ தம்பதிகள் செய்த வழிபாட்டுக்கு இரங்கிச் சிவபெருமான் இவர்கட்கு ஒரு புதல்வன் பிறக்க அருள் செய்தார். புத்திரன் பிறந்ததைக் கேட்ட மன்னன் மனங்குளிர்ந்து உடல் பூரித்துப் பெருமகிழ்ச்சி யுற்றுப் பல் விதத் தானங்களைச் செய்தார். பட்டத்திற்கு வரக் கூடிய ஓர் ஆண் மகவு அரசருக்கு அவதரித்ததைப் பற்றிப் பிரஜைகளும் பேருவகை கொண்டு மன்னரை வாழ்த்தினர். பாலனும் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்பிறைச் சந்திரன்போல வளர்ந்து வந்தான். மகாராணியாரும் தன் அருமைப் புதல்வனை வாச நீராட்டியும், இனிய உணவுகளை ஊட்டியும், இரத்தினங்கள் பதித்த பல பொன் னாபரணங்களைப் பூட்டியும், மழலைச் சொற்கள் கேட்டும், உச்சிமோந்தும், முத்தம் பெற்றும் மகிழ்வுற்றனர். தியாகராஜக் கடவுளின் கருணையாற் கிடைத்த அக்-

குழந்தைக்கு அவரது திருப்பெயர் கொண்டு வீதிவிடங்கன் என்று நாமகரணமும் செய்யப்பட்டது.

ஐந்தாம் பிராயம் எய்தியதும் வீதிவிடங்கனுக்கு மனுச் சோழர் அட்சராப்பியாசஞ் செய்வித்தார். அரசிளங் குமரனும் பல் கலைகளையுங் கற்றுக் கல்வி கேள்விகளில் வல்ல னாய் நற்குண நற்செய்கை உடையவனாய், எல்லா மறிந்தவ னென்று கண்டோர் கொண்டாடவும், கேட்போர் மனங் களிக்கவும் இளவரசுப் பட்டம் பெறுதற்குரிய பருவ முற்றான்.

ஒரு நாள், வீதிவிடங்கன் தனது பெற்றோர்க ளிடஞ் சென்று பக்தியுடன் பணிந்தெழுந்து, கைகூப்பி, வாய் புதைத்து நின்று தங்கள் குல தெய்வமாகிய தியாகராஜ ரைத் தரிசித்துவரத் தனக்கு அனுமதி யளிக்க வேண்டி னன். பெற்றோரும் அதற்கிசைய இராஜ குமாரன் அபி ஷேக திரவியங்களையும், திருவாடைகளையும், புஷ்ப மாலை களையும், மற்றும் வேண்டிய பூஜா பதார்த்தங்களையும், தியாகேசர் கோயிலுக்குக் காரியக்காரர்கள் மூலமாக அனுப்புவித்துப் பின்பு தான் நீராடி, வெண்பட் டுடுத்து, திருநீறு தரித்து, பல ஆபரணங்கள் பூண்டு, நான்கு குதிரை கட்டிய இரதத்தின் மேல் ஏறி அமர்ந்து கோயில் நோக்கிச் சென்றான். மந்திரி, பிரதானி முதலான காரியத் தலைவர் களும், உறவினர், புரோகிதர், பிரஜைகள் முதலானவரும் திருவிழாக் கூட்டம்போல் நெருக்கமாகப் புடை சூழ்ந்து சென்றனர்.

தேரிற் கட்டிய குதிரைகள், அதிவேகமாகச் செல் லும் பொழுது, "இளங்கன்று பயமறியாது" என்கிற பழமொழிப் படி ஒரு அழகிய பசுங் கன்று கூட்டத்தில்

நுழைந்து, துள்ளிக் குதித்துத் தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு, அரைபட்டு உயிர் நீத்தது. பின்வந்த தாய்ப் பசு, இறந்து கிடந்த தன் கன்றைப் பார்த்து ஆருத்துயர் கொண்டு கதறிற்று. உடனே வீதிவிடங்கன் இடியோசை கேட்ட நாகம்போலத் திடுக்கிட்டு நடு நடுங்கித் தேரிலிருந்து இறங்கிக் கன்றைக் கண்டு அளவற்ற துன்பம் அடைந்து வருந்தினன். எல்லா ஜனங்களும் பிரமித்து நின்றார்கள். "பசுவைக் கொலை செய்வதே பாவங்களிலெல்லாம் பெரும் பாவம். அதைப் பார்க்கிலும் பசுவின் கன்றைக் கொலை செய்வது பஞ்சமா பாதகத்திலும் மிகக் கொடியதே! என் செய்வேன்! எவ்வாறு உய்வேன்! கடவுளைத் தரிசனஞ் செய்யக் கால் வருந்த நடந்து செல்வதே சரி; அப்படிச் செய்யாமல் செல்வச் செருக்கினல் தேரிலேறி வந்ததே தவறு!" என்று இளைஞன் தன்னை நொந்து கொண்டான். உடன்வந்த அந்தணர், அமைச்சர் முதலானோர் அவனுக்குத் தேறுதல் சொல்லி அவனை அரண்மனைக்குத் திரும்ப அழைத்துச் சென்றனர். தான் செய்த பழியைத் தன் தந்தை அறிவதற்கு முன்னே பரிகாரஞ் செய்து முடிக்கக் கருதி வீதிவிடங்கன் அறநூல் வல்லுநரிடம் போயினன்.

கன்றினை இழந்த தலையீற்றுப் பசுவானது, அதன் பிரிவாற்றுமையைப் பொறுக்கமாட்டாமல் அலறிக் கண்ணீர் விட்டு, அக் கன்றைச் சுற்றிச் சுற்றி வந்து, அதனுடம்பை முகர்ந்து, கீழே வீழ்ந்து, புரண்டு வருந்திற்று. பிறகு அக் கன்றைப் பசுந்தழைகளால் மூடிவைத்து, அரசன் அரண்மனை வாயிலை யடைந்து அங்கே கட்டியிருந்த ஆராய்ச்சி மணியைத் தனது கொம்பினல் அடித்தது. ஒரு காலத்திலாயினுங் கேட்டறியாத ஆராய்ச்சி மணியின் ஓசையை

இன்று புதிதாகக் கேட்ட மனுச் சக்கரவர்த்தி, என்ன விபரீதமோ வென்று திடுக்கிட்டு, சிங்காதனத்தி லிருந்து இறங்கி ஆராய்ச்சி மணி கட்டிய வாசலுக்கு அதிவேகமாக வந்து, "அதனை அடித்தது யார்?" என்று தமது வாயிலாளரைக் கேட்டார். அப்பொழுது "ஒரு பசு தனது கொம்பினால் அதனை அசைத்தது" என்றார்கள். அதன் காரணம் யாதென்று அரசன் விரிவாக விசாரணை செய்தபோது, அவனது மந்திரிகளில் ஒருவன் உற்றது உரைத்தான். அது கேட்டு அவர் விரைவிலே பசுவி னிடஞ் சென்று, பார்க்க, அதன் பரிதாப நிலையை உணர்ந்து தனது செங்கோலைக் குறை கூறிக்கொண்டு, "ஐயோ! புத்திரனைப் பெற்றால் புண்ணியம் பெறலாமென்று எண்ணி யிருக்கப் பெரும் பழியை யடைந்தேன்!" என்று துக்கித்துத் தன்னை வெறுத்துக் கொண்டார். பிறகு மந்திரிகளைப் பார்த்து யாது செய்தால் இப்பழி தீருமென்று அவர் வினவினர். மந்திரிகள், பசு வதையைத் தீர்த்தற்கு அறநூலிற் சொன்ன பரிகாரத்தைச் செய்யவேண்டுமென்று கூறினார்கள். அப்போது அரசர் "நீங்கள் சொன்ன முறையிலே பரிகாரஞ் செய்தாற் கன்றை யிழந்த பசுவிற்குத் துயரம் நீங்கி விடுமோ? நாட்டினைக் காக்கும் அரசன் தன் காவலுக்குட்பட்ட உயிர்களுக்குத் தன்னாலும் தன் பரிசனங்களாலும், பகைவர்களாலும், கள்வர்களாலும், பிற உயிர்களாலும் இடையூறு நேரிடாமற் காப்பதற்குக் கடமைப்பட்டவ னல்லனோ? என் மகன் செய்ததற்கு அவனைத் தண்டியாமற் பரிகாரங்கள் தேடுவது, நடு நிலைமைக்கு மாறாகு மல்லவா? ஒருயிரைக் கொன்றவனுக்குக் கொலைத் தண்டனை விதிப்பதே முறையா யிருக்க, அம்முறையினை அரச குமாரன் சம்பந்தமாகக் கையாளா திருத்தல் நியா

யத்திற்கு மாறுபா டாகுமென்றனன்.” அப்போது மந்திரிகள், “அருமைத் தனிப் புதல்வனை ஆவின் கன்றின் பொருட்டுக் கொல்லுதல் வழக்க விரோதம். ஆதலால் நூலில் விதித்த பரிகாரத்தைச் செய்வதே முறை” யென்றார்கள். அவர்களது உரையைக் கேட்ட அரசன், வெகுண்டு மந்திரிகளை நோக்கி “பிறப்பு, குணம், சாதி, தொழில் முதலான வித்தியாசங்களைப் பாராட்டாது எல்லா உயிர்களையுஞ் சமமாக வெண்ணி நீதி செலுத்துவதே தகுதி. நீங்கள் நீதியி னுட்பத்தை யறிய வில்லை. ஆராய்ச்சி மணி யடித்த இப்பசு இவ்வளவு துயரப்படும்படியாக ஆவின் கன்றைக் கொன்ற வீதிவிடங்கனை நானும் தேர்க்காலிற் கொன்று வருந்துவதே கடன்” என்றான். அரசனது தீர்ப்பைக் கேட்ட அமைச்சர்கள் அஞ்சி யகன்றார்கள்.

மந்திரிகள் எவ்வளவு சமாதானங் கூறியுங் கேளாது நீதி செலுத்தக் கருதிய மன்னன் ஒரு மந்திரியை அழைத்து வீதிவிடங்கனைத் தெருவீதியிலே தேர்க்காலின் கீழ்க் கிடத்தித் தேரினைச் செலுத்துமாறு கட்டளை யிட்டான். அவ் வமைச்சன் அவ்வாறு செய்வதற்கு மனம் ஒவ்வாது ஒதுங்கிப் போய் உயிர் துறந்தான். அப்போது நீதி வடிவாய் நின்ற மனு மன்னர், தமது குலத்திற்குத் தனிக் கொழுந்தா யுள்ள அருமை மைந்தனைத் தாமே தேர்க்காலிலிட அழைத்து வரச் செய்தார். வீதிவிடங்கனும் சிறிது மஞ்சாது ‘என் அன்புள்ள தந்தையார் கட்டளைப்படி, பசுக் கன்றைக் கொன்ற நான், உயிர் விட்டுப் பழிக்குச் சரிக்கட்டுவேன்’ என்று, கன்று கிடந்த இடத்தில் தானும் படுத்துக் கொண்டான். மலைபோ லுயர்ந்த தம் தேரில் ஏறிக்கொண்டு மனுச் சக்கரவர்த்தியும் தேரினைத் தம் மைந்தன்மேற் செலுத்தினார். அத் தருணத்தில் திருவாரூரிலே வீற்றிருக்

கும் வீதிவிடங்கப் பெருமானாகிய கடவுள், அம்மையப் பராய் விடைமீதில் வெளிப் பட்டுத் தோன்றி, அரசனுக்கு எல்லோருங் காணக் காட்சி கொடுத்து, அருள் புரிந்து ஆவின் கன்றும், அரசகுமாரனும், அமைச்சனும் உயிர்த் தெழும்படி செய்துநின்றார். மன்னரும் பேரானந்த மடைந்து

"அப்பனீ யம்மைநீ யையனுநீ
யன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதருமொண் பொருளுநீ
யொரு குலமுஞ் சுற்றமு மோரூருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய்நீ
துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய்நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்துநீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வநீயே"

என்று மாதிருக்கும் பாதியனை வாயார வாழ்த்தினார். பின்பு கடவுள் மறைந்தனர். ஆவும் அரசனும் அவன் குடிகள் யாவரும் அளவில்லா மகிழ்ச்சி யெய்தினர். இவ்வருஞ் செயல் நிகழ்ந்த நாள் முதற் கொண்டு, மனு நீதி யென்பது ஒப்புயர்வற்ற செங்கோல் முறையைக் குறிக்கும் ஒரு பழமொழியாக வழங்குகிறது.

27. வெனிஸ் வர்த்தகன்

வெகு காலத்திற்கு முன் இத்தாலி நாட்டின் வெனிஸ் நகரில் அந்தோனியோ, பஸானியோ என்னும் இரு நண்பர்கள் வசித்திருந்தனர். அந்தோனியோ பெரிய வர்த்தகன். பஸானியோ தன் கைப்பொருள்களை யெல்லாம் பலவகைக் களியாட்டங்களிற் செலவு செய்து வறியனா யிருந்தான். பெல்மாண்ட் என்னும் நகரில் வசித்த ஒரு சீமாட்டி பெரிய

செல்வ வதி என்றும், அவள் மணம் பெருத மங்கை யென்றும் கேள்விப்பட்டு, அவளை மணக்க எண்ணினுன். அவன் கையிற் பண மில்லாததால் தன் நண்பன் அந்தோனியோ விடம் சென்று தன் செலவுக்காக மூவாயிரம் 'டக்கெட்' நாணயங்களைக் கடன் தந் துதவ வேண்டினுன்.

அந்தோனியோவின் கையில் அப்பொழுது பணமில்லை. ஆகவே, வெனிஸ் நகரத்தில் பணம் வட்டிக்குக் கொடுத்து வாங்கிக் கொண்டிருந்த யூத வர்த்தகனுகிய ஷைலாக்கிடம் சென்று கடன் வாங்குவ தென்று தீர்மானித்தான். அந்தோனியோ கிறிஸ்தவன்; ஷைலாக் யூதன். அக் காலத்துக் கிறிஸ்தவர்கள் யூதர்களைப் பகைத்தனர். அந்தோனியோ ஷைலாக்கைக் கண்டவிட மெல்லாம் ஏசி, ஏளனம் செய்வது வழக்கம். அதனுல் ஷைலாக் அந்தோனியோவிற்குத் தீங்குசெய்யத் தீர்மானித்துத் தருணம் நோக்கியிருந்தான். அந்தோனியோ வேறு வழியின்றி ஷைலாக்கிடம் சென்று மூவாயிரம் 'டக்கெட்டுகள்' கடன் வேண்டினுன். ஷைலாக் தான் கொடுக்கும் கடனுக்கு வட்டி வேண்டிய தில்லை யென்றும், ஆனுல், குறிப்பிட்ட ஒரு நாளில் பணத்தைத் திருப்பித் தரவில்லையானுல், அந்தோனியோ முதலுக்கும் வட்டிக்குமாகத் தன் மார்பிலிருந்து ஒரு இராத்தல் தசையை வெட்டித் தந்துவிட வேண்டுமென்றும் தீர்மானித்துப் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு அவன் கேட்ட தொகையைக் கடன் கொடுத்தான். அந்தோனியோ அதனைப் பெற்றுப் பஸானியோ விடம் கொடுத்தான். பணத்தைப் பெற்ற பஸானியோ நேராகப் பெல்மாண்ட் நகரம் சென்று போர்ஷியாச் சீமாட்டியை நேசித்து வந்தான்.

ஷைலாக்குக்கு ஜெஸிகா என்றொரு மகள் இருந்தாள். அவள் தன் தந்தை அறியாதபடி லாரன்ஸோ என்னும் ஒரு கிறிஸ்தவ வாலிபனை நேசித்து வந்தாள். கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் அக்காலத்தில் பகை மிகுந்திருந்தது. யூதர்கள் மதப்பற்று மிகுந்தவர்கள். கிறிஸ்தவர்களோடு கொண்டு கொடுத்து வாழ்வதைவிட, அவர்கள் சாவை மிகுதியும் விரும்புவார்கள். எனினும் ஜெஸிகா தான் நேசித்த கிறிஸ்தவ வாலிபனையே மணக்கத் துணிந்து, தன் இனத்தார் ஒருவரும் அறியா வண்ணம் லாரன்ஸோவோடு அயலூர் சென்றாள். அவள் போகும் காலையில் ஷைலாக்கின் பொருள்களில் விலையுயர்ந்த பொருள்களை யெல்லாம் தன்னுடன் கவர்ந்து சென்றாள்.

இதனை யறிந்த ஷைலாக் மிகவுங் கோபங் கொண்டான். தன் மகள், தன்னைவிட்டு ஓடிப்போனது கூட, அவனுக்கு அத் துணை பெரிதாகத் தோன்றவில்லை. அவள் தன் பொருள்களைக் கவர்ந்து சென்றதை அவனால் பொறுக்க முடியவில்லை. மேலும், லாரன்ஸோ என்னும் வாலிபன் அந்தோனியோவின் தோழனாகவிருந்தது ஷைலாக்கின் கோபத் தீயில் எண்ணெயை வார்த்தது.

ஷைலாக், அந்தோனியோவின் மேல் பழிவாங்க முனைந்து நின்று, தருணம் நோக்கிக் காத்திருந்தான். பெல்மாண்ட் நகரம் சென்ற பஸானியோ போர்ஷியாவை மணந்து அந்தோனியோவை மறந்துவிட்டான். கடனைக் கொடுக்கக் குறித்த நாளும் நெருங்கியது. அந்தோனியோ எதிர் பார்த்தபடி அவன் கப்பல்கள் நாடு திரும்பவில்லை. ஆகவே, அவன் பணங் கொடுக்கவேண்டிய கெடுவு நெருங்கியதை நினைப்பூட்டிப் பஸானியோவுக்குக் கடிதம் ஒன்று விடுத்தான். அதைக்கண்ட பஸானியோ

போர்ஷியாவிட மிருந்து வேண்டிய பணத்தைப் பெற்றுக் கொண்டு வெனிஸ் நகரம் சேர்ந்தான்.

அந்தோனியோ பணங் கொடுக்கவேண்டிய நாள் தவறி விட்டது. நாள் தவறவும் ஷைலாக் பணம் பெற மறுத்துப் பத்திரத்திலே குறித்தபடி அந்தோனியோ தன் மார்பில் இருந்து ஒரு இராத்தல் இறைச்சியைத் தந்துவிட வேண்டு மென்று மடி பிடித்து மன்றாடினன். கடன் வாங்கியதற்கு இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகம் தருவதாக பஸானியோ கூறியும், ஷைலாக் பெற்றுக்கொள்ள இசையாது, பத்திரத்தில் கண்டபடியே நடந்துகொள்ள வேண்டுமென்று கண்டிப்பாகக் கூறிவிட்டான். பின், வெனிஸ் நகரை யாண்ட பிரபுவின் சபையில், தனக்கு நீதி வழங்குமாறு அந்தோனியோ மீது வழக்குத் தொடர்ந்தான். பிரபுவும் அவ் வழக்கை விசாரிக்க எடுத்துக் கொண்டார்.

பெல்மாண்டி லிருந்த போர்ஷியா, ஷைலாக்கின் குணங்களையும் அவன் அந்தோனியோ மீது வஞ்சகங் கொண்டிருந்ததையு மறிந்தாள். அந்தோனியோ ஷைலாக்குக்கு எழுதிக் கொடுத்த பத்திரப் படியே நடக்க வேண்டி வரும் என்பதை அறிந்த அவள், அந்தோனியோவைக் காக்க வெண்ணி ஒரு யுக்தி செய்தாள். பாட்டுவா நகரில் வசித்த தன் உற்றாகிய ஒரு நியாய வாதியைப் போன்று வேஷமாறி, வெனிஸ் நகரஞ் சேர்ந்து நியாய சபையை அடைந்தாள். அப்பொழுது ஷைலாக் அந்தோனியோ கொடுத்த பெருந் தொகையை ஏற்க மறுத்து அந்தோனியோவின் தசையே வேண்டு மென்று கூறிக் கொண்டிருந்தான்.

நியாய சபையை அடைந்த போர்ஷியா, தன்னுறவினனுகிய பெல்லாரியோ என்னும் நியாய வாதியிட மிருந்து தான் பெற்றுக் கொண்டு வந்திருந்த கடிதத்தைப் பிரபுவிடமளித்துத் தன்னை அறிமுகஞ் செய்து கொண்டாள். அக் கடிதத்தில் அது கொண்டு வருபவர் பெல்தாஸர் என்னும் நியாயவாதி யென்றும், அந்தோனியோவின் வழக்கை வாதிக்க அவரைத் தனக்குப் பதில் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்றும் கண்டிருந்தார். பிரபு, அவ்வழக்கை வாதிக்க பெல்தாஸருக்கு அனுமதி அளித்தார்.

பெல்தாஸர், பிரபுவை நோக்கி, "பிரபுவே! வழக்கின் அம்சங்களை நான் நன்கு யறிவேன். இவர்களில் அந்தோனியோ யார்? யூதன் யார்?" என்று வினவினுள். பிரபு அந்தோனியோவையும், ஷைலாக்கையும் முன்னே நிற்கப் பணித்தார். பெல்தாஸர் என்னும் போர்ஷியா ஷைலாக்கை நோக்கி "உன்னுடைய வழக்கு இதுவரை இல்லாத புதுமையாக இருக்கின்றது. எனினும் வெனிஸ் நகரச் சட்டங்களின்படி உன்னுடைய உரிமைகளை உனக்கு அளித்தே தீரவேண்டும்" என்ருள். பின் அந்தோனியோவிடம், "நீ அவன் விரும்பியபடி செய்யவேண்டும், இல்லையா?"

அந்தோ:—ஆம்: அவ் விதந்தான் ஷைலாக் கூறுகிருன்.

போர்:—இந்தப் பத்திரத்தை நீ எழுதிக் கொடுத்ததாக ஒப்புக்கொள்ளுகிருயா?

அந்தோ:—ஆம், நான் ஒப்புக் கொள்கிறேன்.

போர்:—ஆயின் அந்த யூதன் உன்னிடம் கருணை காட்டவேண்டும்.

K.S.E

ஷை :—இரக்கம் காட்டவேண்டு மென்று எங்கே விதித்திருக்கிறது? அதைச் சொல்லுங்கள்.

போர் :—இரக்கம் என்பதன் இனிய இயல்பு
வருத்தி வருதல் அன்றென வறிக.
வானின் இழியும் மெல்லிய மழைபோல்
நானிலம் வீழும் இருவகை நலத்தது.
ஈவான் பெறுவான் இருவரும் உய்வர்.
மாண்பினில் பெரியதோர் மாண்வலியுடையது.
அரியணை மன்னர்க்கு முடியினும் தக்கது.
கோலின் சிறப்பெலாம் பெருமிதம் அச்சம்
உலக ஆட்சியின் ஆற்றற்கு அறிகுறி;
அரசர் மதிப்பும் அச்சமும் அத்துணையே.
ஆயின் இரக்கம் கோல்நெறி கடந்தது.
மன்ன ருள்ளத்தை ஆளும் மாட்சி.
இறைவன் தனக்கே உரிய பெருங்குணம்.
நீதிமுறையொடு இரக்கம் கலப்பின்
மன்னவ ரரசு இறையொளி போல்வது.
ஆதலின் யூதா! நீதி நின்னதே
ஆயினும் நினைநீ; நீதியே செலுத்தினும்
நம்மி லொருவரும் உய்தல் இல்லை.
இரக்கத்தின்பொருட்டே இறைவனை வேண்டுவம்;
அவ்வேண்டுகோளுணர்த்தும்உண்மையாதெனின்
நாமெலாம் அருட்செயல் ஆற்றல் கடனே.

ஷை :—என் செய்கைகளின் பலனை நான் அநுபவிக்கத் துணிந் திருக்கிறேன். பத்திரத்தில் கண்டபடி விதிக்கச் சபையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

போர் :—அந்தோனியோ பணங் கொடுக்க முடியாத நிலையிலா இருக்கிறான்?

பஸானி :—இதோ, அவனுக்காக நான் தருகிறேன்; இரண்டத்தனை, மூன்றத்தனை—பத்து மடங்கு தருகிறேன். அது போத வில்லையாயின், அந்த யூதன் வஞ்சத்திற் காகவே வழக்காடுகிறான்—என்பது விளங்குமே. நான் உங்களை வேண்டுகிறேன். ஒரு பெரிய நன்மை செய்வதற்காகச் சிறிது தீமையைச் செய்தேனும் சட்டத்தை மாற்றுங்கள். இந்தக் கிழப் பிசாசு கொண்ட கெட்ட எண்ணம் நிறைவேறாதபடி செய்யுங்கள்.

போர் :—ஓ! அது முடியாது. வெனிஸ் நகரச் சட்டங்களை எக் காலத்திலும் மாற்ற முடியாது. இன்று ஒரு காரியத்திற்காக நாம் மாற்றினால் பின்னும் இதைப்போலவே பல முறைகளிலும் மாற்ற வேண்டி வரும்.

ஷை :—நீதி வழங்குவதில் சிறந்த தானியேல் தான் இவர்! நான் உம்மைப் போற்றுகிறேன்.

போர் :—அந்தப் பத்திரத்தை இங்கே கொடு; நான் ஒரு முறை பார்க்கட்டும்.

ஷை :—கற்றறிந்த பண்டிதரே! இதோ.

போர் :—ஓ ஷைலாக்! நீ கொடுத்த பணத்திற்கு மூன்று மடங்கு தருகிறார்களே அதைப் பெற்றுக்கொள்.

ஷை :—அது முடியாது. பணம் பெறுவ தில்லை யென்று இறைவன் மேல் ஆணையிட் டிருக்கிறேன்—பொய்ச் சத்தியம் செய்தவ னாகலாமா?

போர் :—இந்தப் பத்திரம் சட்டப்படி தவணை கடந்ததே. நியாய முறைப்படி யூதன் ஒரு இராத்தல் தசையைப்பெற உரிமை யுள்ளவ னாகின்றான். ஏ யூதா! மூன்று மடங்கு பணத்தைப் பெற்றுக்கொள்; பத்திரத்தைக் கிழித்து விடுகிறேன்.

ஷை :—பத்திரத்தில் கண்டபடி ஒரு இராத்தல் தசையைத் தந்தபின் தாங்கள் அதைக் கிழித் தெறியலாம் —அதற்கு முன் கிழிக்க லாகாது. என் ஆன்மாவின்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்; என்னை என் வழியி னின் றும், கொள்கையி னின்றுந் திருப்ப மனிதனுடைய நாவன் மையால் முடியாது. என் பத்திரப்படியே நடக்க உறுதி கொண்டுள்ளேன்.

அந்தோ :—தீர்ப் பளிக்கும்படி நியாய சபையை முழு மனதுடன் வேண்டிக் கொள்கிறேன்.

போர் :—ஆனல் இதுதான் தீர்ப்பு : ஷைலாக்குக்கு ஒரு இராத்தல் தசை கொடுப்பதற்காக உன் மார்பிடத்தை ஆயத்தஞ் செய்யவேண்டியத்த.

ஷை :—சிறந்த இளைஞ ! தானியேல்போல் நீதி செய்ய வந்தாய்.

போர் :—ஏனெனில் பத்திரத்தில் கண்ட அபரா தத்தை விதிப்பதிலேயே சட்டம் முனைந்து நிற்கின்றது.

ஷை :—உண்மை ; உண்மை ; பக்ஷபாதமற்ற நீதி யதிப ; அறிவு மிக்கோய்.

போர் :—ஆதலின், அந்தோனியோவே! உன் மார்பைச் சித்தஞ் செய்.

ஷை :—ஆம் ; அவன் மார்பு ; போற்றுதற் குரிய நீதிபதியே ! அங்ஙன மன்றோ பத்திரம் கூறுகின்றது ?

போர் :—அங்ஙனமே ; தசையை நிறுக்கத் தராசு கொண்டு வந்திருக்கிறுயோ ?

ஷை :—ஆம். கொண்டு வந்திருக்கிறேன்.

போர் :—காயத்தைக் கட்டுவதற்கு ஒரு மருத்துவரையும் அழைத்து வைத்துக் கொள்.

ஷை :—மருத்துவர் !—பத்திரத்தில் குறித்திருக்கிறதா ? இல்லையே !

போர் :—பத்திரத்தில் இல்லை ; ஆயினும் தருமத்திற்காக அவ்வாறு செய்வது நல்லது.

ஷை :—பத்திரத்தில் இல்லாததால் அவ்வாறு செய்ய இணங்கேன்.

போர் :— ஓ வாணிப ! ஏதாவது சொல்ல வேண்டுவதுண்டா ?

அந்தோ :—மிகக் கொஞ்சம் ! நான் தயாராயிருக்கின்றேன். ஓ பஸானியோ ; உன் கையைக் கொடு ; நான் செல்கிறேன்.

ஷை :-—நேரம் வீணே கழிகிறது ; நீதிபதியே ! தீர்ப்புக் கூறுங்கள்.

போர் :—அந்த வாணிப னுடைய தசையில் ஒரு இராத்தல் உனக்குரியது. சட்டம் அதனை அநுமதிக்கிறது ; சபை அங்ஙனமே தீர்ப்பளிக்கிறது.

ஷை :—பாரபக்ஷ மற்ற நீதிபதி !

போர் :—நீ அதனை அவனுடைய இருதயத்தின் சமீபத்தினின்றும் வெட்டியெடுத்துக் கொள்ளவேண்டும். சட்டம் அதனை விதிக்கிறது ; சபை தீர்க்கிறது.

ஷை :—மிக்க ஞானவா ன நீதிபதியே ! விதியுங்கள்.

போர் :—பொறு ; இந்தப் பத்திரம் ஒரு துளி இரத்தமேனும் அநுமதிக்க வில்லை ; இதில் கண்ட சொற்கள்

"ஒரு இராத்தல் தசை" என்பன மட்டும். ஆகவே அவ்வொரு இராத்தல் தசையையும் வெட்டி யெடுக்குங் காலை அவனுடைய இரத்தத்தின ஒரு துளியேனும் நீ வீண் போக்கினுல் கிறிஸ்தவனின் இரத்தத்தைச் சிந்தியதற்காக வெனிஸ் நகரத்தின் சட்டப்படி உன் வீடு, வாசல் முதலிய யாவும் பறிமுதல் செய்யப்படும்.

க்ரேஷியானே :—(பஸானியோ, அந்தோனியோ இவர்களுடைய நண்பன்). பாரபக்ஷ மற்ற நியாயாதிபதி, யூதா! தெரிந்ததா? கற்றறிந்தவர்.

ஷை :—அதுவா சட்டம்?

போர் :—சட்டத்தை நீயே படித்துப் பார்; நீ நியாயத்தையே விரும்புவதால் உனக்கு நீ விரும்புவதற்கு மேலும் நியாயந் தரப்படும்.

க்ரே :—மன்ருேரஞ் செய்யாத நீதிபதி, யூதா! தெரிந்ததா? கற்றறிந்தவர்.

ஷை :—முன் தருவதாகச் சொன்னபடி மூன்று மடங்கு பணத்தைத் தந்து விடுங்கள்.

பஸா :—இந்தா, பெற்றுக்கொள்.

போர் :—பொறு; யூதனுக்கு முழு நியாயமுந் தர வேண்டும். அவசரப்படாதே. அவனுக்குப் பத்திரத்திற் கண்ட அபராதத்தையன்றி வேறென்றுங் கிடையாது.

க்ரே :—இப்பொழுது தெரிந்ததா? யூதா! இந்த நியாயாதிபதி எத்துணை நேர்மை யுள்ளவரென்று.

போர் :—ஆகவே தசையை வெட்டி யெடுத்துக்கொள்; இரத்தத்தை ஒரு துளியேனுஞ் சிந்தாதே; ஒரு இராத்தல்

தசைக்குக் கூட்டியேனும், குறைந்தேனும் வெட்டாதே. ஒரு இராத்தலுக்கு அதிக மிருப்பினுஞ் சரி, குறையினுஞ் சரி உன் உடைமைகள் யாவும் பறிமுதல் செய்யப்படும்.

க்ரே :—நியாயந் தீர்க்க வந்த இரண்டாவது தானியேல்.

போர் :—யூதா ! ஏன் ஆலோசிக்கிறாய் ; நீ விரும்பியபடியே தசையை வெட்டிக்கொள்.

ஷை :—முதலைக் கொடுங்கள்.

பஸா :—இந்தா பெற்றுக்கொள்.

போர் .—பொறு ; சபையில் அதைப் பெற மறுத்தவனுக்கு அபராதப் பொருள்களுக்கு மாத்திரமே உரிமையுண்டு.

ஷை :—முதலாவது கொடுக்கமாட்டீர்கள் ?

போர் :—அபராதப் பொருளை யன்றி வேறொன்றும் கிடையாது.

ஷை :—பேயே அவனுக்கு உதவி செய்யட்டும். நான் செல்கிறேன்.

போர் :—யூதா ! பொறு ; இன்னு மொன் றுள்ளது ; சட்டத்திற்கு நீ இன்னும் பதில் சொல்லி ஆகவேண்டும் ; வெனிஸ் நகரப் பிரஜைகளில் ஒருவனை அநியாயமாய்க் கொல்ல வழி தேடியதற்காக உன் பொருள்களிற் பாதியை அரசனுக்கும், பாதியை அந்தோனியோவுக்கும் சேர்த்துவிடும்படி சட்டம் கூறுகிறது. அவ்விதமே உன் பொருள்கள் பறிமுதல் செய்யப்படும்.

அந்தோனியோ, தனக்கு வந்த பொருள்களை ஷைலாக்கின் மகளாகிய ஜெஸிகாவிற் களித்தான். தமக்காகப் பேசி

விடுத்த நியாய வாதிக்குப் பரிசளிக்க விரும்பினன். அவர் பஸானியோ அணிந் திருந்த விர லாழியே யன்றி வேறொன் றும் பெற இசைய வில்லை. அவ் விரலாழி போர்ஷியா பஸானியோவுக்குக் கொடுத்தது. அவன் அதை யாருக்குங் கொடுப்ப தில்லை யென்று வாக்குச் செய்திருந்தான். எனினும் அவரிடம் நன்றி செலுத்த வேண்டி, அவருக்கு அதைக் கொடுத்தான். பின் நியாய வாதி தம் மிருப்பிடஞ் சென்றார்.

அந்தோனியோ, பஸானியோ முதலியோர் பெல் மாண்டிற்குச் சென்றனர். போர்ஷியா அவர்களுக்கு முகமன் கூறி விருந்து செய்தாள். அன்று தன் நாயகன் கையில் தானிட்ட ஆழியைக் காணாது, அவனோடு அது காரணமாக ஊடினாள். பின் கோபந் தணிந்து அவனுக்கு அருந்தப் பானம் அளித்தாள். பானம் வார்த் திருந்த கோப்பையின் அடியில், பஸானியோ நியாய வாதிக் களித்த மோதிரம் இருந்தது.

பின் போர்ஷியா உற்ற துரைத்தாள். எல்லோரும் அவள் திறமையை வியந்து இன்பக் கடலுள் ஆழ்ந்தனர். அச்சமயம் அந்தோனியோவின் கப்பல்கள் நாடடைந்தன என்ற செய்தியும் வந்தது.

28. ரேடியோ என்னும் ஒலி பரப்பும் பொறி

நிகழும் 20-வது நூற்றாண்டில் இப் பழமையான பூவுலகைப் புதுமை பெறச் செய்துள்ளது மின்சார சக்தியே யென்று கூறுவது மிகையாகாது. இச் சக்தியே, அனைவரும் வியக்குமாறு நாம் காணும் நவ நவ அற்புத அமைப்புகளுக்கு மூல காரண மாக விளங்குவது. மின்சாரம், உலகப்

போக்கையே மாற்றி, நவ நாகரிகத்தைப் பெருகச் செய்து, சமூக முன்னேற்றத்தை யோங்கச் செய்திருக்கிறது. அது காலத்தையும் தூரத்தையும் ஒருவாறு அழித்து விட்டதென்றே கூறலாம்.

அலாவுதீன், தான் எடுத்து வந்த அதிசய விளக்கைத் துடைத்ததும், அவன் ஏவிய அரிய காரியங்களையும் சாதிக்க வல்ல பெரும் பூதம் ஒன்று அதினின்று தோன்றிற் றென்பதைக் கதையாக நீங்கள் படித்திருக்கலாம். அது போல உண்மையில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அம்பர் என்னும் ஒரு விதப் பிசினைப் பட்டுத்துணியால் தேய்த்த பொழுது தற்செயலாய் இவ் வரிய மின்சார சக்தி முதன் முதலாக வெளியில் தெரிய வந்தது. ஆனல் பல நூற்றுண்டு களுக்குப் பிறகே அதன் அபார சக்திகளும், இரகசியங் களும் பரிசோதித் தறியப்பட்டுப் பல்லாயிரம் வகைகளில் அது தற்பொழுது உபயோக மாகிறது.

மின்சார சக்தியினுல் அமைக்கப்பட் டுள்ள மகா அற்புதங்களில் முதன்மையாயும், மிக்க நவீனமாயும், சிரோரத்தினம்போல் விளங்குவது ரேடியோ அல்லது ஒலி பரப்பும் பொறியாகும். சென்னைப் பட்டினத்தில் நகர பரிபாலன சபையார், தமது காரியாலயத்தில், ஒரு 'ரேடியோ' அல்லது ஒலி பரப்பும் கருவியை அமைத்து, அதற் கருகில் சங்கீதக் கச்சேரி, மேளக் கச்சேரி, சொற் பொழிவுகள், இவைகளைப் பல வித்துவான்களால் நிகழ்த்த ஏற்பாடு செய்துளர். அங்கிருந்து வெகு தொலையில், திருவல்லிக்கேணிக் கடற்கரையில் அமைத்துள்ள ஒரு ஒலி வாங்கி விடும் ரேடியோ இயந்திரத்தின் வாயிலாக, மேற் கூறிய கச்சேரிகளையும், சொற் பொழிவுகளையும் அருகாமையில் நேரில் நடப்பவைபோல், அங்குக் கூடும் ஆயிரக்கணக்

கான ஜனங்கள் செவி மடுத்து மகிழ்கிருர்கள். முந்நூறு ரூபாய் கிரயத்திற் குட்பட்ட ரேடியோக் கருவிகளை வாங்கிப் பல தனவான்கள் தமது கிரகங்களிலும், வியாபாரிகள் தமது கடைகளிலும் அமைத்துக்கொண்டு, தாங்கள் இருக்குமிடத்திலேயே மேற்படி கச்சேரிகளைக் கேட்டு இன்புறுகிருர்கள். வெகு தொலையில் நடைபெறும் சொற்பொழிவுகள், கண்ணிற்குப் புலப்படும் கம்பி முதலிய எவ்வித சம்பந்தமு மின்றி மற்ருே ரிடத்தில் ஆகாச வாணியைப் போல் காதில் விழுவது ஜால வித்தைபோல மிக்க ஆச்சரியமான தல்லவா?

தந்தித் தபாலில், கம்பிகள் வழியாய் மின்சாரத்தைச் செலுத்தி, ஒரு பொறியில் உண்டாக்கும் ஒலிக் குறிப்புக்களைத் தொலையில் உள்ள மற்ருெரு பொறியில் வெளியாக்கிச் சில சங்கேதங்கள் மூலமாகச் சமாசாரங்களை மனோ வேகமாக அனுப்புகிருேம். தூர சம்பாஷணைக் கருவியில் கம்பிகள் மூலமாக மின்சார உதவியால் வெகு தொலையில் உள்ளோர்களுடன் அருகிலிருந்து நேரில் பேசுவதுபோல் குரல் மூலமாகச் சமாசாரங்களைத் தெரிவிக்கிருேம். வயர்லெஸ் என்னும் கம்பி யில்லாத் தந்தித் தபாலில், இடையில் கம்பி முதலிய எவ்வித சம்பந்தமு மில்லாமல் ஓரிடத்தி லிருந்து மற்ருே ரிடத்திற்குச் சில சங்கேதங்கள் மூலமாகச் சமாசாரங்களை அனுப்புகிருேம். மின்சார ரேடியோ என்பதில் பேசும் மொழிகளையே இடையில் எவ்விதக் கம்பியு மில்லாமல் வெகு தூரத்திற் கப்பால் கேட்கும்படி செய்கிருேம். இது விந்தையினும் விந்தையே!

ரேடியோக் கருவிகள் தலைப்பட்டுச் சிறிது காலமே ஆயினும், வெகு சீக்கிரத்தில் நித்தியப்படி வாழ்க்கையில் சர்வ சாதாரண உபயோகத்திற்கு அவை வந்துள்ளது மிக்க

ஆச்சரியமே. ஓடும் படக்காட்சி, பேசும் படக்காட்சி, கிராம போன் முதலியவைகளைப் போல ரேடியோப் பொறிகளும் மக்களது உல்லாசத்திற்கும், பொழுது போக்கிற்கும், உதவியாகிச் சர்வஜன மகிழ்ச்சிக்குக் காரணமாக உள. ரேடியோவின் உபயோகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. அதன் மூலமாகச் சங்கீதக் கச்சேரிகள், வாத்தியக் கச்சேரிகள், சொற் பொழிவுகள், சீதோஷ்ண நிலைமை எச்சரிக்கைகள், தினசரி விலைவாசிகள், உலக வர்த்தமானங்கள், சிறுவர்க் கான கதைகள், பந்தய விளையாட்டுகளின் வெற்றி, சமாசாரங்கள், இராஜியப் பிரசங்கங்கள் முதலிய இவைகள் வெகு தொலையி லுள்ளோருக்கும், அதே நிமிஷத்தில் தெரிவிக்கப்படுகின்றன. இவைகள் நிகழும் தேதியையும், நேரத்தையும், முன்னதாகவே அறிவிக்கும் விளம்பரங்கள், தினசரிப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்யப்படுகின்றன. இக்கருவிகளைத் தமது வாசத் தலங்களில் வாங்கி வைத்துள்ளவர்கள், அப் பத்திரிகையைப் பார்த்து எந் தெந்த வேளையில் எந் தெந்த விஷயத்தைச் செவி யுறலா மென்று அறிந்து கொள்ளுகிறார்கள். தற்காலத்தில் ஒரு கோடி ரேடியோப் பொறிகளுக்குமேல் அமைக்கப்பட்டு உலகமெங்கும் உபயோகிக்கப்படுகின்றன. இங்கிலாந்தில் மன்னர் பிரானும், மந்திரியும் நிகழ்த்தும் சிறப்பான சொற் பொழிவுகள் ஒலி பரப்பும் கருவிகளால் உலக முழுமையும் அறிவிக்கப்பட்டு, ஆங்காங்குள்ளவர்கள் அதே நேரத்தில் நேரில் பேசுவதுபோல் கேட்டறிகிறார்கள். நடு ஆகாயத்தில் பறக்கும் விமானங்களில் உள்ளவர்களுக்கும், சமுத்திர மத்தியில் கப்பல் பிரயாணம் செய்வோருக்கும், ரேடியோ மூலமாக உலக வர்த்தமானங்கள் உடனுக் குடன் தெரிவிக்கப்படுகின்றன.

ரேடியோக் கருவிகளின் அமைப்பையும், அவை இயங்கும் விதத்தையும், இங்கு விளக்குவது எளிதன்று. அவைகளை மேல் வகுப்புக்களில்தான் கற்றறியலாம். ஆனால் அதன் மூல தத்துவத்தை ஒரு உதாரணத்தால் விளக்கலாம். இடையில் கம்பி முதலிய கண்ணுக்குப் புலப்படும் சம்பந்த மில்லாமலே, ஓரிடத்தில் நிகழும் பேச்சை வெகு தூர இடங்களிலும் திரும்ப நிகழ்விப்பதே ரேடியோவின் மர்மம். ஒரு தடாகத் தண்ணீரில் ஒரு சிறு கல்லைப் போட்டால் அலைகள் உண்டாகி நாலா பக்கமும் வட்டங்களாகப் பரவி வெகுதூரம் செல்வதைக் காண்கிறோம். அவ் விடங்களில் மிதக்கும் இலை முதலியன அலைகளால் மோதப்பட்டு வெகுதூரம் கொண்டுபோய்ச் சேர்க்கப்படுகின்றன. தடாகத் தண்ணீரைப்போல் அதி நுட்பமாய்க் கண்ணுக்குப் புலப்படாத பரமாகாயம் எங்கும் நிறைந்து வியாபித்திருக்கிறது. ரேடியோ பொறியில் பேசப்படும் ஒலிகள் பரமாகாயத்தில் மின்சார அலைகளை உண்டாக்குகின்றன. அவ் வலைகள் மனோவேகமாகப் பரவித் தூரத்தி லுள்ள மற்றொரு ரேடியோப் பொறியைத் தாக்குவதால் முதலில் உண்டாகிய ஒலிகள் அங்கு மறுபடியும் ஏற்படுகின்றன. ஆதலால் ரேடியோ கருவியில் இரண்டு விதப் பாகங்கள் தேவை. பேசுவோரது ஒலியை வாங்கிப் பரமாகாயத்தில் மின்சார உதவியால் பரப்பும் பொறி ஒன்று; அவ் வொலிகளை மறுபடி வாங்கி வெளிவிடும் தூரத்திலுள்ள பொறி மற்றொன்று. முந்திய பாகம் பொதுவாக ஓரிடத்தில் அமைத்து வைக்கப்படும். பிந்திய அமைப்பை நாம் விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டால் ரேடியோ சமாசாரங்களைச் செவியுற் றறியலாம்.

இனி வருங் காலத்தில் ரேடியோ இயந்திரங்கள் மூலமாகப் பல அரிய செயல்கள் கைகூடு மென்று கருதப்

படுகிறது. கப்பல்களையும், நீர் மூழ்கும் படகுகளையும், ஆகாய விமானங்களையும், மோட்டார், டிராம் முதலிய வண்டிகளையும், அவைகளை ஓட்டுவோரின்றி, வெகு தூரத்தில் அமைக்கப்பட்ட ரேடியோ இயந்திரங்கள் மூலமாகவே செலுத்துதல் கூடும். ஏனென்றால், அவைகளை அடக்கியாளும் மர்மமும், ரேடியோவின் மூல தத்துவமும், ஒரு தன்மையானதே. அவ்விதமான பரிசோதனைகள் நிபுணர்களால் செய்யப்பட்டுவருகின்றன. அவைகள் இனிது கைகூடின் யுத்த காலங்களில் வெகு தொலைவிலிருந்து செலுத்தப்படும் மாலுமிகள் இல்லாத ஆகாய விமானங்களையும், கப்பல்களையும் உபயோகிக்க இயலும்.

I. நன்னெறி

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும் [சுவை
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்—துன்று
பூவிற் பொலிகுழலாய்! பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து. 1

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி (து) ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால்! ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு. 2

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 3

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம். 4

காதன் மனையாளுங் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமஞ் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய்!
நோக்கல் தான்
கண்ணிரண்டும் ஒன்றையே காண். 5

கடலே யனையம்யாங் கல்வியா லென்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். 6

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. 7

மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவில்—ட்லியேல்
கடவுள் அவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து. 8

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமே நின்று. 9

பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம்—துப்பிற்
சுழற்றுங் கொல் கற்றூணைச் சூறா வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் துரும்பு. 10

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோம் என்று
தலையா யவர்செருக்குச் சார்தல்—இலையால்
இரைக்கும்வண் டூதுமலர் ஈர்ங் கோதாய்! மேரு
வரைக்கும் வந்தன்று வளைவு. 11

இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யும்—நல்லாய்!
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. 12

தம்மையுந் தங்கள் தலைமையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினுஞ் செல்வர் இடர்தீர்ப்பர் அல்கு
கழியினுஞ் செல்லாதோ கடல். 13

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ—பைந்தொடீ!
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்றும் உதவுங் கனி. 14

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய்! பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல். 15

நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ
யல்லோர் வரவா னழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர. 16

பெரியவர்தம் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவரென்க—தெரியிழாய்!
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 17

எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம்—எழுத்தறிவார்
ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை. 18

ஆக்கும் அறிவான் அலது பிறப்பினுன்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு. 19

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்க்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி. 20

கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகனம் நண்ணாரே—வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய்! நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள். 21

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்!
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றோ விளம்பு. 22

கைம்மா றுகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர்—அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. 23

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினும் ஆகுங் கதலிதான் எட்டிபழுத்
தாயினும் ஆமோ அறை. 24

உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோர்
அடுக்கு மொருகோடி யாக—நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியாய்! அஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான். 25

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் (து) உய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு. 26

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது. 27

பன்னும் பனுவல் பயன்தேர் அறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே—நன்னுதால் !
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான். 28

எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குரியர்
விள்ளா வறிஞரது வேண்டாரே— தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல். 29

அறிவுடையா ரன்றி யதுபெறார் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும்—பிறைநுதால் !
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு. 30

தக்கார்க்கே ஈவர் தகார்க்க ளிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோர்—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிரைப்பரோ போய். 31

கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
யுற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே—பொற்றொடீ !
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
அன்றே மணமுடைய தாம். 32

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தா மற்றெவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே ! யதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண். 33

II. நான்மணிக் கடிகை

நிலத்துக் கணிஎன்ப நெல்லும் கரும்பும் ;
குளத்துக் கணிஎன்ப தாமரை ; பெண்மை
நலத்துக் கணிஎன்ப நாணம் ; தனக்கணி
தான்செல் உலகத் தறம். 1

மனைக்குப்பாழ் வாணுதல் இன்மை ; தான்செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை ; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு. 2

கோல்நோக்கி வாழும் குடியெல்லாம்; தாய்தரும்
பால்நோக்கி வாழும் குழவிகள் ;—வானத்
துளிநோக்கி வாழும் உலகம் ; உலகின்
விளிநோக்கி இன்புறூஉம் கூற்று. 3

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை ; கொண்டானின்
துன்னிய கேளிர் பிறர்இல்லை ;—மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருள்இல்லை ; ஈன்றாளின்
என்ன கடவுளும் இல். 4

நல்லார்க்கும் தம்மூர்என் றூர்இல்லை ; நன்னெறிச்
செல்வார்க்கும் தம்மூர்என் றூர்இல்லை ;—அல்லாக்
கடைகட்கும் தம்மூர்என் றூர்இல்லை ; தம்கைத்
துடையார்க்கும் எவ்வூரும் ஊர். 5

கல்லா ஒருவர்க்குத் தம் வாயிற் சொல் கூற்றம் ;
மெல்லிலை வாழைக்குத் தான்ஈன்ற காய்கூற்றம் ;
அல்லவை செய்வார்க் கறம்கூற்றம் ; கூற்றமே
இல்லத்துத் தீங்கொழுகு வாள். 6

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் ;
வளமில்லாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம் ;
கிளைஞர்இல் போழ்தில் சினம் குற்றம் ; குற்றம்
தமரல்லார் கையகத் தூண். 7

திரியழற் காணின் தொழுப ; விறகின்
எரியழற் காணின் இகழ்ப;—ஒரு குடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமைபா ராட்டும் உலகு. 8

கன்றாமை வேண்டும் கடிய ; பிறர்செய்த
நன்றியைக் கொல்லாக் கொளல்வேண்டும் ;—என்றும்
விடல்வேண்டுந் தன்கண் வெகுளி ; அடல் வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை. 9

III. நீதி வெண்பா

தாமரைபொன் முத்து சாமரைகோ ரோசனைபால்
பூமருதேன் பட்டு புனுகுசவ்வா—தாமழன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலு மென். 1

அரிமந் திரம்புகுந்தா லானை மருப்பும்
பெருகொளிசேர் முத்தும் பெறலாம்—நரிநுழையில்
வாலுஞ் சிறிய மயிரெலும்புங் கர்த்தபத்தின்
தோலுமல்லாமல் வேறுமுண்டோ சொல். 2

வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான். 3

ஆனைமருப்பும் அருங்கவரி மான்மயிருங்
கான வரியுகிருங் கற்றோரு—மானே !
பிறந்தவிடத் தன்றிப் பிறிதொருதே சத்தே
செறிந்தவிடத் தன்றோ சிறப்பு. 4

சிற்றுணர்வோர் என்றுஞ் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்று மொழியாரே-வெற்றிபெறும்
வெண்கலத்தி னோசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி லுண்டோ வொலி. 5

செய்யில் ஒருகருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செய்யின் மனத்தாபம் சேரும்ம—ஐயதன்
நற்குடியைக்காத்த நகுலனைமுன் கொன்றமறைப்
பொற்கொடியைச் சேர்துயரம் போல். 6

இன்னல் தரும்பொருளை யீட்டுதலும் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—அன்ன (து)
அழித்தலுந் துன்பமே யந்தோ ! பிறர்பால்
இழத்தலும் துன்பமே யாம். 7

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் என்றிவரோ
டின்புறத்தா னுண்டல் இனிதாமே—அன்புறவே (டு)
தக்கவரை இன்றித் தனித்துண்டல் தான்கவர்மீன்
கொக்கருந்த லென்றே குறி. 8

கண்ணிரண்டே யாவர்க்குங் கற்றோர்க்கு மூன்றுவிழி
எண்ணும்விழி யேழாகும் ஈவோர்க்கு—நண்ணும்
அநந்தந் தவத்தா லருள்ஞானம் பெற்றோர்க் (கு)
அநந்தம் விழியென் றறி. 9

கர்ப்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கர்ப்பூர மாமோ கடலுப்பு—பொற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல். 10

IV. இன்னா நாற்பது

ஆற்றல் இலாதான் பிடித்த படைஇன்னா
நாற்றம் இலாத மலரின் அழகின்னா
தோற்றம் இலாதான் துணிவின்னா ஆங்கின்னா
மாற்றம் அறியான் உரை. 1

பகல்போலும் நெஞ்சத்தார் பண்பின்மை இன்னா
நகைஆய நண்பினார் நார்இன்மை இன்னா
இகலின் எழுந்தவர் ஓட்டின்னா இன்னா
நயம்இல் மனத்தவர் நட்பு. 2

பொருள் உணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா
இருள்கூர் சிறுநெறித் தாம்தனிப் போக்கின்னா
அருளிலார் தம்கண் செலவின்னா இன்னா
பொருள்இல்லார் வண்மை புரிவு. 3

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனிஇன்னா
கண்ணில் ஒருவன் வனப்பின்னா ஆங்கின்னா
எண்இலான் செய்யும் கணக்கு. 4

ஆன்றவிந்த சான்றோருள் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா
நோன்றவிந்து வாழாதார் நோன்பின்னா ஆங்கின்னா
ஈன்றாளை ஓம்பா விடல். 5

V. தனிப் பாடல்கள்

குறிப்பறிதல்

மனத்திற் கடும்பகை முகத்தினா லறியலாம்.
மாநிலப் பூடுகளெலாம்
மழையினாலறியலாம். நல்லார் பொலார்தமை
மக்களா லறியலாகும்.

கனமருவு சூரரைச் சமரினலறியலாம்.
கற்றவொரு வித்துவானைக்
கல்விப்பிர சங்கத்தி னலறியலாம். குணங்
களை நடையி னலறியலாம்.

தனதக மடுத்தது பளிங்கின லறியலாம்.
சாதி சொல் லாலறியலாம்.
தருநீதி கேள்வியா லறியலாம். பிணிகளைத்
தாதுக்க ளாலறியலாம்.

வன்சவிக் சிதவதன பரிபூர ஞானந்த
வாலவடி வானவேலா !
மயிலேறி விளையாடுகுகனே ! புல் வயனீடு
மலைமேவு குமரேசனே ! —குமரேச சதகம்.

ஏகவிருத்த ராமாயணம்

தாதையார் சொல ராமன் காடுபோதல்
சார்ந்துளபொன் மானென்னு மாரீசன் சாதல்
சீதையார்பிரி வெருவை மரணம் பானு
சேயொடு நட் புக்கோடல் வாலிவீடல்

ஓதநீர்க் கடற்பரப்பை அநுமன் தாண்டல்
உயரிலங்கை நகரெரியால் வேகக்காண்டல்
பாதகராம் அரக்கரெலாம் இறக்கத் தாக்கல்
பாக்கிய ராமாயண சீர்க்காதை யீதே.

ஏகவிருத்த பாரதம்

ஐவர் நூற்றுவர்கள் தோற்றம், அரக்கு மாளிகையும் வேதல்,
கைவரு சூதிற் றோல்வி, கானகம் செலவு, விராடன்
தெய்வநல்வீட்டில் வாழ்கை, திகழ்நிரை மீட்டல், போர்க்கு
மெய்வெளிதூது, நூறு வீரர்சா வைவர் வாழ்வே.

கொடியது

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது;
அதனினுங் கொடிது இளமையில் வறுமை;
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்;
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்;
அதனினுங் கொடிது
இன்புற அவர்கையில் உண்பது தானே.

கல்விச் செருக்கு

கற்றதுகைம் மண்ணளவு கல்லாதுலகளவென (று)
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்!
எறும்புந்தன் கையால்எண் சாண். —ஔவையார்.

துன்பத்தின்மேல் துன்பம்

ஆவீன, மழை பொழிய, இல்லம் வீழ,
அகத்தடியாள் மெய்ந்நோவ, அடிமை சாவ,
மாவீரம் போகுதென்று விதை கொண்டோட,
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள,
சாவோலை கொண்டொருவன் எதிரே செல்ல,
தள்ளவொண்ணா விருந்துவரச், சாப்பந் தீண்டக்,
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கக்,
குருக்களோ தக்கணைகள் கொடுவென்றாரே.

—ராமசந்திரக் கவிராயர்.

செயற்கையறிவும், இயற்கையறிவும்

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம். —ஔவையார்.

77522

Printed at the Royal Printing Works, Mount Road, Madras.

38
2.100

திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L.

அவர்கள் இயற்றிய

கோகலே 6, 7, 8 வாசகங்களுக்குத்

துணைப் புத்தகங்கள்

(அநுபவம் முதிர்ந்த தமிழ்ப் பண்டிதர்களால் இயற்றப்பட்டன)

இத் துணைப் புத்தகங்கள், மாணாக்கரது சுய முயற்சியை ஊக்கி, அவர்களை ஆய்ந்தோர்ந்து ஆலோசிக்கச் செய்யும் அப்பியாசங்களை யுடையன. மேலும் வசன பாடங்களில் விஷய வினாக்களும், அரும் பதவுரையும், செய்யுட்களுக்குப் பதவுரை, கருத்துரையும், அபிதானம் இலக்கணம் முதலிய விசேஷக் குறிப்புகளும் இவைகளில் காணப்பெறும். இப் புத்தகங்கள் மாணாக்கர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பெருந் துணை புரியுமென்பது திண்ணம்.

1.	கோகலே	6-ம்	வாசக துணைப் புத்தகம்	அணா	4
2.	,,	7-ம்	,,	,,	4
3.	,,	8-ம்	,,	,,	4

V. S. வெங்கடராமன் கம்பெனி,
பப்ளிஷர்ஸ், கும்பகோணம்.